# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ. பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.








புத்தகம் 19 | திருவள்ளுவர் ஆண்டு 1996 ஆனித் திங்கள் 20-ம் நாள் (4—7—1965) ஞாயிற்றுக்கிழமை ரபி.அவ் 4 | இதழ் 6


# பதவி துறப்பு நடை பெறுமா?

## தேர்தல் வாக்குறுதி காப்பாற்றப்படுமா?

## பொ. கட்சியின் முடிவை மக்கள் எதிர்பார்க்கிறார்கள்

(நமது விசேட நிருபர்)

யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும், அவர் குழுவைச் சேர்ந்த வவுனியாத் தொகுதி பா. உ. திரு. டி. சிவசிதம்பரம், உடுப்பிட்டித் தொகுதி பா. உ. திரு. மு. சிவசிதம்பரம் ஆகியோர் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்பார்களா என்ற கேள்வி கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரவலாகக் கேட்கப்படுகிறது.

கடந்த பாராளுமன்றத் தேர்தற் காலங்களில் திரு. பொன்னம்பலமும் அவர் குழுவினரும் மூன்று மாதங்களில் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கத் தவறினால் தமது பா. உ. பதவிகளைத் துறப்பதாகக் கூறியதே இதற்குக் காரணமாகும்.

கொழும்பு வாழ் தமிழ் இளைஞர்கள் பலர் திரு. பொன்னம்பலத்தை 'எப்பொழுது பதவியைத் துறக்கிறீர்கள்' என்று கடந்த மாதம் 21-ம் திகதி முதல் கடித மூலமாகவும் நேரிலும் கேட்டு வருகிறார்களாம்.

கடந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் தாம் பா. உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டால் எதையெதைச் சாதிப்போம் என்பதை வாக்காளர்களுக்கு தெளிவாக எடுத்துக் கூறியிருந்தார்கள். அதே போன்று தமிழ்ப்பகுதிகளில் போட்டியிட்ட வேட்பாளர்களும் சில வேலைத்திட்டங்களைப் பொது மக்கள் முன் வைத்தார்கள். இவர்களுள் பொன்னம்பலம் கட்சியில் போட்டியிட்டவர்கள், தாங்கள் பா. உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டால், பொதுத்தேர்தல் முடிந்து மூன்று மாத காலங்களுள் இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் இழந்த உரிமைகள் அனைத்தையும் பெற்றுத்தருவதாகவும், தவறினால் பா.உ. பதவியைத் துறப்பதாகவும் வாக்காளர்களுக்கு உறுதி கூறியிருந்தார்கள்.

இப்பொழுதுபொதுத்தேர்தல் முடிந்து முற்றாக மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. நிலைமை தமிழ் பேசும் மக்களுக்குச் சாதகமானதாக இருந்த போதிலும், தமிழ் பேசும் மக்கள் தங்கள் இழந்த உரிமைகள் அனைத்தையும் பெற்றுவிட்டார்கள் என்று கூறமுடியாது. இன்றைய சாதகமான நிலை உருவாகியமைக்குப் பொன்னம்பலம் கட்சியினர் காரணமுமல்ல. ஆகவே தான், திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும், அவர் குழுவைச்சேர்ந்த மற்றும் இருவரும் பதவி துறப்பார்களா என்று கேட்கப்படுகிறது.

யூன் 21ம் திகதியுடன் பொதுத் தேர்தல் முடிந்து மூன்று மாதங்கள் கடந்துவிட்டமையால் எந்தநேரத்திலும் இவர்கள் மூவரும் பதவியை உதறித் தள்ளிவிட்டு, வெளியே வரலாமென்று பொது மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

## பிரச்சினைக்கு இலக்காகும் தனிச் சிங்களப் பத்திரம்

நாட்டின் பெரும்பாலான இடங்களில் திருமணப் பதிவுப் பத்திரங்கள் தனிச்சிங்கள மொழியில் மட்டும் இருப்பதால் எதிர்காலத்தில் பல சட்டப்பிரச்சினைகள் தோன்றலாம் என்று கொழும்பைச் சேர்ந்த பிரபல வழக்கறிஞர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

மணமக்கள் தமக்குப் புரிந்த மொழியில் உள்ள பத்திரங்களில் மட்டுமே ஒப்பமிட வேண்டுமாம். அப்படியில்லாத, அவர்களுக்குப் புரியாத மொழியிலுள்ள பத்திரங்களை வெளியார் உதவியுடன் தெரிந்தமொழியில் நிரப்பி ஒப்பமிட்டாலும் அது சட்டப் பிரச்சினைக்கு இடமாகும் என்று அவ்வழக்கறிஞர் விளக்கியுள்ளார்.

இப்படியான, தனிச்சிங்கள மொழியில் உள்ள திருமணப்பதிவுப் பத்திரங்களில் ஒப்பமிட்ட-சிங்களம் தெரியாத குடும்பங்களுக்குள் பிளவு ஏற்பட்டு பராமரிப்புக்கோரி பெண்பகுதியினர் வழக்குத் தாக்கல் செய்தால், இத்திருமணப்பதிவு செல்லுபடியாகாது என்று வாதிட்டு விவாகரத்துச் செய்து கொள்ள ஆண்களுக்கு வாய்ப்பு இருப்பதாகவும்; கணவன்மாரின் ஓய்வுச் சம்பளத்தைப் பெறுவதில் சட்டப் பிரச்சினை எழுப்பப்பட்டால் சிக்கல் ஏற்படலாம் என்றும் இவ்வழக்கறிஞர் மேலும்விளக்கியுள்ளார்.

சிங்கள மொழியில் மட்டுமுள்ள பத்திரங்களில் திருமணப்பதிவு செய்து கொள்வதால் பெண் வீட்டாரே பாதிக்கப்படுவார்கள் என்றும், இவ்விடயத்தில் பெண்ணைப் பெற்ற தாய் தந்தையர்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் அவ்வழக்கறிஞர் எச்சரித்துள்ளார்.

### அடுத்த இதழில்

**மீலாத் மலர் இடம் பெறும்**

- அல்ஹாஜ் எ. எம். ஏ. அசீஸ்
- எம். பி. எம். மாகிர்
- யூ. எல். ஏ. மஜீத்

ஆகியோர் எழுதுகிறார்கள்.

காங்கேசன்துறை

## துறைமுகத் திட்டத்துக்கு வெளிநாட்டு உதவி

காங்கேசன்துறை துறைமுக நிர்மாண வேலைக்கான செலவினங்களின் மதிப்பீடுகள் வெளி நாடுகளிலிருந்து கோரப்பட விருப்பதாகவும், இத் திட்டத்திற்கு வெளி நாடுகளின் உதவிகள் கிடைக்குமென்றும் தேசியமய சேவைகளின் அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசா தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகத்திற்கு அறிவித்துள்ளார்.

1947 ம்ஆண்டு முதல் தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் காங்கேசன்துறைத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படவேண்டுமென அவ்வப்போதைய அரசாங்கங்களை வற்புறுத்தி வந்துள்ளார்.

1947-48, 1948-49ம் வருட வரவு செலவுத் திட்ட விவாதங்களின் போது இத்திட்டம் பற்றி விரிவாகவும் எடுத்து விளக்கியுள்ளார்.

காங்கேசன்துறைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்

(9-ம் பக்கம் பார்க்க)


## அழகு மேனிக்கு ஆசைப்படாதார் யார்?

அப்படியெனில்

வனப்பும், வசீகரமும், வாளிப்பான உடற்கட்டும் பெற்றிட—கண்டோர் மெய் மறக்கும் எழில் மேனியை அடைந்திட—அதன் மூலம் களிப்பேருவகை கொண்டிட இன்றே பாவியுங்கள்.

## "சருமலங்கார சஞ்சீவி தைலம்"

(புராண இதிகாச சுவடிகளிலுள்ள அழகு லாவண்ய இரகசியங்கள் புகுத்தப்பட்டது)

நீங்கள் செய்ய வேண்டியதென்ன?

தண்ணீரிலோ அல்லது வெந்நீரிலோ குளிப்பதற்கு சற்றுமுன் இத் தைலத்தை உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால்வரை நன்கு தேய்த்து வழக்கம் போல் குளித்து வாருங்கள்.

பலன்.. ...!?

சருமலங்கார சஞ்சீவித் தைலத்தை தினசரி தேய்த்து குளித்து வருங்கால், உடல் துர் நாற்றம், வியர்வை மணம் நீங்கப் பெறுவதோடு, உடலில் உள்ள சொறி, சிரங்கு, ஊறல், தேமல், படை, வெடிப்பு, குஷ்டம் உட்பட சகலவிதமான சரும ரோகங்களும் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்துவிடும். மேனி பளபளப்பாகவும், பார்ப்போர் கண்களுக்கு அழகாகவும், சந்தன மணம் சதா வீசிக்கொண்டும் இருக்கும்.

**ஆடவரும் பெண்டிரும் சிறியோரும் பெரியோரும் பாவிக்கலாம்**

**விலை ரூ. 10.00**

பாவனை விபரங்கள் போத்தலின் மீதுள்ள லேபலில் அச்சிடப்பட்டுள்ளது.

தயாரிப்பாளர்:

**கருணாவதி திசாநாயக்க,**

208, கண்டி ரோட், கம்பளை.

(போன் : 454)

குறிப்பு : மேற்படித் தைலம் வியாபாரிகளிடத்திலோ அல்லது வேறெங்குமோ விற்பனைக்குக் கிடைக்காது. இத்தைலத்தைப் பிரச்சாரஞ் செய்யவோ, விற்பனை செய்யவோ எவரும் நியமிக்கப்படவில்லை. வி. பி. பி. மூலமும், நேரிலும் மட்டுமே பெற்றுக் கொள்ளலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அங்கமெல்லாம் நிறைஞ்ச மச்சான்

ஏ.பி.வி. கோமஸ்

அந்த ஒலிக்குச் சொந்தக்காரர் வருவேயாருமல்ல; அவர்களைப் பின் தொடர்ந்து வந்து ஒளிந்திருந்த அந்தக் கண்டாக்கையா தான்; லச்சுமி யாரைப் பற்றிச் சொன்னுளோ அந்தக் கண்டாக்கையா தான்.

அடிமேல் அடியெடுத்து மெல்ல எவத்துப் பூனை போல் வந்தார் அவர். இருவருமே கண்டார்கள். ஏன் அவ்வளவு அளந்தெடுத்து வைத்த அடியுடன் வர வேண்டும். ஆம். கோபம் தான் காரணம். ஏதோ வெட்டி வீழ்த்தப் போகிறவர்போல் வந்தார் அவர். இருவருமே பயந்து போனுர்கள். பேச்சு மூச்சு இல்லை... 'சீ...பற...வே' என்று தொடங்கினுர். கருப்பண்ணனின் கண்கள் சிவந்தன. கண்டக்டரின் கண்கள் கொவ்வைப் பழங்களாயின. என்ன விபரீதம்–நடக்கப் போகிறதோ என்று நடுங்கினுள் லச்சுமி.

லச்சுமி நினைத்ததுபோல் விபரீதம் ஒன்றும் நடைபெறவில்லை. லச்சுமி அருகில் வந்தவர் ஒன்றும் பேசவும் இல்லை. அவளை, கண்கொட்டாமல் கொஞ்ச நேரம் பார்த்துக்கொண்டிருந்தார். பின் கருப்பண்ணனையும் பார்த்தார். மௌனமே சாதித்தார். ஏதோ ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்தவர் போல் காணப்பட்டார். இப்பொழுதுதான் பேசினுர். உம். நடங்கள். என்னிடம் ஒன்றும் பேசவேண்டிய தில்லை. நடங்கள் தொரபங்களாவுக்கு...உம்...உம்என்று அதட்டினுர். சரி சரி. மொதல்ல நடங்கள் சின்னதொரகிட்ட. அவர்தான் ஒங்களுக் குநல்லது என்று சொல்லிக்கொண்ட, அவர்களை அந்தத் தோட்டத்தின் சின்ன துரையாகிய திரு. ரொபின்சனிடம் அழைத்துச் சென்றுர். ஏனென்ருல், மிஸ்டர் ரொபின்சன்தான் அவருக்கு நன்ருக அறிமுகமானவர். அல்லாமலும் அவர்கள் இருவரும் சேர்ந்து சில 'திருவிளையாடல்கள்' நடத்துவதாகவும் அந்தத் தோட்டத்தின் மக்கள் இரகசியமாகப் பேசிக்கொண்டிருந்தனர். ஆம். ஏழைகள், அப்பாவிகள் என்ருல் தானே அவர்களைப் பற்றிப் 'பப்ளிக்காய்' பேசுவர். பணக்காரன், அதிகாரம் பெற்றவன் என்ருல் எல்லாம் மூடுமந்திரமாகத்தான் இருக்கும்.

முடிவு? கருப்பண்ணன் உடனடியாக கொழும்புக்கு அனுப்பப்பட்டான். லச்சுமி கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டாள்.

நாட்கள் சில கடந்தன. வழமைபோல் லச்சுமி வேலைக்குச் சென்றுள். வழியில் தாங்கள் அன்பு பொங்கி வழிய ஆர்வத்துடன் கூடி நின்ற இடம் கண்டாள். மனதில் எழுந்த உணர்ச்சிகள் வார்த்தைகளாக வெளிவந்தன வாயிலிருந்து...

'பொடியன் நின்ன லெக்கு
கும்மாளம் போட்ட
லெக்கு
வாழைப்பழம் தின்ன
லெக்கு
பாழடஞ்சி
கெடக்குதடா'

ஆம். அவள் உள்ளம் என்னென்ன கனவுகள் கண்டனவோ. கனவுகள் போல் நடந்த அந்த நிகழ்ச்சிகள் இப்பொழுது ஒன்றன் பின் ஒன்ருக அவள் மனதில்படம் போல் வந்து மறைந்தன. கொழுந்து கிள்ளும் தளிர்க்கரங்கள் கொண்ட, கொடியிடையாளின் உள்ளமும் தளிர்போல்தான் இருந்தது. பிரிவு என்னும் வெப்பத்தால் அது வெந்து கரிந்தது. அவன் உருவம் அவள் மனதில் நிழலிட்டது.

'கட்டுறது வெள்ளை
வேட்டி
கையிலொரு உருலோக
நிக்ககிறது ரோட்டுத்
தொங்க, எனக்கு
நெருப்பா பிடிக்குமய்யா'

ஆம். அவள் பட்டபாடுகளையெல்லாம் நினைத்துப் பார்த்தாள். அவன் ரோட்டுத் தொங்கலில் இருந்து பார்க்கும்போதே அவள் மனம் நெருப்பாய்ப் பிடிக்குமே...இன்றைக்கு ... அதைவிட அதிகமான உஷ்ணம் வந்து வாட்டுகிறதே. பிரிவுத் தீ பொசுக்கித் தள்ளுகிறதே! உம். அவனுடன் ஒன்ருக இருந்து, இருவரும் தசையும் நகமும் போல இருந்தனர். இன்று அவர்களின் பெற்ருராலும் தோட்டத்து மக்களாலும், கண்டாக்கையாவாலும் பிரிக்கப்பட்டுவிட்டனர். பழைய பஞ்சாங்கம் அல்லவா பார்க்கிருர்கள் இவர்கள். கலந்த இரு உள்ளங்களை கைபிடிக்க விட மாட்டேன் என்கிருர்களே, என்று நினைத்தாள் அவள்...

'ஆத்துல ஊத்து நோண்டி
அவரும் நானும்
பல் விளக்கி
பல்லுகாவி போகு
முன்னே
பஞ்சாங்கம்
பார்க்கிருங்க'

எவ்வளவு அழகாக அந்த நிலையை எடுத்துரைக்கிருள் அவள். ஆம். அவர்கள் இப்பொழுதுதான் பல்விளக்கத் தொடங்கியிருந்தார்கள். அதுவும் ஆற்றுப் பக்கத்தில் ஊற்றுத் தோண்டி. ஆனல் அந்தப் பற்களில் உள்ள சறை போகுமுன்னமேயே பெற்ருரும் மற்ருரும் பஞ்சாங்கம் பார்க்கத் தொடங்கி விட்டார்கள். ஆமாம். அவர்கள் பழகிக் கொஞ்ச நாட்கள்தான் ஆகியிருந்தது. ஆனல் அதற்குள் பாவிகள் அவர்களைப் பிரித்துவிட்டனர். ஒட்டும் இரு உள்ளங்களை வெட்டி விட்டனர். இப்படி வெட்டி விட்டதில் ஆனந்தம் அதிகம் கொண்டவர் கண்டக்டர்தான். ஏன் தெரியுமா? அதுதான் லச்சுமியே உங்களிடம் சொல்லி வைத்தாளே. ஆம். கண்டக்கையாவுக்குத் தன்மேல் ஒரு கண்ணென்று அவள் சொல்லியது ஞாபகம் இருக்கிறது தானே?

லச்சுமியும் தன் எண்ணத்தில் பாரத்தைச் சுமந்து கொண்டு நடந்து வந்தாள். வந்தவள் ஒரு கணம் திகைத்து நின்றவள் போல் நின்றுவிட்டாள். ஏன்? ஆம். அந்த இடத்தைக் கண்டவுடன் அவள் மனம் துணுக்குற்றது. அந்த தொங்கலயம்தான் அது. எந்த இடம் என்று நான் சொல்ல வேண்டுமா என்ன? இதோ லச்சுமியின் மனமே சொல்கிறதே...

'மஞ்சக் குளிச்சது
பீலிக்கர
வந்து படுத்தது
தொங்கலயம்
கண்டு பிடிச்சது
கண்டாக்கையா
கைமாக போட்டது
சின்னதொர'

நடந்தவைகள் அவள் மனதில் படம் போல் பதிந்திருந்தன என்பதற்கு வேறு ஆதாரம் வேண்டுமா என்ன. அவள் பீலிக்கரையில் மஞ்சள் குளித்து மகிழ்ந்திருந்தது; அந்த நேரத்தில் தன் மேனியழகை கருப்பண்ணன் கண்டு ரசித்தது; அவனின் கூரிய கண்கள் வந்து அவள் [illegible] தனிமையில் அவர்கள் பேசிக்கொண்டிருக்க கண்டாக்கையா வந்து கையும் களவுமாகப் பிடித்தது; பின்சின்னதுரையிடம் இட்டுச் சென்றது; எல்லாமே அவள் மனதில் நிழற்படம்போல் வந்து மறைந்தன.

இப்படியான எண்ணங்கள் மனதில் பொங்க மங்கை அவளும் மெல்ல அடியெடுத்து வைத்து நடந்தாள். நடந்து சென்ற அவள் கண்டது அவள்மனதை இன்னும் நோகச் செய்தது. அங்கு ஒரு சோடி போகக் கண்டாள். அவர்கள் இருவருமே கூலியாட்கள். அவள் கொழுந்து கிள்ளும் மாரியாய்; அவன் கவ்வாத்துக்குப் போகும் மருதை. அவர்களைப்பற்றி ஏன் ஒருவரும் ஒன்றும் சொல்வதில்லை! ஆம். இரண்டு பேருக்கும் தரம் ஒன்றுதானே. அதனுலேயா? ஒரு வேளை யிருக்கலாம். மாரியாய் என்ன சொல்கிருள்...லச்சுமி கேட்கிருள். நாமும் ஏன் உற்றுக் கேட்கக் கூடாது. கேட்போமே...

'வானத்துல மீனிருக்க
மருதயில நானிருக்க
பேலத்துல நீயிருக்கு
சேருவது எக்காலம்'

அவள் ஏன் இப்படிச் சொல்கிருள். அவன் அவளை ஏமாற்றுகிருனு? லச்சுமியின் மனதிலேயும் ஏக்கம். கருப்பண்ணனும் இப்படித்தன்னை ஏமாற்றுவானே என்று எண்ணினுள் இப்பொழுது, அவள் நிலை அப்படித்தானே ஆகிவிட்டது. மாரியாயோ உவமையாகச் சொன்னுள். ஆனல் லச்சுமியின் வாழ்க்கையில் அது உண்மையாகவே நடந்தேறியிருக்கிறதே. என்ன செய்வாள்? கடவுள் எழுதி வைத்தது அவ்வளவுதான் போலும். லச்சுமியும் அப்படியே எண்ணத் தொடங்கினுள். வேறு எப்படி நினைப்பாள். அவர்கள் இன்பமும் துன்பமும் அந்த எளிமையான நம்பிக்கையில் தானே தங்கியிருந்தது. அப்படியாக நாம் கண்ட சோடியிலிருந்த பெண்ணுகிய மாரியாய் கேட்க மருதை என்னசொல்கிருன் பாருங்களேன். ஏன் லச்சுமியும்கேட்டுக்கொண்டு தானே நடந்து வருகிருள். அவன் அவள் கேட்ட அந்தக் கேள்விக்குச் சொன்ன பதில் இதுதான்...

'பேரிச்சம் பழமே
பெரிய இடத்துக் கிரீடமே
பேசலாமென்ருலும்
பெற்ற தாயி சத்துராதி'

ஆம். மாரியாய். நான் என்ன செய்யட்டும். எனக்கு உன்னைக் கல்யாணம் கட்டிக்கின்னும் என்னு கொள்ள ஆசைதான். ஆனல் நான் என்ன செய்யட்டும்? என் தாய் உன்னக் கட்டிக் கொள்ள வேண்டாம் என்று சொல்லுருளே. நீ எனக்குப் பேரிச்சம் பழம்தான்; பெரிய இடத்துக் கிரீடம் தான்... ஆனு...என்று இழுத்தான் அவன். அந்த மாரியாய் என்ன செய்வாள்! அவள் கண்கள் கலங்கின...

இதைப் பார்த்துக் கொண்டு வந்த லச்சுமி மனதிலும் ஒருவித அன்பு சுரந்தது அந்த மாரியாய் மேல். ஆம். இரண்டு பேரும் ஒரே தோணியில் இருந்ததாலோ என்னவோ இந்த இரக்கம் பிறந்தது. அடேயப்பா இந்தக் காதல் என்பது ஏழைகளிடமும், பணக்காரரிடமும் புகுந்து பண்ணுகிற திருவிளையாடல்கள் சொல்லுந்தரமன்று. ஏன்! கடவுளையே பிடித்தாட்டியதாகவும் கதைகள் உண்டே. கடவுளுக்கே அந்தக் கதியென்ருல் சாதாரண மனிதர்கள் எந்த மட்டுக்கு...என்று எண்ணிக் கொண்டே நடந்தாள் லச்சுமி. அவளுக்கு முன்னுல் சென்றவர்கள் என்னென்னவோ பேசிக்கொண்டு போனுர்கள்.

மனதில் அவனின் நினைவு மீண்டும் தலையெடுத்தது. தான், ஏன்தான் தன் தரத்துக்கு மேம்பட்ட ஒருவனை நேசித்தோம் என்று எண்ணத் தொடங்கினுள். அவளே அதுதனை மிக அழகாகக் கூறுகிருள்.

'உடல் கழுவ பீலிக்கரை
உயர்ந்த மலை தல்ல
தண்ணி
ஒரு நாள் குடிக்கப் போய்
ஊரெங்கும்
பேரெடுத்தேன்'

ஆம். கருப்பண்ணனை அடைய வேண்டி அவனுடன் பேசிப் பழகப் போய் அவளுக்கு வந்த வினையை வெகு நேர்த்தியாகக் கூறியிருக்கிருள் நோக்குங்களேன். இவ்வாறு அவள் தன் அன்புத் தோழியொருத்தியிடம் சொல்லிக் கொண்டிருக்கும்போது கேட்டது தோழியா! தன் மனமே அவள் தோழ்!

வேலைத்தளத்தில் வேலைகளை ஒழுங்காகத்தான் செய்து முடித்தாள். இப்பொழுதெல்லாம் அவனின் எண்ணம் அடிக்கடி வருவதில்லை. ஏதோ இருந்தோர் சமயம் அவ்வெண்ணம்-தலையெடுக்கும். ஆனல் வேலை மும்முரத்தில் அது மங்கி மறைந்து விடும். இப்பொழுது கங்காணிகூட கொஞ்சம் கண்டிப்பாகத்தான் இருந்தான். ஆனல் இந்தக் கண்டிப்பு கண்டக்டரின் போதனையின் பேரில் நடைபெற்றதென்பதை அவள் அறியமாட்டாள். ஒவ்வொரு நாளும் ஒழுங்காக வேலைக்கு வந்து, ஒழுங்காக வேலை செய்து யாருக்கும் தீங்கு வராமல் நடந்து வந்தாள். இந்நாட்களில்...நம் கதாநாயகன் கருப்பண்ணனுக்கு என்ன நடந்தது. கொழும்பு போய்ச் சேர்ந்தான். சரி. போனவன் பாடு. இதோ...

கொழும்பு மாநகரில் கொஞ்ச நாட்கள் அவன் அங்கும் இங்கும் அலைய வேண்டியதாயிற்று. கொழும்பில் என்ன வேலையா போட்டு வைத்திருக்கிருர்கள், இவன் போன்றவர்கள் போனவுடன்கொடுத்துவிட. கடைசியில், அவன் சுற்றித் திரிந்து ஒரு சிறு குடிசைக்கு முன்னுல் வந்து நாளும் படுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பகலில் கொழும்பு நகரை வலம் வந்தான். மாலையானவுடன் அவனின் அந்த இருப்பிடத்துக்கு வந்துவிடுவான். அந்த இடம் ஒரு சின்ன குடிசை ஆனல் அதற்குப் பின்னுல் திறந்த வெளி. கீரை வகைகள் பயிரிடப்பட்டிருந்தன. அந்தக் குடிசையில் வாழ்ந்தவர்களும் தமிழர்கள்தான். கீரை வியாபாரம் செய்து சீவனம் நடத்தி வந்தனர். ஒரு வயது வந்த தந்தை. ஒரு தாய். அவர்களுக்கு ஒரு மங்கை. சுமார் பதினறு வயதிருக்கும். தகப்பன், தாய், மகள் மூவரும் சேர்ந்து வேலை செய்தனர். தாயும் மகளும்தான் கீரைகளைக்

(11-ம் பக்கம் பார்க்க)


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலக் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய லேட்லாக் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வி. பி. வேலும் மயிலும்,
கொழும்பு-11.

கே: எனக்குப் பணக்கஷ்டம் அதிகம். அந்தக் கவலையால் என் உடம்பும் துரும்பாகி விட்டது. என்ன செய்யலாம்?

ப: நேஷனல் சுவீப்பில் முதலாவது பிரைஸை அடித்ததாக இன்றிரவே ஒரு கனவு காணுங்கள். நாளைக்கே உடம்பு ஊதிவிடும்.

ஃ

எம். ஜோன்பிள்ளை,
நீர்கொழும்பு.

கே: உங்களுக்குப் பேய் பிசாசுகள் என்றால் பயமே கிடையாதா?

ப: அதிலெல்லாம் எனக்கு நம்பிக்கை கிடையாது. சதா பேய் நடமாடுவதாகக் கூறப்படும் ஒரு வீட்டில் தானே நான் குடியிருக்கிறேன்.

ஃ

என். ஆர். செல்வசாமி,
பேராதனை.

கே: எனக்கு இரவில் தூக்கமே வருகிறதில்லை. இதற்கு ஒரு வழி சொல்லமாட்டீர்களா?

ப: உங்களின் கடன்களை உடனே தீர்த்து விடுங்கள். கடன் தொல்லைகள் தான் தூக்கம் வராததற்குக் காரணம்.

ஃ

வி. டி. ராஜகுமாரி,
சிலாபம்.

கே: ஆண்களைப் போல பெண்களுக்கும் மீசை தாடி வளர்ந்தால் எப்படியிருக்கும்?

ப: ஆண்-பெண் முந்தத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படும்.

ஃ

வீர. சந்தானம்,
நூரளை.

கே: நான் ஒரு சிங்களப் பெண்ணைக் காதலிக்கிறேன். அவளும் என்னைக் காதலிக்கிறாள். இரு குடும்பங்களும் எங்கள் காதலுக்கு முட்டுக்கட்டை போடுகின்றன. என் வயது 27 காதலி வயது 20. எங்களுக்கு ஒரு யோசனை கூறமாட்டீர்களா?

ப: உடனடியாகச் இருவரும் சென்று 'பதிவுத் திருமணம் செய்து கொள்ளுங்கள். ஆனால் சாட்சிக்குக் கையெழுத்து போட என்னை மட்டும் அழைத்து விடாதீர்கள்.

ஃ

எஸ். தனலட்சுமி,
கொழும்பு-7.

கே: எனக்குப் பத்து குழந்தைகள், எனவே கர்ப்பத் தடை செய்து கொள்ளலாமென்று எண்ணுகிறேன். தங்களின் கருத்தென்ன?

ப: எதற்கு வீண் சிரமம்? உங்கள் கணவரை உடனடியாகப் பட்டாளத்தில் போய்ச் சேரச் சொல்லுங்கள்.

ஃ

பொ. முனியாண்டி,
பதுளை.

கே: நான் ஒரு திறமையான வேட்டைக் காரன். நேற்று ஒரு புறாக்கூட்டத்தை எனது துப்பாக்கியால் சுட்டேன். ஒன்றுகூடச் சாகவில்லை, எல்லாம் பறந்தோடி விட்டன.

ப: வேட்டையாடுவதில் உங்களுக்குள்ள திறமையை நான் சந்தேகிக்கவில்லை. பறவைகளுக்கு இறைவன் கருணை காட்டி விட்டார். அவ்வளவுதான்.

ஃ

எல். எம். கி. கந்தசாமி,
கொழும்பு-10.

கே: கிழவியை மணப்பதாகக் கனவு கண்டால் தனலாபம் கிடைக்கும் என்று சொல்லுகிறார்களே!

ப: ஆமாம்! கனவு கண்டாலே தனலாபம் கிடைக்குமென்றால் உண்மையிலேயே கிழவியை மணந்தால் பெரும் பணம் கிடைக்குமே என்ற பேராசையில் போயும் போயும் பாழும் கிழவியை மணந்து கொள்ளாதீர்.

ஃ

காதல்பித்தன்,
யாழ்ப்பாணம்.

கே: நானும் எனது நண்பர் இருவரும் அழகு சுந்தரியான ஓர் ஊமைப் பெண்ணைக்காதலிக்கிறோம். ஆனால் அவள் எங்களிருவரில் யாரைக் காதலிக்கிறாள் என்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லையே?

ப: நல்ல வேளை அவள் ஊமையாக இருக்கிறாள்! அவளுக்கு மட்டும் பேசும் சக்தியிருந்தால் உங்கள் இருவருடனும் கண்டிப்பாகப் பேசமாட்டாள்.

ஃ

வி. எல். எம். எஸ். நாதன்
கொழும்பு-6

கே: எங்கள் வீட்டில் சமையக்காரனை அமர்த்தியிருப்பதால் செலவு அதிகமாகிறது. என்ன செய்யலாம்?

ப: உங்களின் மனைவியைக் சமைக்கச் சொல்லுகிறது தானே! அதனால் சமையக்காரனுக்குக் கொடுக்கிற சம்பளமும் மிச்சம். அவளின் சமையலை வீட்டிலிருப்பவர்கள் நிறையச் சாப்பிட முடியாததால் சாப்பாடும் மிச்சம்.

ஃ

எம். ஐ. நாதன்,
முள்ளியவளை

கே: தமிழரசுக்கட்சியினர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் அமுலுக்கு வரப் போகின்றதை அறிந்து தமிழ்க் காங்கிரசார் அவசரப்படுகின்றார்களே ஏன்?

ப தமிழரசுக் கட்சி மூலம் உரிமை கிடைக்கப் போகிறதே என்ற பொறாமையும், காங்கிரஸ் காக்காய்பிடிக்கத்தான் தகுதியானது என்ற இரகசியமும் அம்பலமாகி விடும் என்ற அச்சமே காரணமாகும்.

ஃ

மேகவண்ணன்,
களுவாஞ்சிக்குடி

கே: அரசியலில் ஈடுபட்ட ஆசிரியர்களைத் தண்டிக்க திடங்கொண்ட கல்வி அமைச்சர் ஏன் இப்போதைய அரசாங்கக் கட்சியினரை ஆதரித்து வேலை செய்தவர்களைத் தண்டிக்காது பின் வாங்குகிறார்?

ப: அவர்களை ஏன் தண்டிக்க வேண்டும். சர்வாதிகாரத்தை ஒழித்து ஜனநாயகத்தைப் பாதுகாக்க உதவியவர்களல்லவா? அவர்களுக்கு இன்று நாடே நன்றி செலுத்துகிறதே!

ஃ

கந்த-ஞானமுத்தன்,
கைதடி தெற்கு

கே: இலங்கை-இந்தியர் பிரச்சினையை தேசிய அரசாங்கம் எவ்வாறு தீர்த்து வைக்கப் போகிறது?

ப: சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை அமுல் நடத்துவது மூலம் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. 525,000 பேர்களை இந்தியாவுக்கு அனுப்பிவிட்டு 300,000 பேருக்கு பிரஜாவுரிமை வழங்குவது தான் அந்தத் தீர்வு.

ஃ

சோ. குணரத்தினம்,
ஊரிக்காடு

கே: சில பெண்கள் தங்கள் முதுகெலும்பு தெரிய சட்டைகள் அணிவதால் அவர்களுக்குக் கிடைக்கும் பலன் என்ன?

ப: வெளியே தள்ளிக் கொண்டிருக்கும் எலும்பைக் கண்டதும் திரும்பிப்பாராமல் ஓடிவிடுவார்கள் அவர்களை வட்டமிட்டுக்கொண்டிருக்கும் காளையர். அதற்காகவே இந்த ஏற்பாடு.

ஃ

ஆர். குப்புசாமி,
கண்டி.

கே: நான் ஒரு விதவையை திருமணம் செய்யலாமென்று எண்ணியிருக்கிறேன். இது பற்றி தங்கள் கருத்தென்ன?

ப: தாரளமாகச் செய்யுங்கள் நான் குறுக்கிடவில்லை. ஒருவர் முதல் மனைவியை இழந்தபின் மறுமணம் செய்யும் போது, அந்த வாய்ப்பை ஒரு விதவைக்குக் கட்டாயமாகக் கொடுக்க வேண்டுமென்பதே என் கட்சி. பெண் மறுமணம் செய்தாலும் தாரமிழந்தவனுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.

ஃ

எல். எம். பி. ஹமீட்,
காலி.

கே: இதுவரை காதலில் படுதோல்வி அடைந்தவர்களில் ஒரு சிலர் தற்கொலை செய்து கொண்டார்கள். எஞ்சியவர்கள் என்ன செய்கிறார்கள்?

ப: அங்கொடை மனநோய் ஆசுபத்திரியில் காதல் நோயிக்குச் சிகிச்சை பெறுகிறார்கள்.

ஃ

சி. கதிர்காமத்தம்பி,
தெல்லிப்பழை

கே: தமிழரசுத் தந்தை எஸ். ஜே. விக்கும் திரு. பொன்னம்பலத்திற்கும் உள்ள வேற்றுமை இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கும்?

ப: இருவரும் அடிப்படைக் கொள்கையிலே மாறுபட்டு நிற்கின்றனர். தமிழரசுத் தந்தை சமஷ்டி ஆட்சி முறையே சிறுபான்மை மக்களுக்கு விமோசனம் அளிக்குமென்று உறுதியாக நம்புகின்றார். திரு. பொன்னம்பலமோ ஒற்றையாட்சியே நீடிக்க வேண்டுமென ஒற்றைக் காலில் நிற்பவர். அவரும் சமஷ்டிக் கொள்கையை ஏற்று அதற்காகப் பாடுபட முன்வரும்வரை இவ் வேற்றுமை நீடிக்கும்.

ஃ

காதல் மன்னன்,
புதுவட்டக்கொடை

கே: தெரியாத்தனமாக் ஒருத்தியைக் காதலிக்கத் தொடங்கிவிட்டேன். ஆனால் அவள் என்னை ஆட்சி செய்யத் தொடங்குகிறாள். எங்கள் காதல் நிலைக்குமா?

ப: சர்வாதிகாரப் பாதையில் காதலைத் திருப்ப அவனை அனுமதிக்காதீர். அதற்கு ஒரு காதற் தேர்தலைநடத்தி, அதில் அவளைத் தோற்கடித்து அந்த ஆட்சியைக் கைப்பற்றுங்கள்! இல்லையேல் காதல் மன்னரின் காதல் கூட நிலைக்காது.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
த. பெ. இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

## நிந்த(க)ம் ஒழிக

நிந்தகம் முறையை ஒழித்துவிட ஒரு விசேட விசாரணை சபையை ஏற்படுத்த அமைச்சர் சி. பி. டி. சில்வா ஏற்பாடுசெய்துள்ளார்.

—செய்தி

கொழும்பில் வாடகைக்கு வீடுகள் எடுக்கும்போது கொடுக்கும் நிந்தம் முறையை ஒழிக்க எந்த அமைச்சரும் நடவடிக்கை எடுக்க முன் வரவில்லையே என்று ஒரு குடியிருப்பாளர் ஏங்குகிறார்.

## ஏற்ற இறக்கம்

விலைவாசி ஏற்றங்களைத் தடுப்பதற்குரிய ஆலோசனைகளைக் கூற மக்கள் குழுக்களை வர்த்தக அமைச்சர் நியமித்து வருகிறார்.

—செய்தி

விலைவாசி ஏற்றங்களில் அமைச்சரோ, மக்களோ தலையிடுவது தகாது என்று ஒரு போராட்ட முன்னறிவித்தலை வர்த்தகர்கள் கொடுக்க விருப்பதாகவும் ஒரு செய்தி கிடைத்துள்ளது.

## யார் தலைக்கோ...?

பால் சபை வெண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கப் போகிறது.

—செய்தி



யாருடைய தலையில் வெண்ணெய் தடவுவதற்காக இந்த யோசனையோ தெரியவில்லை.

## பழக்கமும் வழக்கமும்

மோட்டார் வாகனங்களைச் செலுத்துவோர் புரியும் குற்றங்களுக்கான அபராதத் தொகையை குற்றம் புரிந்த இடத்திலேயே வைத்து வசூலிக்க புதிய திட்டம் ஒன்றினை நீதி அமைச்சர் ஆராய்ந்து வருகிறார்.

—செய்தி

மோட்டார்களைச் செலுத்துவோருக்கு இது ஒன்றும் புதுமையில்லையே, வழக்கமாக இவர்கள் குற்றம் புரிந்த இடத்திலேயே 'அபராதத் தொகை' கொடுத்துத்தானே வருகிறார்கள்!

## அதிசயமில்லையே

திருகோணமலையில் உள்ள சில்லறைக் கடைகளில் தந்திப்பத்திரங்களில் பொருட்கள் சுற்றிக் கொடுக்கப்படுகிறது.

—செய்தி

தந்திகள் எல்லாம் இப்பொழுது தபால்கள் போன்று ஆமைவேகத்தில் நகருவதனால் தந்திப் பத்திரங்களுக்கு உரிய இடம் கிடைத்திருக்கிறது!

## எந்நாட்டவர்கள்?

கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் பீட்டர் கெனமன் இவ்வாரம் மொஸ்கோவிலிருந்து திரும்பியுள்ளார். கட்சித்தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா இவ்வாரம் மொஸ்கோ செல்லுகிறார்.

—செய்தி

மாதத்துக்கு ஒரு முறையாவது இவர்கள் மொஸ்கோவுக்குப் பிரயாணமாகி வருவதனால் இவர்களிடமிருப்பது ருஷ்யப் பாஸ்போட் தான். இலங்கைக்கு வருவதற்கு இலங்கை விசா பெற்றுக்கொண்டுதான் வருகிறார்கள் இவர்கள் என்று இந்தியாவுக்கு ஒரு தடவை போய் வருவதற்காக அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் ... கூறுகிறார்.

வரதரின்
பல குறிப்பு
[ தமிழ் டைரக்டரி 1965-66 ]
விலை ரூ. 10 - பார்சல் செலவு ரூ. 1

வரதர் வெளியீடு,
226, காங்கேசன்துறை வீதி.
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்ஜீரியாவில் இராணுவப் புரட்சி

அல்ஜீரியாவின் தலைநகரான அல்ஜீயர்ஸ் நகர் மீது அன்று காலை ஆதவன் தனது கிரணங்களைப் பரப்பும் போது அல்ஜீரிய இராணுவப் புரட்சியும் நிறைவு பெற்றிருந்தது.

அன்று சனிக்கிழமை. அல்ஜீயர்ஸ் நகரம் ஒரு போர்க்களமாக மாறிக்கொண்டிருந்தது. யுத்த டாங்கிகள் எங்கும் காணப்பட்டன. இராணுவ வீரர்களின் நடமாட்டம் அதிகரித்தது. இவ்வாறு அதிகார பீடத்தில் மாற்றம் ஏற்படும் அறிகுறிகள் தென்பட்டன. ஜனதிபதி பென்பெல்லாவின் மூன்று வருட ஆட்சி அஸ்தமிக்கும் வேளையும் வந்து விட்டது.

இராணுவப் புரட்சிக்குச் சில தினங்களுக்கு முன்பே தலைநகருக்கு வெளியேயிருந்த பட்டாளங்கள் பல நகரத்துள் கொண்டு வரப்பட்டன. அவர்களிடம் சிறிய பெரிய இயந்திரத் துப்பாக்கிகளும், வேறு பல ஆயுதங்களும் இருந்தன.

### காலை 2 மணிக்கு கைதானர்

பென்பெல்லாவின் உத்தியோக இல்லமான "விலா ஜொலி" இல்லம் வரை செல்லும் பாதை இராணுவ சிப்பாய்களால் மூடப்பட்டது. பொது மக்களோ வாகனங்களோ அப் பாதையிற் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

அதிகாலை 2 மணிக்குபென் பெல்லா கைது செய்யப்பட்டாரென சிலர் கூறுகின்றனர்.

அவருடைய இல்லத்திற்கு அருகிலுள்ள வீடுகளில் வசிப்பவர்களுக்குத் துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டதாம்.

அதே சமயத்தில் அல்ஜீயர்ஸில் சன நெரிசலுள்ள ஹய்த்ரா என்னுமிடத்திலும் துப்பாக்கி வேட்டுச்சத்தம் கேட்டது. அங்குள்ளபோலிஸ் நிலையங்களுக்கு இராணுவத்தினர் சென்றதால் துப்பாக்கி சூடு நடைபெற்றிருக்கக் கூடும்.

காலையில் 2 மணி அடித்ததும் அரசாங்க உயர்தர அதிகாரிகள் புரட்சி நிர்வாகக் குழுமுன்னல் ஆஜர் செய்யப்பட்டனர். அத்துடன் பென் பெல்லாவுடன் நெருங்கிய பிணைப்புக்கொண்டிருந்தவர்களும், அரசியல் வாதிகளும் கைது செய்யப்பட்டனர்.

### டாங்கிகளின் இரைச்சல்

காலையில் மூன்று மணியளவில் யுத்த டாங்கிகளின் சத்தம்வீதிகளில் காதைத்துளைத்துக்கொண்டிருந்தது. நகருக்குள் பிரவேசிக்கும் முக்கிய வீதிகள் அனைத்தும் இராணுவத்தால் மூடப்பட்டன.

இச்சந்தர்ப்பத்தில்ஓரான், சிதிபெல், அப்பெஸ், மேற்கு அல்ஜீரியா, கொன்ஸ்டன்டீன் முதலியநகரங்களுக்கும், கிழக்கு அல்ஜீரியாவில்போன் நகரத்துக்கும், இதர மாகாண நகரங்களுக்கும் துருப்புகள் அனுப்பிவைக்கப்பட்டன.

சூரியோதயத்துக்கு முன்பு இராணுவப்புரட்சி வெற்றி பெற்று விட்டது. அன்று முழுவதும் தெருக்களில் டாங்கிகள் ரோந்து வந்து கொண்டிருந்தன.

காலை 7-45 க்கு அல்ஜீரியாவின் வானொலி ஓர்இராணுவ கீதத்தை இசைத்தது. மிக முக்கியமான வானொலி அறிக்கை யொன்றினை எதிர்பார்க்கும் படி வானொலி அடிக்கடி மக்களைக் கேட்டுக் கொண்டது.

### பயங்கரச் சதிகாரன்

காலை 7-30 மணிக்கு கடைகள் சில திறக்கப்பட்டன. மக்கள் ஆங்காங்கு வீதிகளில் கூடிநின்றனர். இராணுவம் நாட்டின் நிர்வாக ஆதிக்கத்தைக் கைப்பற்றிக் கொண்டதை அப்பொழுது சிலர் அறிந்திருந்தனர்.

காலை 10 மணிக்கு இது வரை அனைவரும் எதிர்பார்த்திருந்த புரட்சி நிர்வாகக்குழுவின் அறிக்கை ஒலிபரப்பப்பட்டது.

பென்பெல்லாவை நாட்டின் நிர்வாக அதிகாரத்திலிருந்து நீக்கிவிட்டதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. பென்பெல்லாவை 'சர்வாதிகாரத் துரோகி' என அறிக்கை வர்ணித்தது' அவர் 'பயங்கரசதி காரரென்றும்' அறிக்கை குற்றஞ் சாட்டியது.

சனிக்கிழமை முழுநாளும் தலைநகரில் அமைதி குடி கொண்டிருந்தது. அல்ஜீரியாவிலிருந்து செய்திகள் வெளியே அனுப்புவது தடுக்கப்பட்டது. டெலிபோன், வானெலித் தொடர்பு ஆகியவை துண்டிக்கப்பட்டதால் வெளி உலகத் தொடர்பு இல்லாது போயிற்று.

ஞாயிற்றுக்கிழமை காலை நேரம் வெளிப்பார்வைக்கு அமைதியாகவே இருந்தது. அல்ஜீரிய வானெலி வழக்கம் போல் கத்தோலிக்க தேவஸ்தான பூசையை ஒலி பரப்பியது. பொது மக்கள் கடற்கரையில் கூட்டம் கூட்டமாக ஒன்று சேர்ந்தனர்.

# நடந்ததெப்படி?

### கண்டன ஊர்வலங்கள்

அன்று மாலை நேரத்தில் அமைதியின்மை ஏற்படும் அறிகுறிகள் தென்பட்டன. அல்ஜியர்ஸ் சர்வகலாசாலைக்கு அருகிலுள்ள ஓட்டல்களில் மாணவர்கள் குவிந்தனர். குறிப்பாக இந்த மாணவர்களிடையே அமைதியின்மை காணப்பட்டது.

அன்று இரவு 8 மணிஅடித்ததும் அல்ஜியர்ஸ் நகரில் ஊர்வலங்கள் ஆரம்பமாயின. மத்திய சந்தைப் பகுதியில் ஆரம்பமான ஊர்வலங்கள் கடற்கரைப்பக்கத்துக்குச் சென்று, பின்னர் காஸபா பகுதிக்கு பிரிந்து சென்றன.

துருப்புகள் வீதிகளில் குவிந்தனர். 1½ மணி நேரத்தில் ஊர்வலத்தினர் கலைத்துவிடப்பட்டனர். எண் திசைகளிலிருந்தும் துப்பாக்கி வேட்டுச் சத்தம் கிடுகிடுக்கச் செய்தது. ஆயினும் அவை இராணுவத்தினர் ஆகாயத்தை நோக்கிச் சுட்டவைகளாகும்.

அடுத்த நாட் காலை வரை வீதிகளை இரும்புத் தொப்பி அணிந்த இராணு வீரர்கள் காவல் புரிந்தனர்.

இதற்கிடையே திங்கட் கிழமை காலை 1-30 மணிக்கு வெளி நாட்டுப் பத்திரிகை நிருபர்கள் வெளி விவகார இலாகா அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டனர்.

வெளிவிவகார அமைச்சர் அப்துல் அசிஸின் அறிக்கை யொன்று அவர்களுக்கு வாசித்துக் காட்டப்பட்டது. யூன் 24ந் திகதி ஆசிய ஆபிரிக்க நாடுகளின் வெளி விவகார மந்திரிகளின் மாநாடும் 29ந் திகதி ஆசிய—ஆபிரிக்க மாநாடும் திட்டப்படி அல்ஜியர்ஸில் நடைபெறுமென அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

# போகாத ஊருக்கு வழி காட்டுகிறார்கள்

## பொன்னம்பலம் கட்சியினர்

இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வைக் காண விரும்பவில்லையென்று பொன்னம்பலம் கட்சியின் பொதுச் செயலாளர் ஒரு கூட்டத்தில் பேசியுள்ளார். அதே நேரத்தில் பொன்னம்பலம் கட்சி இப்பிரச்சினைக்கு நிரந்தரபரிகாரத்தைக்காண்பதையே இலட்சியமாகக் கொண்டிருப்பதாகவும்அவர் கூறியுள்ளார்.

"யார் குத்தியும்அரிசியாக வேண்டும்" என்ற முதுமொழி தமிழ் வழங்கும் பிரதேசங்களில் உண்டு. அதே போன்று நல்ல வழியை யார் காண்பித்தாலும்அவர்களைப் பின்பற்ற வேண்டியது தமிழ் பேசும் மக்கள் கடமை.

பொன்னம்பலம்கட்சியினர் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர பரிகாரத்தைக் காண்பதை வெறுமனே இலட்சியமாக மட்டும் கொண்டுவிட்டால் போதாது. அவர்களின் அந்த இலட்சியத்தை அடைவதற்கான மார்க்கத்தையும் காட்ட வேண்டும். மார்க்கத்தைக் காட்டினுற்தான், இலட்சியம் சிறப்புடைத்தாக இருக்கும்.

### மார்க்கம் என்ன?

'போகாத ஊருக்கு வழி காட்டுவது' போன்று சரியானமார்க்கத்தைக் கூறுது, பிரச்சினைகளுக்கு நிரந்தர பரிகாரம் காண்பதையே இலட்சியமாகக் கொண்டுள்ளோம் என்று கூறினல் அதை யார்தான் நம்புவார்கள்?

**பூங்குன்றன்**

வட்டமேசை மாநாட்டின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவிடலாம் என்கிறார்கள். அப்படியானல் வட்டமேசை மாநாட்டைக்கூட்ட பொன்னம்பலம் கட்சியினர் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா? எடுத்திருப்பதாக மக்களிடம் கூறியிருக்கிறார்களா? இல்லையே.

வட்டமேசை மாநாட்டைக் கூட்டுவதற்கு எத்தகைய நடவடிக்கைகளும் எடுக்காது, வெறுமனே தமிழரசார் வட்டமேசை மாநாட்டை எதிர்க்கிறார்கள் என்று கூறிக்கொண்டிருந்தால் பிரச்சினை தீர்ந்து விடுமா? அல்லது வட்ட மேசை மாநாடுதானும் கூட்டப்பட்டு விடுமா?

1957ம் ஆண்டுமுதல் திரு. பொன்னம்பலம் வட்ட மேசை மாநாட்டைப் பற்றிப் பேசிவருகிறார். இடைப்பட்டகாலத்தில் இன்றைய பொன்னம்பலம் கட்சியின் செயலாளரே வட்டமேசை மாநாட்டை எதிர்த்திருக்கிறார். ஆனல் இத்தனை ஆண்டுகளாக பொன்னம்பலம் கட்சியினருக்கு நேரம் கிடைக்கும்போது எல்லாம் இதைப் பேசி வருகிறார்கள்.

### எடுத்த நடவடிக்கை என்ன?

வட்டமேசை மாநாட்டில் எதைப்பற்றிப் பேசுவது, எந்த எந்தக் கட்சிகளைஅழைப்பது,அம்மாநாட்டை எங்கே நடாத்துவது என்று இன்றுவரை கூறியிருக்கிறார்களா என்றால் இல்லை.வட்டமேசைமாநாட்டுக்கான ஆரம்ப நடவடிக்கைகளைத்தானும் எடுத்திருக்கிறார்களா பொன்னம்பலம் கட்சியினர்?

கற்பனை உலகில் சஞ்சரிப்பவர்களைப் போன்று வட்ட மேசை மாநாடுதான் வேண்டும் என்ற பல்லவியை -உடைந்தஇசைத்தட்டுதிருப்பிதிருப்பி ஒரே வரியைப் பாடுவதுபோன்று-கூறுகிறார்கள். இதுதான் பொன்னம்பலம் கட்சியினர் காட்டும் 'நிரந்தர பரிகாரம்.'

வட்டமேசை மாநாட்டின் மூலம் பிரச்சினைகளைத்தீர்த்ததாக சம்பவங்கள் எதுவுமே கிடையாது. நோக்கத்தில் ஒன்றுபட்டு அதை அடையும் மார்க்கத்தில் வேறுபட்டு நிற்பவர்கள்மத்தியில் வட்ட மேசை மாநாடு ஓரளவு வெற்றியைக்கொடுக்கலாம். ஆனல், இந்நாட்டில் உள்ள அரசியற் கட்சிகளைப் பொறுத்தவரையில் குறிப்பாக தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் ஒன்றுபட்ட நோக்கம் கொண்ட கட்சிகளைக் காணவே முடியாது. இடது சாரிக் கட்சிகளும், சுதந்திரக் கட்சியும் சிங்கள மக்களின் உரிமைகளைத் தமிழர்கள் பறித்துவிட்டார்கள், அவற்றைத் திருப்பிப்பெறுவதற்கு இயக்கம் நடாத்த வேண்டும் என்கிறார்கள்.

### எவர்களது உரிமைபற்றி பேசுவது?

இந்த நிலையில், வட்டமேசை மாநாட்டில் சிங்கள மக்களின் பறிக்கப்பட்ட உரிமைகள் பற்றிப் பேசுவதா அல்லது தமிழ் பேசும் மக்களின் பறிக்கப்பட்ட உரிமைகள் பற்றிப் பேசுவதா என்ற பிரச்சினை முதலில் தோன்றும்.

எதிர்க் கட்சிகள் நிச்சயமாக அடித்துக் கூறுவார்கள், சிங்கள மக்களின் உரிமைகள் அபகரிக்கப்பட்டு விட்டதாக. இதற்கு பொன்னம்பலம் கட்சியினர் கூறும் பதில் என்ன?

நோக்கத்தில் ஒன்றுபட்டு இருந்தால் வட்டமேசை மாநாடு பலன் கொடுக்கலாம்.கூட்டாட்சிவாதிகளின் சர்வாதிகாரப் போக்கை எதிர்ப்பதில் ஒரே நோக்கம் கொண்ட ஏழு கட்சிகள், அடிப்படைக் கொள்கைகள், அவற்றை அடைவதற்கான மார்க்கங்கள் ஆகியவற்றில் வேறுபட்டிருந்த போதும் ஒன்றுபடவில்லையா? எனவே முதலில் நோக்கத்தில் ஒன்றுபடவேண்டும்.

வட்டமேசை மாநாடு தோல்வியில் முடிந்தால் பொன்னம்பலம் கட்சியினர் எடுக்கும் அடுத்த நடவடிக்கை என்ன? அதுபற்றி எப்பொழுதாவது பொன்னம்

(5-ம் பக்கம் பார்க்க)




## ரிஷி
## அஜமாமிச லேகியம்

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதைப் பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்துவிடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்தியமில்லை.

குறிப்பு
அசல் R. S. பதிமருந்துகளும், திருச்சினப்பள்ளி குரு மருந்துகளும் கேசவர்த்தனி எண்ணையும் மற்றும் ரிஷி மருந்துகள் முதலியவைககளும் கிடைக்கும்.

விலை 1 ருத்தல் ரூபா 36-00
விலை ½ ருத்தல் ரூபா 22-00
விலை ¼ ருத்தல் ரூபா 12-00
(தபாற் செலவு 95 சதம்)

63 வருட பரம்பரை வைத்திய நிருணர்
ஆயுர்வேத டாக்டர்
T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்
ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டத் தொழிலாளர்களுக்கு துப்பாக்கி

## 600 பேர் 'லைசன்சு' கோருவதாக செய்தி

மலைநாட்டுத் தோட்டங்களில் நாம் தமிழர் இயக்கம் மீண்டும் புத்துயிர் பெற்று வரும் இந் நாளிலே புதிதாகத் 'துப்பாக்கி லைசன்சு' கோரி இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் 600 பேர்கள் கண்டி அரசாங்க அதிபருக்கு விண்ணப்பித்திருப்பதாகவும், விரைவில் இந்தியத் தோட்டத் தொழிலாளருக்கு புதிய துப்பாக்கி லைசன்சுகள் பெற்றுக்கொடுப்பதற்கு யு. என். பி-தமிழரசு அரசாங்கத்தில் ஒரு எம். பி. (தமிழர்) பெரு முயற்சி செய்வதாகவும் "ஜனசத்திய" வார ஏடு 27-6-65 ந் திகதி எழுதியுள்ளது.

இப் பத்திரிகை மேலும் கூறுவதாவது:-

'துப்பாக்கிகள் உபயோகிப்பதற்கான அனுமதிப்பத்திரங்களை உடனடியாகப் பெற்றுக்கொடுப்பதற்கு அந்த எம். பி. உயர்தர அதிகாரிகளையும் வற்புறுத்தியுள்ளார் என்று அறியப்படுகிறது.

தோட்டங்களில் வசிக்கும் இந்தியர்களுக்கு எத்தனை துப்பாக்கி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதைக் கண்டுபிடிப்பதற்காக சுதந்திரக் கட்சி அரசாங்கம் 1963ல் அரசாங்க அதிபர்கள் வாயிலாக ஒரு விசாரணை நடத்தியது.

இந்த விசாரணை நடத்தியதற்கான காரணம் தோட்டங்களில் பிரசைகளல்லாத இந்தியர்களிடம் துப்பாக்கிகள் ஏராளமாக இருக்கின்றன என்ற நம்பிக்கையே. இந்த விசாரணை ஆரம்பமாகியபோது, இந்தியர்களில் பெரும்பாலோருக்கு துப்பாக்கி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது, வேட்டையாடுவதற்காகவே. அரசாங்கக் கட்டளையின்படி துப்பாக்கி அனுமதிப்பத்திரங்கள் கமத் தொழிலைப் பாதுகாப்பதற்காகவும், வேட்டைக்காகவும், தற்பாதுகாப்புக்காகவும் மட்டுமே வழங்கமுடியும். ஆனால் கமத் தொழிலைப் பாதுகாப்பதற்கென கூறி இந்த அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொண்ட இந்தியர்கள் அநேகருக்கு காணி எதுவும் சொந்தமாயிருக்கவில்லையென்பது விசாரணையின் போது வெளியாயிற்று.

### 4100 துப்பாக்கிகள்

1963ல் விசாரணை ஆரம்பமாகும்பொழுது கண்டி மாவட்டத்தில் 462 தோட்டங்களிலும், வெளியேயும் பிரசைகளுக்கும் பிரசைகளல்லாத இந்தியர்களுக்கும் வழங்கப்பட்டிருந்த துப்பாக்கி அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை 4100.

இந்த விசாரணைக்குப் பின்னர் நுரலை மாவட்டத்தில் கள்ள அனுமதி பத்திரங்களைக்கொண்ட பெருந்தொகையான துப்பாக்கிகள் இருப்பதாக தகவல் கிடைத்தது. இந்த அனுமதிப்பத்திரங்கள் பெரும்பாலும் பிரசைகளான இந்தியர்களுக்கும் பிரசைகளல்லாத இந்தியர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தன என்ற தகவலும் வெளியாயிற்று."

## மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை தமிழ் விழா

மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை முத்தமிழ் மன்றத் தமிழ் விழா இம்மாதம் 2, 3, 4ம் தேதிகளில் நடைபெறுகின்றது. இவ்விழாவினை வெள்ளிக்கிழமை மாலை மூதவை உறுப்பினர் மு. மாணிக்கம் தொடக்கி வைக்கிறார்.

மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. செ. இராசதுரை, மங்கல விளக்கேற்றித் திறந்து வைக்கிறார். புலவர்மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளை, பண்டிதர் ஆ. சபாபதி, பண்டிதர் த. சந்திரசேகரம் பிள்ளை, பண்டிதர் சி. கனகசூரியம், திரு. எஸ். திருஞானசம்பந்தர், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, ஆசிரிய சிரோன்மணி திரு. வே. சாமித்தம்பி, பண்டிதர் வீ. சி. கந்தையா பி. ஓ. எல்., திரு. கந்தையா, கவிஞர் கா. சி. ஆனந்தன், பண்டிதர் செ.பூபாலபிள்ளை, திரு. பொ. சிவசேகரனர் முதலியோர் இவ்விழாவில் உரை நிகழ்த்துகின்றனர்.

## சித்த வைத்தியத்துறையின் எதிர்காலம்....?

கொழும்பு பொறளையில் உள்ள ஆயுர்வேதக் கல்லூரியுடன் தமிழர்களின் பண்டைய வைத்தியத்துறையான சித்தவைத்தியக்கல்லூரியும் இணைக்கப்பட்டிருக்கிறது. யூனனிவைத்தியமும் இங்கு கற்றுத்தரப்படுகிறது. பெரும்பாலும்சிங்களவர்கள் ஆயுர்வேதத்தையே பேணுவதனல், சித்த வைத்தியத்துறையும் யூனனி வைத்தியத்துறையும் மாற்ருந்தாய் மனப்பான்மையுடன்தான் இதுவரைகாலமும் கண்காணிக்கப்பட்டு வந்துள்ளன. ஆனல் எதிர்

### காலகண்டன் குறிப்பு

காலம் இவ்வைத்தியத்துறைகளுக்கு விமோசனம் ஏறபடும் என்று கருத இடமிருக்கிறது.

ஆளும் வர்க்கத்தின் பாரபட்சம் ஓரளவு நிலவும்வேளையில், சித்த வைத்தியர்களிடத்தில் ஏற்பட்டுவரும் போட்டி, பொருமை போன்ற விஷமங்கள் நிலைமையை மென்மேலும் சிக்கலாக்கி வருகின்றன என்பதை அறிவோர் வேதனைப் படாமலிருக்கமுடியாது.

ஏறத்தாழ 85 மாணவர்கள் சித்த வைத்தியத்துறையில், ஆறுவருடப் பயிற்சிக்காகச் சேர்ந்துள்ளனர். ஆனல் இன்றுள்ள நிலைமையில் இவர்களுக்குப் போதுமான பயிற்சி அளிக்கப்படுவதாகக் கூறமுடியவில்லை. சில விரிவுரையாளர்கள் தங்களுடைய சொந்த விருப்பு வெறுப்புக்களையும், தங்கள் குடும்பத் தொல்லைகளையும் விரிவுரைகளுடன் சேர்த்துப் போதிப்பதாக சில மாணவர்களே எம்மிடம் முறையிட்டுள்ளனர். தகுதியற்றவர்கள் சிலரும் பாடபோதனைகளுக்காக நியமிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

வைத்தியத்துறை மிகவும் கவனம் செலுத்தப்படவேண்டியது. ஏனெனில் மக்களின் உயிருடன் விளையாடுபவர்கள் வைத்தியர்கள். அந்த விளையாட்டு வினையாகவே ஆகிவிடக்கூடாது என்பதனுல்தான் வைத்திய மாணவர்களுக்குப் போதிக்க முன்வருபவர்கள் போதுமான தகுதியும் திறமையும் ஆற்றலும்வாய்ந்தவர்களாகவிருப்பது அவசியம் என்பதை வற்புறுத்த விரும்புகிறோம்.

### சித்தவைத்தியர் சங்கம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆயுர்வேதக கல்லூரி மண்டபத்தில் சித்த வைத்தியப் பட்டதாரிகள் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. நூற்றுக் கணக்கான சித்தவைத்தியப் பட்டதாரிகள் நாடெங்கும் இருந்தும், இக்கூட்டத்துக்கு ஆகப் 16 பேர்களே சமூகமளித்தமை வேதனையையூட்டியது.

(9-ம் பக்கம் பார்க்க)

## சிங்கள இதழ்களில்...

### தமிழில் பேச கட்சி முடிவு

'தமிழரசுக்கட்சி பிரதிநிதிகள் அனைவரும் பாராளுமன்றத்திலும் செனட் சபையிலும் தமிழிலன்றி வேறு எந்த மொழியிலும் பேசக்கூடாதென தமிழரசுக்கட்சி செய்த முடிவின் காரணமாக ஏழுகட்சி கூட்டரசாங்கத்துள் கருத்து வேற்றுமை தோன்றியுள்ளது.

இந்த முடிவின்படி அமைச்சர் செனட்டர் திருச்செல்வம்கூட செனட் சபையில் அவரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு தமிழில் மட்டுமே பதில் அளிப்பார். இந்த முடிவால் ஐக்கிய தேசியக் கட்சி எம். பிகளுக்கும் செனட்டர்களுக்கும் சிங்கள மக்களின்முன் சங்கடமான ஒரு நிலைமையை எதிர்நோக்கவேண்டியேற்படும். தமிழரசுக்கட்சி முடிவுபற்றி ஐ. தே. கட்சி பிரதிநிதிகள் சிலர் அடுத்த அரசாங்கப் பாராளுமன்றக் குழுவின் கூட்டத்தில் ஆட்சேபம்தெரிவிக்க தீர்மானித்துள்ளனர்'.

—எத்த (29-6-65).

### மீண்டும் ஆங்கிலம்

'கல்வித் திணைக்களத்தில் பாடசாலைச் சட்டப்பகுதி அலுவல்கள் இதுவரை சிங்களத்தில் நடத்தப்பட்டதெனினும், இப்பொழுது படிப்படியாக ஆங்கிலத்துக்கு மாறிவருகிறது.

இந்த திணைக்களத்தில் சிங்களத்தில் எழுதப்பட்ட 'பில்'கள் இப்பொழுது ஆங்கிலத்தில் எழுதிஅனுப்பப்படுகின்றன'.

—ஜனசத்திய (27-6-65).

## அஞ்சல் எழுது வினைஞர் சங்க 4-வது ஆண்டுக் கூட்டம்

சிங்களத்தேர்ச்சி அற்றவர்களுக்கு கட்டாய ஓய்வு உத்தரவுகளை கடந்த அரசாங்கம் வழங்கியது. இவ்வுத்தரவுகளை நீக்கியமைக்காக தேசிய அரசாங்கத்தை பாராட்டுகிறேம். அதே வேளையில் சிங்களத்தேர்ச்சி பெருதவர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சம்பள உயர்வுகளையும், பதவிஉயர்வு வேலை உறுதிப்பாடு முதலியவைகளையும் அரசாங்கம் உடனடியாக வழங்க வேண்டுமென்று அஞ்சல் எழுது வினைஞர் சங்கம் ஏகமனதாகக் கேட்டுக்கொள்கிறது.

கடந்த சனிக்கிழமைநடைபெற்ற அஞ்சல் எழுதுவினைஞர் சங்க நான்காவது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தீர்மானம் செய்யப்பட்டது. மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நடப்பு வருடத் தலைவராப் மீண்டும் தெரிவு செய்யப [illegible] முதலி அவர்கள் பேசும் போது பல இக்கட்டுகளையும் கடந்த காலங்களில் ஒற்றுமையுடன் சமாளித்தோம். இனி மேல் உள்ள காலங்களிலும் சங்கம் தனது கடமையைச்சரிவரச்செய்ய உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. வே. கனகசபை முதலி, துணைத்தலைவர்: திரு. சி. பெரியதம்பி. பொதுச்செயலாளர்: திரு. ஆ. வி. கனகரத்தினம், துணைச் செயலாளர்: திரு. வே. குமரகுரு, பொருளாளர்: திரு. செ. அருச்சுனு, துணைப் பொருளாளர்: திரு. மு. வேலுப்பிள்ளை.

பதினெரு பேரைக் கொண்ட ஆட்சிக் குழுவினரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## கொழும்பு முனிசிபல் தேர்தலில் போட்டி

அடுத்த டிசம்பர்மாதத்தில் நடைபெறவிருக்கும் கொழும்பு மாநகரசபைத் தேர்தலைமுன்னிட்டு 7 கட்சி-கூட்டரசாங்கத்திலே திரு. பிலிப்குணவர்தன, தமிழரசுக்கட்சி, ஐக்கியதேசியக் கட்சி ஆகியோரிடையே ஒரு நெருக்கடி தோன்றியுள்ளது என்று 'ஜனமத்தய' என்னும் இடதுசாரி சிங்கள வாரப்பத்திரிகை 25-6-65ந் திகதி ஒரு செய்தி வெளியிட்டுள்ளது.

அச் செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது:-

'கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் சில வட்டாரங்களில் போட்டியிட தமிழரசுக்கட்சி உத்தேசித்துள்ளது. திரு. பிலிப் குணவர்தனவும் சில வட்டாரங்கள் மீது கண் வைத்துள்ளார்.

இவர்கள் போட்டியிடவிருக்கும் ஆசனங்களிற் சில ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் ஏற்கனவே பிரதிநிதித்துவம் தாங்கும் வட்டாரங்களாகும். அவர்களின் கோரிக்கைக்கு இடமளிக்க வேண்டுமெனக்கூறும்கோஷ்டிக்கும் வேண்டாமெனக் கூறும் கோஷ்டிக்குமிடையே சிக்கித் தவிக்கிறர் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா'.

## போகாத ஊருக்கு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பலம் கட்சியினர் சிந்தித்திருக்கிறர்களா?

வட்டமேசை மாநாடு தோல்வியில் முடிந்தால் தேசிய அரசாங்கம் உருக்குலையும். அடுத்து போராட்டத்தில் குதிக்கவும் தயாராக இருக்க வேண்டும். அதற்கு பொன்னம்பலம் கட்சியினர் தயாரா?

இலண்டனில் கூடிய வட்டமேசை மாநாடு தோல்வியில் முடிந்ததும் இந்திய காங்கிரஸ் நேரடி நடவடிக்கையில் இறங்கியதைப் பொன்னம்பலம் கட்சியினர் அறிவார்களா? வட்டமேசை மாநாட்டின் தோல்வி கட்டுப் பாடற்ற வகுப்புவாதத்தை நாட்டில் கட்டவிழ்த்துவிடும் என்பதை இவர்கள் உணருகிறர்களா?

இவற்றையெல்லாம் சிந்திக்காது வெறுமானே வட்டமேசை மாநாடு என்று கூறிவிட்டால் அது நிரந்தர பரிகாரமாகமட்டாது. எனவேதான் இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் தமிழ் பேசும்மக்களின் பிரச்சினைகளுக்குக் காணவிருக்கும் நிரந்தர பரிகாரத்துக்கு நல்ல பாதை அமைக்கிறர்கள். அப்பாதையில்பல தற்காலிகத் தீர்வுகள், இடைக்கால உடன் பாடுகள் ஏற்படவே செய்யும். இதைத் தான் இந்திய நாட்டின் விடுதலை வரலாறும் அண்ணல் காந்தியடிகளின் அகிம்சா மார்க்கமும் காட்டுகின்றன.

### தாக்குவது யாரை?

இடைக்கால ஏற்பாட்டின் ஒரு படியே மாவட்ட சபை. இதைத் தேசிய அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அரியணை உரையிலும் குறிப்பிட்டுள்ளது. அதை முழுமனதாக ஆதரித்து வாக்களித்த பொன்னம்பலம் கட்சியினர் இன்று பொதுமேடைகளில் மாவட்ட சபைத் திட்டத்தைக் கண்டிக்கிறர்கள். மாவட்ட சபைத்திட்டத்தைக்கண்டிப்பது தமிழரசுக் கட்சியையல்ல, தேசிய அரசாங்கத்தைக்கண்டிப்பதற்கு சரியாகுமென்பதை பொன்னம்பலம் கட்சியினர் உணர வேண்டும்.

போகாத ஊருக்கு வழி காட்டுவதுபோன்று பொறுப்பற்ற முறையில் பேசுவதை இனியாவதுபொன்னம்பலம் கட்சியினர் நிறுத்துவார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் உடலமைப்பின் மர்மங்கள்

ஆணுக்கும், பெண்ணுக்கும் சில வேற்றுமைகள் இருக்கின்றன என்பது வெளிப்படையான கருத்து. பொதுவாக, பெண்களைவிட ஆண்கள் உலகியலை நன்கு அறிந்தவர்கள் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். பெண்களும் நல்ல மதிநுட்பம் உடையவர்கள் தாம். உதாரணமாக, பெண்கள் பொருட்களைத் தராதரம் பார்த்து வாங்குவதில் நல்ல திறமைசாலிகள். அவர்களுக்கு நல்ல கல்வி வசதி அளித்தால், அவர்களும் ஆண்களைப் போல் திறமையாகக் காரியங்களை நடத்த முடியும்.

ஆண்களின் வாழ்க்கையைப் பெண்களும், பெண்களின் வாழ்க்கையை ஆண்களும் நிறைவு பெறச் செய்கிறார்கள். இன்ப வாழ்விற்கு இருபாலரும் தேவை. ஆண்களுக்கு மற்றைய காரியங்களில் நல்ல அறிவு இருந்தாலும், பெண்கள் இயல்பை அவர்கள் நன்ருய் அறிந்து கொள்வதில்லை. விவாகமாகி, பத்து பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்பும் மனைவியின் இயல்பைத் தெரிந்து கொள்ளாத கணவர்கள் எவ்வளவோ பேர் இன்றும் இருக்கின்றனர். இதற்கு மாருக, அதிகமான பெண்கள் ஆண்களை எளிதில் விளங்கிக் கொள்ளுகின்றனர்.

### ஆணின் இயல்பு

ஆண்கள் பெண்களை நன்கு அறிந்து கொள்ளாமல் போவதற்குக் காரணம் உண்டு. ஆண்களின் இயல்பு எளிதான, மாறுபாடற்ற ஒன்று. நாள் தோறும், ஆண்டு தோறும் அவன் வாழ்க்கை முறை ஒரே மாதிரியாகப் போகிறது. பெண்களைப் போன்று பல தரப்பட்ட சிரமங்கள் அவனுக்கு இல்லை. அதனல் ஒரு பெண்ணின் பிரச்சினைகளை அவன் எளிதில் அறிய முடிவதில்லை. பெண்களின் உடற்கூற்று தத்துவத்தைப் பற்றி ஒரு சிறிதளவேனும் தெரிந்திருந்தால் அன்றி அவனல் அவர்களைப் புரிந்து கொள்ள முடியாது.

ஆணுக்கும், பெண்ணுக்கும் பாலினச் சுரப்பிகளை (Sex Glands) தவிர (அதாவது சினைப்பை (Ovaries) பீஜம் (Testes) ) உடல் உறுப்புக்கள் யாவும் ஒன்று போலவே அமைந்திருக்கின்றன, ஒன்று போலவே வேலையும் செய்கின்றன. அப்படியாளுல் இருபாலாருக்கும் உள்ள வேற்றுமைக்குக் காரணம் என்ன?

பெண்களின் உடல் இளமைப் பருவம் எய்தும்போது பல மாறுதல்களை அடைகின்றது. அப்போது, அவர்களுக்கு அவர்களை அறியாமலே மனக்கலக்கமும், உணர்ச்சிக் குழப்பங்களும், குணபேதமும் உண்டாகின்றன. இது ஆண்களுக்குத் தெரிவதில்லை. பெண்கள் பலவினமானவர்கள் என்ற காரணத்தால் தான், அவர்கள் சுபாவம் அடிக்கடி மாறுகிறது என்று எண்ணுகிருர்கள். இது தப்பான எண்ணமாகும்.

### ஹார்மோன்கள்

பெண்களின் உடம்பில் ஏற்படும் மாற்றங்களுக்கு விடை தெரியவேண்டுமாளுல் என்டோக்ரைன் கிளான்ட்ஸை (Endocrine Glands) பற்றி அறிய வேண்டும். உடம்பின் உட்புறத்தில் இருக்கும் இந்தச் சின்னஞ் சிறிய உறுப்புக்களில் தான் ஹார்மோன் (Hormone) என்ற நீர் உற்பத்தியாகிறது. இந்தச் சுரப்பிகளைப் பற்றி சில ஆண்டுகட்கு முன்புதான் உடல்நூல் வல்லுநர்கள் கண்டு பிடித்தார்கள். உடல் வளர்ச்சிக்கும் உடலில் உண்டாகும் மாறுதல்களுக்கும் காரணம், அகச் சுரப்பிகளில் உற்பத்தியாகி, நேராகக் குருதியுடன் வந்து கலக்கும் ஹார்மோன்களே எனக் கண்டு பிடித்திருக்கிருர்கள். இந்த ஹார்மோன்களெல்லாம் இரசாயனப் பொருட்களே. இவை மகா சக்தி வாய்ந்தவை.

பல விதமான சுரப்பிகள் மனித உடலில் இருக்கின்றன. ஆனல் மற்றெல்லாச் சுரப்பிகளையும் விட மனிதப் பண்பிலும், சுபாவத்திலும் அதிக மாறுதல்களை உண்டாக்கும் சுரப்பிகள் பாலினச் சுரப்பிகளே. பெண்களின் கருப்பையின் (Uterus) இரு பக்கங்களிலும் ஒவ்வொரு சிறு பை இருக்கிறது. அவை ஏறக்குறைய ஒன்றரை அங்குல நீளமும், ஒரு அங்குல அகலமும், வாதுமைக் கொட்டையைப் போன்ற உருவமும் உடையவை. அவற்றை கருக்கூடுகள், சினைப்பைகள், முட்டைப் பைகள் (Ovaries) எனப் பலவாறு அழைப்பர். பொதுவாக, பன்னிரண்டு வயதிற்கு மேல் சினைப்பைகள் செயலாற்றத் தொடங்குகின்றன. சில பெண்களுக்கு இதற்கு முன்பே அவை செயலாற்றத் தொடங்கலாம்.

எழுதியவர்:
**க. துரைராஜா பி. எஸ்ஸி.**

### சினைப்பையின் தொழில்

சினைப்பைகள் இரண்டு வேலைகளைச் செய்கின்றன. ஒன்று, ஒரு சிறுமி, 'பருவ மங்கை' ஆக வேண்டிய காலம் வந்ததும், அவை இருவகை ஹார்மோன்களை அதாவது, எஸ்ட்ரோஜென் (Oestrogen) புரோஜெஸ்டெரோன் (Progesterone) முதலியவைகளைச் சுரக்கின்றன. இந்த ஹார்மோன்கள் வெவ்வேறு விதமான தொழில்களைச் செய்கின்றன. இவையிரண்டும் ஒரே இடத்தில் உற்பத்தியாகியும், மாதத்தில் ஒரே சமயத்தில் உச்ச நிலையடைவதில்லை. ஒன்று ஒரு சமயத்திலும், மற்றது வேருெரு சமயத்திலும் உச்ச நிலை அடைகின்றன.

### கவர்ச்சியும் அழகும்

எஸ்ட்ரோஜென் என்ற ஹார்மோன் இரத்தத்துடன் கலந்து, உடலெங்கும் சென்று பெண்மை உறுப்புக்கள், இழையங்கள் யாவற்றையும் கிளப்பி விடுகின்றது. ஆகவே, இப் பருவத்தில் பெண்களின் உடம்பு தீவிரமாக வளரத் தொடங்குகிறது. உடல் அழகாகவும், வசீகரமாகவும் வளர்ச்சியடைகின்றது. அவளிடத்தில் ஓர் புதிய கவர்ச்சி மிளிர்கிறது. சினைப்பைகளின் அருகில் இருக்கும் பெண்மை உறுப்புக்கள் தத், தம் தொழிலைச் செய்யத் தயாராகின்றன. இந்த இரசாயன நீர் (ஹார்மோன) பெண்களுக்கு ஏறக்குறைய நாற்பத்தைந்து வயது மட்டும் ஊறிக்கொண்டேயிருக்கும்.

சினைப்பையின் இரண்டாவது வேலை சுரோணித முட்டையை (Ovum) தோற்றுவிப்பதாகும். முட்டை வம்ச விருத்திக்கு மிக முக்கியமானது ஆனல் முட்டை மட்டும் இருந்தால் போதாது. ஆணின் சுக்கில உயிரணு (Sperm) ஒன்றும் தேவை. அது பெண்ணின் உடலில் வந்து சேர்ந்து, முட்டையோடு கலக்க வேண்டும். அப்படிக் கலப்பதால் உண்டாவதைக் கர்ப்பம் என்கிறோம்.

### சிக்கலான காலம்

மாதவிடாய் காலங்களில் சில மகளிருக்கு உடல் நலம் குன்றலாம, சோர்வாக இருக்கலாம், வலியும் ஏற்படலாம். இவ் வலிக்குக் காரணம், சிதைவடைந்த சவ்வுத் துண்டுகளை வெளியேற்றக் கருப்பை வலிந்து சுருங்குவதாகும். இந்த தொந்தரவுகள் பிள்ளை பெற்ற தாய்மார்களைக் காட்டிலும் கன்னிப் பெண்களுக்கே அதிகமாக ஏற்படும். இக் காலத்தில் கடுமையான வேலை செய்யவோ, பாரமான பொருட்களைத் தூக்கவோ கூடாது. இக்காலங்களில் குடும்பத்தின் ஏனையோர் அவர்களைக் கோபிக்கக் கூடாது. ஏனென்ருல் அவர்களுடைய இரத்தம் சமமான நிலையில் இல்லை. பெண்கள் உடலில் உண்டாகும் மாறுதல்களையும், தொந்தரவுகளையும் அறிந்து, சலுகை அளித்து, சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு நடந்தால் குடும்பங்களில் சண்டை, சச்சரவுகள் ஏற்படாது, மகிழ்ச்சி நிலவும்.

பாலினச் சுரப்பிகளில் உற்பத்தியாகும் ஹார்மோன்களே மகளிரின் உடல் மட்டுமன்றி உள்ளத்திலும் பல மாறுதல்களைக் கொண்டு வருகின்றன. பெண்கள்

(14-ம் பக்கம் பார்க்க)

## இல்லாளுக்குச் சில யோசனைகள்

—செல்வி நளினி-நாதன்—

(1) நிலைக்கண்ணுடி அல்லது கண்ணுடி யன்னல்களைச் சுத்தம் செய்ய ஒரு சிறு சுண்ணும்புக் கட்டியைத் (CHALK) தூளாக்கி, அத்துடன் சிறிது நீரை அல்லது மண்ணெண்ணெய் அல்லது மெத்திலேற்றட் ஸ்பிரிட் (METHYLATED SPRIT) கலந்து, அந்தக் கலவையைக் கண்ணுடியின் மீது பூசிவிடவும். உலர்ந்த பின்னர் ஒரு பழைய துணி அல்லது பத்திரிகையினல் துடைத்து விடவும்.

(2) குளிக்கும் அறையிலுள்ள கண்ணுடியைச் சுத்தம் செய்யும் போது, கடைசியில் சிறிது கிளிசெறின் நனைக்கப்பெற்ற துணியினல் துடைப்பதால், கண்ணுடி மீது நீராவி படிதலைத் தடுத்துக் கொள்ளலாம்.

(3) கம்பளிச் சட்டையில் உள்ள மூலாம் பூசப்பட்ட பித்தான்கள் கறுத்துப் போகாது இருப்பதற்காக அவற்றின் மீது சிறிது நகப் பூச்சைத் (NAIC POLISH) தடவி விடலாம்

(4) கண்ணுடி யன்னல்களைச் சுற்றிலுமுள்ள பகுதிகளுக்கு வாணம் தீட்டும் போது, மை கண்ணுடி மீது படியாது பாதுகாப்பதற்குக் கண்ணுடி மீது சிறிது மண்ணெண்ணெய் பூசிவிடுக.

(5) இஸ்திரிப் பெட்டியைப் பாவிக்கும் போது, அதன் அடிப்பாகத்தில் கஞ்சி ஒட்டித் தொல்லை தருவதைத் தவிர்க்க, அதன் அடிப்பாகத்தில் சுற்று வெண்மெழுகை பூசிவிடவும்.

(தொடரும்)

## மங்கையர் சங்கம்

# உடல் உழைப்பு இளமையைக் காக்கும்

20 ஆண்டுகளுக்கு முன்னர், குண்டு வீச்சினல் நாசமடைந்த ஜெர்மன் நகரங்களில் குவியல் குவியலாகக் கிடந்த இடிபாடுகளை அகற்றி நகரங்களைச் சுத்தம் செய்வதற்காக, 'தொண்டர் படை' ஒன்று அமைக்கப்பட்டது. பெர்லினைச் சேர்ந்த மரியா குளோகா, இந்தப் பெண் தொண்டர்களில் ஒருவர். இடிந்து கிடந்த கட்டிடங்களில் இடிபாடுகளுக்கிடையில் சிக்கிக்கிடந்த கற்களைத் தனியாகப் பொறுக்கி எடுத்து, இடிந்த கட்டிடங்களை மீண்டும் கட்டுவதற்கு இந்தப் பெண் வழங்கி வந்தார்.

பெர்லின் நகரில் புனர்நிர்மாண வேலையில் ஈடுபட்டிருந்த ஒரு பிரபலக் கட்டுமானக் கம்பெனியில் குளோகா முதலில் கட்டிடத் தொழிலாளியாகச் சேர்ந்தார். அப்போது அவருக்கு வயது 30 எந்த வேலையையும் மகிழ்ச்சியோடும், முகமலர்ச்சியோடும் செய்து கடுமையாக உழைத்து எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்றுவரும் குளோகா கட்டுமான வேலைகளில் ஒரு நிபுணர் எனலாம்.

குளோகாவுக்கு இன்று 46 வயதாகிறது. கட்டிடங்களை இடித்து, கற்களை உடைக்கும் கடினமான வேலைகளைச் செய்து வந்தாலும், குளோகா இன்றும் இளமை மாருமல் 16 வயது நங்கை போல் எழில் குன்ருமல் கவர்ச்சியாக உலா வருகிருர். மாலை 4 மணிக்கு வேலை முடிந்து விட்டால், கண் கவர் உடையுடன் அனைவரையும் கவர்கிருர். அப்போது அவரைப் பார்க்கும் போது வயதின் முதுமையோ கடும் உழைப்பின் அசதியோ சிறிதும் தோன்ருது. 'கடுமையான உடலுழைப்புத் தான் கட்டான உடலுக்கும், மாருத இளமைக்கும் காரணம்' என குளோகா கூறுகிருர்.

குளோகாவுக்கு குழந்தைகளும் பேரக் குழந்தைகளும் கூட உண்டு. 'என் கணவரின் சம்பாத்தியமே என் குடும்பத்திற்குப் போதும். நான் வேலை பார்க்க வேண்டிய அவசியமில்லை. எனினும் என்னல் வேலைக்குச் செல்லாமல் இருக்க முடியவில்லை' என்கிறார் குளோகா.

## கட்டுப்பணம்

குலுக்கு குலுக்கு விட்டபடி பஸ் நிலையத்தில் வந்து நின்றது பஸ். அங்கு நின்றவர்களில் முதல் ஆளாக முண்டியடித்துக் கொண்டு ஏறிநின்ற எனக்கு, அந்த மூலையில் ஒரே ஒரு 'ஸீட்' காத்துக் கிடந்தது. வெற்றிப் பெருமிதத்துடன் சென்றமர்ந்தேன்.

இருக்கையில் ஏதோ ஒரு பொருள் அழுத்தியது. 'என்னவாக இருக்கும்? மெதுவாகக் கையைப் பின்னல் விட்டுத் துளாவினேன். ஏதோ ஒரு கனமான பொருள்; 'மணி பேர்ஸை'ப் போலவே இருந்தது. தோள் பட்டையைத் தடவிக் கொடுப்பதைப் போல மெதுவாகப் பின்னல் திரும்பிப் பார்த்துவிட்டேன்! ஆமாம், இது ஒரு மணிபேர்சேதான்; சற்றுக் கனமாகப் புடைத்திருந்தது. என் உடல் புல்லரித்தது! ரோமங்கள் குத்திட்டன.

'என்னடா இது, கூரையைப் பொத்துக் கொண்டுகொடுக்கிறதோ கடவுள்? எப்படியும் அதை எடுத்துவிட்டால்? எத்தனை ஆயிரமோ! லட்சமோ?' என்மூளை விறு விறுவென்று வேலை செய்தது. எல்லாம் அதை எப்படிக் கடத்துவதென்பதைப் பற்றித்தான்.

**நிமிடக் கதை**

வாதிப் பிரதிவாதியாக நானே வாதித்தேன். முடிவு? அதை எப்படியும் எடுத்துவிடுவது! நிமிர்ந்து பார்த்து பஸ்ஸை ஒரு நோட்டம் விட்டேன். ஒருவரும் என்னைக் கவனித்ததாகத் தெரியவில்லை. என் கை பின்னல் போவதும் வருவதுமாகவே இருந்தது. மனத்தைப் பீதி கௌவிக் கொண்டது. கால் சட்டையின் பின் பக்கட்டில் கைவிடுவதைப் போல மெதுவாக அதை எடுத்தேவிட்டேன். அடுத்தகணம் என் கால் சட்டைப் பையில் பர்ஸ் நுழைந்து கொண்டது! வெளியில் வந்த கை வெறுமனே வரவில்லை. அங்கிருந்த கைக் குட்டையுடன் வந்தது. வியர்த்துக் கொட்டிய உடம்பு, துடைத்துக் கொண்டேன்.

பர்ஸ்' உரிமையாளன் என்னைக் கண்டு கொண்டு, என்னைப் போலீசுக்குக் கூட்டிச் செல்வது போல் எண்ணிப் பார்த்தேன். உடல் நடுங்கியது. 'சரேல்' என எழுந்து நிறுத்தும் மணியை அடித்து இறங்கிவிட்டேன். பக்கத்திருந்த ஒரு ஹோட்டலுள் நுழைந்து 'லைட் டீ' என்று அதிகாரத்துடன் குரல் கொடுத்த பின் பர்ஸை வெளியில் எடுத்து அதைத் திறந்தேன். ஒரு கட்டே இருந்தது! 'ஓகோ பணத்தைக் கட்டியா வைத்திருக்கிருர்கள். என்றபடி உருவி வெளியிலெடுத்து'ப் பிரித்தேன்!

"ஆ! என்ன இது வெறும் சினிமா போஸ்டர்கள்?" என் தலை விண்ணென்று கனத்தது. டீயை மட மட வென்று எடுத்துக் குடிக்கவும் டீக்கான பில்லை சர்வர் கொண்டு வரவும் சரியாக இருந்தது! சட்டைப் பைக்குள் கையை விட்ட நான் தேள் கடித்தது போல் கையை உதறினேன்! ஆமாம்! பஸ்ஸுக்குக் கொடுத்து மீதியிருந்த சில்லறையும் வேறு சில நோட்டுக்களும் இருந்த என் பை காலியாக இருந்தது. டீக்கான பில் காற்றில் பறந்து கீழே விழுந்தது!

மு. சுப்பிரமணியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மீன் பண்ணை

# நெல் வயலிலும் மீன் வளர்க்கலாம்

## முன்னோடிகளுக்கு அரசாங்க ஆதரவும் உண்டு

**எஸ். ஆர். சிறீதரன் பி. எஸ்சி.,**
நிருவாகச் செயலாளர்,
யாழ்.கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

இந்தப் பண்ணைகளில் முதலில் ஒன்றரை அடிவரைக்கும் தண்ணீர் விட்டு மீன்களின் உணவான நுண்ணுயிர்களை வளர்க்க வேண்டும். இப்படியான பண்ணைகளில் வளர்க்கப்படுவதும் காணப்படுவதுமான நுண்ணுயிர்களாவன, ஒசிலட்டோறியா (Oscillatoria) அனபேனு (Anabaena) கொரூகொக்கள் (Chroococcus) புளூரோசிக்மா (Pleurosigma) பினனுலேறியா (Pinnularia) கிளாடோபோர் (Cladophore) என்றிரோமோபா (Enteromorpha) வல்வெக்ஸ் (Volvex) போன்றவைகளும் இன்னும் பிறபலவும் இவையனைத்தும் தாவர உலகைச் சேர்ந்தவையாகும்.

### நுண்ணுயிர்கள்

உயிரியல் உலகைச்சேர்ந்த பல புழுக்கள், நுண்ணுயிர்கள் போன்றவையும் காணப்படும். இவை அனைத்தும் பண்ணைகளில் மீன்களை வளர்வதற்கு விட முன் நன்றாக வளர்க்கப்பட வேண்டும். இவைகளை முதலில் வேறொரு இடத்திலிருந்து கொண்டு வந்து விதைக்க வேண்டும். இரசாயனப் பசளை, நைதரசன், பொஸ்பரசு, பொட்டாசு கலந்த கலவைகளை இட்டும் அல்லது விலங்குகளுடைய மலம்—பன்றி, மாடு, கோழி ஆகியனவற்றின் மலங்களையிட்டும்—இத்துடன் கொம்பசிற்ரே இனத்தைச் சேர்ந்த சில செடிகளின் தழைகளையிட்டும் நுண்ணுயிர்களை நன்றாக வளர்க்கலாம்.

சீனு, கொங்கொங், மலாயா தேசங்களில் மலகூடங்களை இப்பண்ணைகளுக்குமேல் அமைத்துள்ளார்கள். இவை நுண்ணுயிர்களை வளர்க்க உதவுகின்றன. கோழிக்கூடுகளையும் பண்ணைகளுக்குமேல் கட்டிவிடலாம். இந்த மலங்கள் நுண்ணுயிர்களை செழித்து வளர்வதற்கே இடப்படுகின்றன. சில இன மீன்கள் இந்த மலங்களையும் உண்ணும் தன்மை உடையன. மீன்கள் உண்ணுவது போக எஞ்சியது நுண்ணுயிர்கள் வளர்வதற்கு உதவியாகும்.

### பசளை

பண்ணைகளுக்கு பசளையிடுவோர் மிகவும் கவனமாக இடவேண்டும். கூடுதலாக இட்டால் மீன்கள் இறந்துபட நேரிடும். நுண்ணுயிர்கள் அதிகமாக (Blue, Green, Algae) இருக்கின்றன என்றால் பாசிகள் நண்பகலில் தண்ணீரின் மேல் தளத்தில் காலை, மாலை, இரவில் அடித்தளத்திலும் காணப்படும். மேலும் தண்ணீர் பச்சையாக இருந்தால் நுண்ணுயிர்கள் அதிகமாக உள்ளன என்பது தெளிவு. இப்படியாக நுண்ணுயிர்கள் செழித்து வளர்ந்த பின்பே மீன்களைப் பண்ணையுள் வளர விடவேண்டும்.

பண்ணையாளர்கள் ஓடும் ஆறுகளில் இருந்தும், வேறு மீன் குஞ்சு வியாபாரிகளிடமிருந்தும், மீன் குஞ்சுகளைப் பெறுகின்றார்கள் (இலங்கையில் கடற்றொழில் இலாகாவிடம் மனுச் செய்தால் பெறலாம்) சீனுவிலிருந்து மீன் குஞ்சுகள் மலாயா போன்ற தேசங்களுக்குக் கொண்டுவரப்படுகின்றன. இப்படிக் கொண்டு வரும் பொழுது 30ல் இருந்து 60 சத விதம் வரைக்கும் குஞ்சுகள் இறந்து படுகின்றன. இப்படி இறந்து படுவதற்கு பல காரணங்கள் உள்ளன. பக்குவமாகக் கையாளாவிட்டாலும், அழுக்கு நீரினாலும், சூட்டினாலும், நெருக்கத்தினாலும், உயிர்வளி இன்மையினாலும், அதிக உணவு இடுவதால், தண்ணீர் கெடுவதினாலும் இந்த இறப்பு நேரிடுகிறது. இக்காரணங்கள் பண்ணைகளில் பெரிய மீன்களின் இறப்புகளுக்கும் காரணமாகலாம். ஆதலால் பண்ணையாளர்கள் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும்.

### மீன் குஞ்சுகள்

சீனு தேசத்திலிருந்து குஞ்சுகள் கொண்டு வரும் பொழுது பெரிய பரத் தொட்டிகளில் அவைகளை விட்டு துடுப்புப் போன்ற பலகையால் ஒவ்வொரு தொட்டிகளின் மேல் பரப்புத் தண்ணீரிலும் அடித்துக் கொண்டுவருவார்கள். இது உயிர் வளி தண்ணீருள் எந்நேரமும் இருப்பதற்காகும்.

தற்காலத்தில் அறிவியல் வளர்ந்துவிட்டபடியால் ஆகாய விமான மூலம் மீன் குஞ்சுகளை ஒவ்வொரு நாட்டிலிருந்து வேறு நாட்டிற்கு எடுத்துச் செல்கின்றார்கள். இதற்கு மீன் குஞ்சுகளை பெரிய தகரங்களில் விட்டு அடைத்து அனுப்புகின்றார்கள். தகரத்தின் ஒருபகுதி உயிர் வளியினால் நிரப்பப்பட்டிருக்கும். இல்லாவிட்டால் குளாய் மூலம் தண்ணீருள் உயிர்வளி அனுப்பிய வண்ணம் கொண்டு வருவார்கள். தகரங்களுள் குஞ்சுகள் அடைக்கப்படுமுன் ஒருநாள் பட்டினி போட்ட பின்பே அடைப்பார்கள், வயிற்றில் நிறைய உணவு இருப்பின் தண்ணீர் விரைவில் பழுதடைந்து குஞ்சுகள் இறக்க நேரிடுகின்றது. இந்த அறிவியல் முறையால் குஞ்சுகள் இடமாற்றம் செய்யும் பொழுது இறப்பது பெரிதளவு குறைக்கப்பட்டுள்ளது.

பண்ணையின் அளவிற்கேற்ப குஞ்சுகளை வாங்கி முதலில் சிறு தொட்டிகளில் விட்டு வளர்ப்பார்கள். இவைகளுக்கு தவிடு, முட்டைத் தூள் முதலியன உணவாகும். இத்தொட்டிகளுள் நல்ல சாப்பாடு போட்டு வளர்த்தாலும் ஒரு அளவுக்கு மேல் மீன்கள் வளருவது குறைவு. ஆதலால் குஞ்சுகள் மூன்று மூன்றரை அங்குல மடைந்தவுடன் பண்ணைகளுள் விட்டு விடவேண்டும். மீன் குஞ்சுகள் பண்ணைகளுள் விட்டபின் நாளொருவண்ணம் பருத்து வளர்வதைக் காணலாம். பண்ணையுள் நுண்ணுயிர்கள் நிரம்பி இருப்பதால் மீன்கள் நன்றாக பருப்பது இயற்கையே. இந்த நிலையில் மிகவும் கவனமாகப் பார்த்து எருவிட்டு வரவேண்டும்.

எந்தப் பசளை [illegible]றதோ அதை இடவேண்டும். தண்ணீரின் நிறம் பச்சையாக இல்லாவிட்டால் நுண்ணுயிர்கள் குறைந்து விட்டது என்பது பொருள், ஆதலால் வேண்டிய பசளையிட்டு தண்ணீரைப் பச்சையாகவே வைத்திருக்க வேண்டும். சில சமயங்களில் மீன்கள் தண்ணீரின் மேற்பரப்பிற்கு வந்து கூடி, வாயால் காற்றைச் சுவாசிக்கும். இப்பொழுது தண்ணீரில் உயிர் வளி குறைவாக உள்ளது என்பது பொருள். இப்படியாயின் புது நீரை உள்ளே விட வேண்டும். அல்லது தண்ணீரில் நீண்ட தடியால் அடிக்க வேண்டும்.

சீனு, மலாயா தேசங்களில் நீண்ட மூங்கிலால் தண்ணீரின் மேற் பரப்பில் அடிப்பார்கள். இப்படி அடிப்பதனால் உயிர் வளி (Oxygen) தண்ணீருள் கூடுகின்றது. மீனகளுக்கு நுண்ணுயிர்களை விட, தவிடு, கோதுமைமா, அவரைவிதை, சேக் முதலியனவும் கீரை, புல் முதலியனவும் இட்டு வளர்க்கப்படும். சில பண்ணைகளில் தேங்காய்ப் புண்ணாக்கும் மீன்கள் கொழுப்பதற்காக போடப்படுகின்றது.

மீன்களைப் பிடித்து விற்பது மீனுடைய இனத்தைப் பொறுத்தது. சில மீன்கள் ஆறு மாதத்திலும் வேறு சில ஒன்பது, பத்து மாதங்களிலும் சில ஒரு வருடத்திலும் இன்னும் சில ஒன்றரை வருடத்திலும் பிடித்து விற்கப்படுகின்றன. அதிகமாக சினர்களால் வளர்க்கப்படும் மீன்கள் காப்ஸ் (Carps) என்று சொல்லப்படும். அல்லது குரமி (Gourami) என்று சொல்லப்படும் மீன் வகைகளாகும். இவைகளை விட பாலை மீன் (Milk Fish or chanos) கயல் மீன் (Mullet) இவையில் பல இனங்கள் உண்டு:- அல்லி, மணலை, செங்கண்ணன், பெருந்தலை, வெருகா முதலிய இனங்களும் பண்ணைகளுள் வளர்க்க ஏற்ற வகைகளாகும்.

### மீனை உண்டு வாழும் மீன்

மீன் குஞ்சுகளை பண்ணைகளுள் விடும் பொழுது மீன்களையே உண்டு வாழும் இன மீன்குஞ்சுகள் இல்லாது பார்த்துக் கொள்ள வேண்டும். அஃதின்றி அந்த இன மீன் குஞ்சு ஒன்று போனாலும் அதிக சேதம் விளைவிக்கும். ஒரு வருடத்திற்குள் அது தன்னுடைய நிறையைப் போல எழுபது மடங்கு கூடுதலான நிறையுள்ள மீன்களை உட்கொண்டு பெரிய சேதம் விளைவிக்கும்.

நான்கு இறுத்தல் 'கொடுவாய்' மீன் நான்கு றுத்தல் மீனாக வளர்வதற்கு 280 றுத்தல் வேறு மீன்களை உணவாகக் கொண்டே நான்கு றுத்தலாகின்றது. ஆதலால் திலப்பியா (Tilapia) இது இலங்கை அரசாங்கத்தால் [illegible] கொண்டுவரப் பட்ட ஒரு இன மீனாகும். விரால், கொடுவாய், விலாங்கு, போன்ற மீன் குஞ்சுகள் மற்றவைகளுடன் கலந்து பண்ணையுள் செல்லாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

### நெல்லுடன் மீன்

இப்படித் தனியே மீன் பண்ணைகள் வைத்து மீன்களை வளர்ப்பதை விட தைலாந்து, ஜாவா போன்ற நாடுகளில் வயல்களிலேயே மீன்களை வளர்த்து நெல்லுடன் மீனையும் அறுவடை செய்கின்றார்கள். இங்கே வயல்களின் ஓரங்களில் இரண்டு மூன்று யார் அகலமான மூன்றரை அடி ஆழமான வாய்க்கால் இருக்கும். வயல்களின் ஊடேயும் சில வாய்க்கால்கள் இருக்கும். வயலில் நிறையத்தண்ணீர் இருக்கும் போது மீன்கள் வயல் முழுவதும் சென்று உணவு உட்கொண்டு வரும். தண்ணீர் குறையும் பொழுது அருகேயுள்ள வாய்க்காலுள் போய் விடும். இப்படியான முறையில் வளர்ப்பதற்கு பாலை மீன், கயல், திலப்பியா, குரமி, விரால், (Sepat Siam) 'சிபாற்சயம்' என்னும் இன மீன்கள் சிறந்தவையாகும்.

சிபாற்சயம் என்னும் இன மீன் தனது அலகுகளில் ஈரம் இருக்கும் வரை உயிருடன் இருக்கும் தன்மையுடையது. ஆதலால் இது வயல்களில் வளர்ப்பதற்கு மிகவும் சிறந்த தொருவகை மீனாகும். வாய்க்கால்கள் வெட்டுவதால் நெல் விளையும் பரப்பு குறையக்கூடும், ஆனல் அதில் குறையும் வருவாயை விட பல பங்கு கூடுதலாக மீன்களினால் இலாபமுண்டு. விவசாய நாடுகளில் (நெல்) எல்லாம் இந்த முறையைக் கையாளலாம். நெல்லுணவுடன் மீன் உணவும் சிரமம் ஏதுமின்றி இலகுவாக மக்களுக்குக் கிடைக்க ஏதுவாக இருக்கும். இலங்கையில் எல்லாப் பாகத்திலும் இந்த முறை கையாளக்கூடியது, இலாபகரமானது.

### அரசாங்க உதவியும் நடைமுறையும்

கோழிகள் பண்ணையில் வளர்ப்பது என்று முதன் முதல் சொல்லிய பொழுது எல்லோரும் கேலி செய்தார்கள். ஆனல் அறிவியலின் முன்னேற்றத்தால் அது உலகம் முழுவதும் பரவி

(14-ம் பக்கம் பார்க்க)

---

## சாதியைச் சாகடிப்போம்

முகிலன்

இன்றுள்ள தமிழர்தம் நிலையையிங்கு
  எடுத்துரைக்க என்கைகள் கூசும், ஐயோ!
என்றென்றும் நன்றாக வாழ்ந்து வந்த
  என் தமிழர் வாழ்வேனே மாறிற் றின்று?
நன்றென்று கூறுவதற் கெங்கட் குள்ளே
  நலமான அம்சம்தான் என்ன உண்டு?
குன்றியதே நமதுகுடிப் பெருமை யாவும்
  கூடிவரும் அறிவற்ற நெறியி னாலே

உலகினிலே மக்களிடை உயர்வு தாழ்வு
  உண்மையிலே இல்லையெனும் நிலை மறந்து
அளவற்ற சாதிமுறை கண்டோ மிங்கு
  அதனாலே அடைந்திட்டோம் தொல்லை கோடி
உலகினிலே தமிழர்குலம் தழைக்க வேண்டின்
  உடனடியாய் ஒழித்திடுங்கள் சாதிப் பேயை
இலகுவில் அதையொழிக்க முடியா தென்னும்
  எண்ணமதை அகற்றியுடன் முயல்வோம்
  வாரீர்.

அழகியவோர் மங்கையினைக் கண்ட போதே
  அன்பாகப் பேசிடுவோர் ஆசை மீற
தழுவிஉடல் முத்தங்கள் பலவு மீந்து
  தம்வாழ்வுக் கனவுகள் பலவும் காண்பார்
அழகியவள் குலம்தன்னை அறிந்தால் போதும்
  அகன்றிடுவார் அக்கணமே அவளை விட்டு
பழகிய அப்பாவையவள் வாழ்வு தானும்
  பாழாகிப் போய்விடுமே சாதி யாலே!

மைந்தனவன் தன்நண்பன் வீட்டில் ஓர்நாள்
  மகிழ்வுடனே விருந்துண்டு வந்தா னென்றால்
தந்தையிது கேட்டவுடன் தணலாய் நிற்பார்
  தாழ்சாதி யானுடனே உறவு என்பார்
நொந்துமனப் புண்ணாகத் தாயார் கூட
  நன்றாகத் தந்திடுவார் வாழ்த்துப் பாக்கள்
மொந்தைக்கள் உண்டங்கே களிக்கும் தந்தை
  மறந்திடுவார் தமதுகுலப் பெருமை தன்னை!

இவ்வுலகில் வாழ்கின்ற உயிர்கள் யாவும்
  இறைவன்தன் பிள்ளைகள் என்றே சொல்வார்
அவ்விறைவன் உறைகோயில் சென்றே யங்கு
  அன்புடனே அருமறைகள் ஓதி நன்கு
செவ்வியநற் பாதார விந்தம் வாழ்த்த
  சிலர்உரிமை இல்லாது தவிக்கின் றாரே!
இவ்விதமாய்க் கொடுமைபல சாதி யாலே
  இந்நிலையை மாற்றிடுவோம் வாரீர்! வாரீர்!!

[இளங்கவிஞர் முகிலன் அவர்களின் முதலாண்டு நினைவையொட்டி இக்கவிதை வெளியாகுகிறது. அவரின் நினைவு நாள் 2-7-65 ஆகும். இக்கவிதை அவர் இறப்பதற்குச் சில தினங்களுக்கு முன்னர் எமக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகும்.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1965 யூலை மாதம் 4-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலைபேசி எண் - 3411 த. பெ. 1183

# தமிழ்ப் பிரதேசங்களில் வேலையில்லாத் திண்டாட்டம்

வேலையில்லாத் திட்டாட்டம் நாளுக்கு நாள் கூடிக் கொண்டே வருகிறது. நாட்டின் பல பாகங்களிலுமுள்ள தொழில் பதிவுக்காரியாலயங்களில் தினசரி வேலையற்றோரின் பட்டியல்கள் வளர்ந்து கொண்டே வருகின்றன. விலைவாசி ஏற்றம், வாழ்க்கைச் செலவு வளர்ச்சி முதலிய பிரச்சினைகளுடன் வளர்ந்து வரும் வேலையில்லாத்திண்டாட்டமும் சேர்ந்து கொண்டு நாட்டின் வளர்ச்சியைத் தடைப்படுத்திக்கொண்டே வருகின்றது.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கடிக்க முன்னைய அரசாங்கம் எதுவித முயற்சியும் எடுத்ததாகக் கூறமுடியாது. வாக்குறுதிகளை அள்ளி வீசிய அளவுக்கு சுதந்திரக் கட்சி அரசாங்கமோ, பின்னர் பதவி ஏற்ற கூட்டரசாங்கமோ செயலில் ஈடுபடவில்லை. வேலையில்லாதோர் தொகையை வளர விட்டதும் கடந்த ஆட்சி கவிழ்வதற்கான ஒரு காரணம் என்றும் கூறலாம்.

இன்று பதவி ஏற்றிருக்கும் தேசிய அரசாங்கத்தின் முன்பாக வேலையில்லாதுதிண்டாடும் பெரும் தொகையினரின் பட்டியல் விரிக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலின் நீளத்தைக் குறைக்க வேண்டிய அவசரப்பணி தேசிய அரசாங்கத்தின் பொறுப்பில் உள்ளது.

பயங்கரமான சொரூபத்துடன் தோன்றும் இப்பிரச்சினையைத் தீர்க்க அமைச்சர்களைக்கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது. பலதரப்பட்ட யோசனைகளை இக்குழு அரசாங்கத்துக்குக் கூறியதாகச் செய்திகள் அடிக்கடி கூறின. ஆனால் கடந்த மூன்று மாதங்களில் உருப்படியான ஒரு நடவடிக்கை தானும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

ஏனைய இடங்களை விட தமிழ்பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் கோர உருவுடன் வளர்ந்துள்ளது கண்கூடு. ஆனால் இது வெளியில் தோன்றுவதில்லை. வேலையற்றிருப்பவர்கள் தங்கள் பெயர்களைத் தொழிற் காரியாலயங்களில் பதிவு செய்யாதிருப்பதும் இதற்கு ஒரு காரணமாகும். பல வருடங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தும், தொழில் கிடைக்காது ஏற்பட்ட ஏமாற்றங்கள், பதிவினைப் புதுப்பிக்க இடங்கொடுப்பதில்லை. இப்படி ஏமாற்றமடைந்து போயுள்ளோர் தொகையைக் கணக்கிடும் ஏனைய தொழிலற்றவர்கள் தொழில் பதிவுக் காரியாலயங்களின் செயலின்மையைக் கண்டு தங்களை பதிவு செய்யாது தவிர்த்து விடுகின்றனர்.

இது மட்டுமல்லாமல் முன்னைய அரசாங்கம்கடைப்பிடித்த வகுப்பு வாதக்கொள்கையினாலும் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் வேலையற்றோர் தொகை பெருகியது. உள்ளூராட்சி மன்ற அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் மலிந்துள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தையிட்டு அடிக்கடி அரசாங்கத்துக்குக் கூறிவந்துள்ளார். தமிழ் பேசும் பிரதேசங்களில் இப்பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்படவேண்டுமென்று வற்புறுத்தியுள்ளார். இப் பிரதேசங்களில் உள்ள தொழிலற்றவர்களின் பட்டியல்களைத் தமக்கு நல்குமாறு இப் பகுதியிலுள்ள பொது நிறுவனங்களையும் அவர் கேட்டுக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

தமிழ்ப் பிரதேசங்களில் வேலையற்றோர் பட்டியலில் கணிசமான தொகையினராகவுள்ளவர்கள் பட்டதாரிகளே. பல வருடங்கள் பொருளைக்கொட்டி, படிக்கப்பட்டம் பெற்றும் தொடர்ந்து வேலையின்றி அல்லலுறுகின்றனர். இலங்கையில் பயின்ற பட்டதாரிகளுடன், இந்தியா போன்ற அயல் நாடுகளுக்குச் சென்று கல்வி பயின்று வந்தவர்களும் இப் பட்டியலில் இடம் பெறுகின்றனர்.

இப் பட்டதாரிகளைக் கடந்த அரசு ஆசை காட்டி மோசம் செய்ததென்று கூறினாலும் மிகையாகாது. கடந்த தேர்தலின் போதும் இவர்களுக்கு உத்தியோகங்கள் வழங்கப் போவதாக வாக்குறுதியை அரசாங்கம் வழங்கியது. ஆனால் எள்ளளவும் அவ்வாக்குறுதியை நிறைவேற்ற முன்வரவில்லை. தொடர்ந்து பல ஆண்டுகளாக அவர்களுக்குக் கிடைத்த ஏமாற்றங்களை நாம் வர்ணிப்பதில் பயனில்லை.

தமிழ்ப்பட்டதாரி ஆசிரியர்களின் சேவை பல பள்ளிக்கூடங்களுக்கு இன்று தேவைப்படுகிறது. இத்தேவைகளை கல்வித் திணைக்களம் கிரமமாகப் பூர்த்தி செய்யுமானால் சுலபமாக நிலைமை சமாளிக்கப்பட முடியும். காலி இடங்களை நிரப்புவதில் காலதாமதம் செலுத்தவேண்டிய அவசியமேயில்லை.

இதே ரீதியில், உடனடியாக வேலை கொடுக்கக் கூடிய வசதிகளை ஆராய்ந்து, அவ்விடங்களில் உடனடியாக நியமனம் வழங்கப்பட வேண்டியவர்களை தனியாக ஒரு பட்டியலில் வைத்து வேலை வழங்கலாம். சிறிது காலம் தாழ்த்திக் கொடுபட வேண்டிய தொழில்களுக்கு வேறான ஒரு பட்டியலை வைத்துக் கொள்ளலாம். இந்த வகையில் இப்பிரச்சினை தீர வழிபிறக்கும்.

நாட்டில் விவசாயம், தொழில் வளர்ச்சி, வர்த்தகம் முதலிய துறைகள் தழைத்தோங்கினாலன்றி வேலையில்லாத் திண்டாட்டம் ஓடிய முடியாது. இம் மூன்று துறைகளையும் விருத்தி செய்யவும் தொழிலற்றோருக்கு பாரபட்சமற்ற முறையில் தொழில் வழங்கவும் அரசாங்கம் உடன் முயற்சிகள் எடுக்க வேண்டும். இதற்கு பல வருடங்கள் தேவைப்படலாம். இக்கால வரையறைக்காகக் காத்துக் கொண்டிருக்க எவரும் தயாராயிருக்கமாட்டார்கள். ஆகவே மேற் குறிப்பிட்ட பிரகாரம் இரு பட்டியல்களைத் தயாரித்து வேலைகளை வழங்க அரசாங்கம் முன் வர வேண்டும்.

இந்த முறையை அனுசரித்து அரசினர் இப்பிரச்சினையைத் தீர்க்க முன் வராதிருப்பின் எதிர்க்கட்சிகள் இந்நிலைமையைத் தங்களுக்குச் சாதகமாகப்பயன் படுத்திக் கொள்ளும். வேலையற்றோர் பட்டியலைக் காட்டியே மீண்டும் இடதுசாரிகள் ஆட்சி பீடத்தைக் கைப்பற்றிக் கொள்ள வாய்ப்புண்டாகும்.

தொழிலற்றோருக்கு வேலை வாய்ப்புத் தேடிக் கொடுப்பதில் வகுப்புத்துவேஷமோ, வர்க்கபேதமோ, மொழிச் சிக்கலோ, மத வேற்றுமைகளோ தலையெடுத்து விடாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய பொறுப்பும் தேசிய அரசாங்கத்தைச் சார்ந்ததாகும்.

# தமிழினத்தை அழிக்க முயலும் தன்னலத் தமிழ்த் தலைவர்கள்

## விரக்தியால் விழைந்த விபரீதப் போக்கு

தமிழரசுக் கட்சி தேசிய அரசாங்கத்துக்கு நல்கிவரும் ஒத்துழைப்பை முறியடிக்க பெரு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. மார்க்சிய வாதிகளோ, வகுப்புத்துவேஷிகளோ இந்த நடவடிக்கையில் இறங்கியிருந்தால் நாம் அச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் குறுகிய நோக்கம் கொண்ட சில தமிழ் அரசியல் வாதிகளே இத்தகைய கீழ்த்தரமான செய்கைகளில் மும்முரமாக ஈடுபட்டிருப்பதை அரசியல் அவதானிகள் கண்ணுற்று அதிசயிக்கின்றனர்.

அரசியலை ஒரு சூதாட்டக் கருவியாகப்பாவித்து, ஒரு காலத்தில் உச்ச நிலையில் இருந்து, தமிழ் பேசும் மக்களின் அரசியல் தலைவிதியை நிர்ணயிப்பவர்கள் என்று சம்பட்டம் கட்டியவர்களே இன்று இனவிரோத நடவடிக்கையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

### விரக்தி

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட்டமையினால் மேற்படி அரசியல் சூதாடிகளுக்கு செல்வாக்கு அருகிவிட ஆரம்பித்தது. இதனால் எழுந்த விரக்தி மனப்பான்மைதான் இன்றைய இனவிரோத நடவடிக்கைகளுக்கு இவர்களைத் தூண்டிவிட்டிருக்க வேண்டும் என்று அரசியல் வட்டாரங்களில் பலத்த ஐயப்பாடு எழுந்துள்ளது.

தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டதும், இந்த அரசாங்கத்தில் தமிழ் அரசுக்கட்சியும் சேர்ந்தமை சில தமிழ் அரசியல் வாதிகளின் அந்தரங்க நோக்கத்தை ஆழக்குழி தோண்டிப் புதைத்துவிட்டது. எனவே அந்தரங்கமாக தமிழரசுக் கட்சியை முறியடிக்கும் திட்டங்களை இத்தலைவர்கள் தயாரிக்கத் தொடங்கி விட்டனர்.

### இரு வழிகள்

இத்தலைவர்கள் இருவகையான வழிகளில் தங்கள் திட்டங்களை செயல் முறைக்குக் கொண்டு வர எத்தனிக்கின்றனர் என்று அரசியல் வட்டாரங்கள் விமர்சிக்கின்றன. அவையாவன:—

1. சேர்ந்துகெடுப்பது:

அதாவது, தேசிய அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு அளிப்பதாகப் பாசாங்கு செய்து கொண்டு, உள்ளிருந்தே பிளவு வேலைகளைச் செய்வது.

2. எதிரிகளுடன் ஒட்டுறவு:

தேசிய அரசாங்கத்தின் எதிரிகளாகக் கருதப்படும் சில மார்க்சீய வாதிகளுடனும் வகுப்பு வாதிகளுடனும் தொடர்பு வைத்துக் கொண்டு தமிழரசுக் கூட்டுச்சேர்க்கையைக் குலைத்துக் கூறுவதுடன், தேசிய அரசாங்கத்திலிருந்து தமிழரசாரைப் பிரித்து வைக்கச் சதி செய்வது.

இத்துடன் மட்டுமல்லாமல் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலேயே தமிழரசாருக்கு எதிராக வசைபுராணம் பாடும் பழக்கத்தையும் மிகத் தீவிரமாகக் கடைப்பிடித்து வருகின்றனர்.

சுதந்திரன் அரசியல் நிருபர்

தேசிய அரசாங்கத்தில் சேர்ந்திருப்பதனால் தமிழரசுக் கட்சியின் நியாயமான கோரிக்கைகளுக்குச் சிங்களவர்கள் மத்தியில் ஆதரவு ஏற்படத் தொடங்கியிருக்கிறது. சிங்கள வகுப்பு வெறியர்களின் சூழ்ச்சிகளையும் மக்கள் உணர்ந்துவருவதனால், தமிழ் பேசும் மக்கள் இழந்துபோன உரிமைகள் யாவும் எதிர்காலத்தில் மீண்டும் பெறுவதற்கான சூழ்நிலைகள் தென்பட்டு வருகின்றன.

இத்தகைய சூழ் நிலையில் இனவிரோத நடவடிக்கையில் ஈடுபடும் எவரையும் எவ்வாறு நடாத்த வேண்டும் என்பதனை தமிழ் பேசும் மக்கள் தெரிந்து வைத்துள்ளனர் என்பதனால், நாம் மேற்கொண்டு எதுவும் கூறவேண்டிய அவசியமேயில்லை.

### 'தலைவரின் எச்சரிக்கை

'தமிழ் பேசும் மக்களின் இழந்துபோன உரிமைகள் மீண்டும் கிடைக்க வாய்ப்பு ஏற்படும் என்பதனாலும், அழிந்தொழிந்து போகவிருந்த ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதனாலுமே தமிழரசுக்கட்சி ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைக்க முற்பட்டது' என்று தமிழரசுத் தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அண்மையில் ராகலையில் நடைபெற்ற இலங்கை தொழிலாளர் சமூகக் கூட்டமொன்றில் பேசும் போது கூறினார். சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தையும் பற்றிய விளக்கம் ஒன்றினையும் கொடுத்திருக்கிறார் தலைவர்.

இந்த நாட்டிலுள்ள எந்த ஒரு பிரஜையையும் வலுக்கட்டாயமாக வெளியேற்ற எவருக்கும் உரிமை கிடையாதென்றும், பாரம்பரை பரம்பரையாக இங்கு வாழ்ந்த மக்கள் எந்தவிதமான தடங்கலுமின்றி இந்த நாட்டுப் பிரஜையாவாரென்றும் திரு. செல்வநாயகம் உறுதியாக் கூறியிருக்கிறார்.

சி—சா. ஒப்பந்தத்தை அமுலுக்குக்கொண்டு வர முயற்சிகள் நடைபெறும் இவ்வேளையில் தலைவர் செல்வநாயகம் கூறிய வார்த்தைகளில் ஒரு அவசியமான எச்சரிக்கை விடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. இந்நாட்டைத் தாயகமாகக் கொண்டு வாழக்கூடிய அருகதையுடைய பலரையும் கூட இந்நாட்டை விட்டு அப்புறப்படுத்துவதற்கும் சூழ்ச்சிகள் நடைபெறலாம். ஆகவே இந்த விடயத்தில் தங்கள் பிறப்புரிமையைப் பாதுகாக்க ஒவ்வொரு தோட்டத் தொழிலாளியும் ஆயத்தமாக விருக்க வேண்டும் என்ற எச்சரிக்கையே தலைவரின் பேச்சில் தொக்கிநிற்கிறது. மலைநாட்டிலுள்ள சகல தொழிற்சங்கங்களும் இவ்வெச்சரிக்கையை அவதானித்து நடக்கவேண்டும் என்பது எமது அபிப்பிராயம்.

### மார்க்சிய வகுப்பு வாதிகள்

அத்துடன் இதே கூட்டத்தில் முதலை உறுப்பினர் மு. மாணிக்கம் அவர்களும் மார்க்சியவாதிகளைப் பற்றிய எச்சரிகை விடுத்துள்ளார். சர்வ தேசியம் பேசிய இம் மார்க்சிய வகுப்புவாதிகள் எவ்வளவு குறுகிய மனோநிலையில் இன்று வகுப்பு வாதிகளாகி விட்டுள்ளனர் என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

மலையகத்தை இருள் சூழும் இவ்வேளையில்மேற்படிமார்க்சீய வாதிகளின் கோரமும் முட்டிமோதிச்சின்னபின்னப் படுத்தாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டியதும் இன்றியமையாததாகிறது.

## இரத்த வங்கியில் இருட்டுச் சந்தை!

யாழ்ப்பாணத்து பெரிய ஆசுபத்திரியில் உள்ளஇரத்தவங்கியையிட்டு வெளிவரும் செய்திகளைக் கேட்டு' இரத்தக் கண்ணீர் வடிக்காமலிருக்க முடியாது. இந்த இரத்த வங்கியை ஒரு வர்த்தகக்கிடங்காக்கி வயிறு பிழைக்கும் கூட்டத்தின் கொட்டத்தை அடக்குவதற்கு பொது மக்களும்சட்டமும் முன் வரவேண்டும்.

வைத்தியத்துறை ஒரு சிலருக்குப் பொருள் வருவாயை அளிக்கிறது தான். ஆனால் அத்துறையில் பொருள்தேட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பது சரியல்ல. வியாதிகளைப் போக்கடிப்பதென்பது மக்களுக்கு ஆற்றும்மகத்தான தொண்டு. வைத்தியன் தெய்வத்துக்கு நிகராகப் போற்றப்படுபவன். 'வைத்தியர்கள், அவர்கள் அளிக்கும் சிகிச்சைக்குப்பணம் பெறுவதனால், உயிரைக் காப்பாற்றும பொருட்டு, இரத்தம் அளித்து பணம் பெறுவதில் என்ன கேவலம் இருக்கிற' தென்று ஒருவர் விமர்சித்ததாக அறிகிறோம். இவ்வளவு கீழ்த்தரமான முறையில் பொருள் தேடுவதானது மிக மிகக்கவலயானது என்பது மட்டுமலல கொடுமை நிரம்பியதுமாகும்.

யாழ்ப்பாண இரத்த வங்கி இருட்டுச் சந்தை.

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட சபைத் திட்டத்திற்கு வரவேற்பு

## திருமலையில் கூடும் எ. வினைஞர் தீர்மானம் நிறைவேற்றுவர்

**உத்தேச மாவட்ட சபைகள் நிறுவும் நடவடிக்கை மத்திய அரசில் தற்பொழுது குவிந்துகிடக்கும் அதிகாரத்தைப் பரவலாக்கும் ஒரு அம்சம் என்ற ரீதியில் வரவேற்பதாகவும், அத்தகைய மாவட்ட சபைகளுக்கு கூடியளவு சட்ட, நிர்வாக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்றும் தேசிய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது என்று கூறும் தீர்மானத்தை அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் செயற்குழு நடக்கவிருக்கும் அதன் நான்காவது ஆண்டுப் பொதுக்கூடடத்திற்கு சமர்ப்பித்துள்ளது.**

அரசாங்க சேவையிலுள்ள தமிழ் எழுதுவினைஞர்களின் ஒரே தொழிற்சங்கமான அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் நான்காவதுஆண்டுப் பொதுக்கூட்டம் இத்திங்கள் பத்தாம் நாள் சனிக்கிழமை காலை திருகோணமலை சென். ஜோசப் தமிழ்ப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. சங்கத்தின் அடுத்த ஆண்டுத் தலைவராகவும், செயலாளராகவும் நடப்பு வருடத் தலைவரான திரு. செ. கோடீசுவரனும், நடப்புவருடச் செயலாளரான திரு வே. தங்கவேலும் போட்டியின்றி (சில தமிழ்த் தினசரிகள் இப்பதவிகளுக்குப் போட்டியிருப்பதாக செய்தி வெளியிட்டது தவறாகும்) தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

முதற் தடவையாக கொழும்புக்கு வெளியில் நடைபெறும் இச் சங்கத்தின் ஆண்டுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட விருக்கும் வேறு சில தீர்மானங்கள் கூறுவதாவது:-

'தேசிய அரசாங்கத்தின் அரியணை உரையில் இந்நாட்டில் வாழும் தமிழ் தேசிய இனத்தின் மொழிப்பிரச்சினை யாவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் தீர்த்துவைக்கப்படும் என்று கூறியுள்ள உறுதிமொழியை முழுமனதோடுவரவேற்று, பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு முதற்படியாக; வடக்குக் கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாக தமிழும்; ஏனைய மாகாணங்களில் வாழும் தமிழ்பேசும் மக்கள் அரசாங்கத்துடன் தமிழில் தொடர்பு வைத்துக் கொள்ள வசதிகள் சட்ட மூலம் பிரகடனப்படுத்த வேண்டும் என்றும் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

வில்மட் பெரேராகுழுவின் சம்பள அறிக்கையை அமுல் நடாத்தும் படியும், அடுத்த மூன்று ஆண்டுகளில் 10,000 வீடுகளையாவது கட்டி வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் படியும் தீர்மானங்கள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன.

### இடமாற்றம்

வடபகுதிக்கு இடமாற்றம் பெற விரும்பும் தமிழ் அரசாங்க எழுதுவினைஞர்களைச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் ஒரு சுற்றறிக்கை மூலம் செயலாளர் சங்க உறுப்பினர்களைக் கேட்டுள்ளார்.

அச்சுற்று நிருபத்தின்படி அரசியற் காரணங்களுக்காக யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்றவர்களைப் பற்றி அ. எ. வி. சங்கம் நிதி அமைச்சரிடம் செய்து கொண்ட முறைப்பாட்டையொட்டியே இந்த இடமாற்றத்திற்கான வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இதுவரை வடபகுதிக்கு இடமாற்றம் கேட்காதவர்களும், ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் கடமையாற்றியவர்களும் இந்த வாய்ப்பைப் பெற முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

## சித்த வைத்தி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் இச்சங்க நிர்வாகசபை தெரிவிலும் மிகவும் கீழ்த்தரமான பல தந்திரங்களும் கையாளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு வாழைச்சேனையைச் சேர்ந்த வைத்தியர் திரு. சீ. காராளசிங்கம் அவர்களை தலைவராக்குவதற்காகப் பெருமுயற்சிகள் ஏற்கனவே நடை பெற்றதாகத் தெரிகிறது. ஆனல் கூட்டத்தின்போது அவரைப்பற்றி ஒரு பிரஸ்தாபமும் ஏற்படவேயில்லை. கூட்டத்துக்கு தற்காலிகத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தஆங்கில வைத்தியர் ரி. நல்லைநாதன் வைத்தியர் கே. இராமசாமி அவர்களைத் தலைவராக முன்மொழிந்தாராம். இவருடைய பெயரை வைத்தியரல்லாதவர் எனக் கூறம்படும் திரு. கே. சி. தில்லையப்பலம் வழிமொழிந்தாராம். இணைக் காரியதரிசிகளாகத் தெரிவானேரில் ஒருவர் தலைவரின் சகோதரரெனக் கூறப்படும் திரு. கே. பரஞ்சோதி இத்தகைய சம்பவங்களினல் இச்சங்கம் ஒரு தனிப்பட்ட குடும்ப நலனுக்காக அமைக்கப்பட்டதோ என்ற ஐயப்பாடு எழுந்ததில் வியப்பில்லை!

## இரும்பு மனிதன் குணமடைந்தார்



இலண்டனிலுள்ள கைஸ் (GUYS) மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நல்லூர் பிரதிநிதி டாக்டர் இ. மு. வி. நாகநாதன் பூரண குணமடைந்துள்ளார். இரு வாரங்களுக்கு முன்னர் அவர் மருத்துவமனையிலிருந்து வெளியேறி இலண்டன் நகரிலுள்ள விடுதியொன்றில் தங்கி ஓய்வெடுத்து வருகிருர்.

அறுவைச் சிகிச்சை மூலமே அவரின் நோயைக் குணப்படுத்த முடியும் என்று ஆரம்பத்தில் கருதிய மருத்துவர்கள், பின்னர் சாதாரண சிகிச்சை மூலம் அவரின் நோயைக் குணப்படுத்தியதுடன் அவருக்கு இருந்து வந்த நீரழிவு நோயையும் குணப்படுத்தியுள்ளார்களாம்.

இம்மாத நடுப்பகுதியில் இரும்பு மனிதன் நாகநாதன் இரும்பு மனிதனுகவே இலங்கையில் வந்து இறங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழினத்தை...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

யாகிவிட்டதை அந்நியர்கள் கூடக் கேட்டு அருவருக்கும் இழிநிலை ஏற் ஏற்பட்டுவிட்டது. இந்த அவமானம் உடனடியாகத் துடைக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்திலுள்ள பொது ஊழியர்கள் யாவரும் ஒன்றுய்ச்சேர்ந்து, தக்க பிரசாரத்தின் மூலம் தொண்டர்களைத்திரட்டி, யாழ்ப்பாண இரத்த வங்கி என்றும் வரட்சிஅடையாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

## துறைமுகச்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வதன் மூலம் இலங்கை அனைத்துக்கும் பொதுவாகவும், யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குச் சிறப்பாகவும் நன்மை ஏற்படும் என்பதை மீண்டும் வலியுறுத்தி திரு. செல்வநாயம் ஏப்ரல் 15ம் திகதி தேசிய மய சேவைகள் அமைச்சருக்கும், துறைமுக ஆணைக்குழுவுக்கும் கடிதம் எழுதி இருந்தார்.

இத் திட்டத்தை யொட்டி தேசிய சேவைகள் அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசா திரு. சா.ஜே. வே. செல்வநாயகம் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் 'காங்கேசன் துறைத் துறைமுக நிர்மாண வேலைக்கான மதிப்பீடுகள் கேட்டு வெளிநாட்டு கட்டிட ஒப்பந்தக்காரர்களிடம் விபரம் கோர விருப்பதாகவும், இத்திட்டத்திற்கு வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## தோட்டத் தொழிலாளரின்..

(12ம் பக்கத் தொடர்ச்சி)

பதை தோட்டத் துரைமாரும் ஏற்று கொண்டிருக்கிறார்களே! இ. தொ. கா. வும் ஏற்றுக்கொள்கிறது. முதலாளியும் ஏற்றுக்கொள்கின்றனர். அப்படியானல் கமிஷன் எதற்கு? கமிஷனில் பேசுவதற்கு என்ன இருக்கிறது?

கோரிக்கை நியாயமானது தான். ஆனல் அதனைக் கொடுப்பதற்கு பணந்தான் இல்லை என்பதே தோட்டத் துரைமார் கட்சி. அதற்கு சுமார் ரு. 1½ கோடி வேண்டுமாம். அப்படியானல் தோட்ட முதலாளிகளுக்குப் பணம் தேடிக் கொடுப்பதற்காகவே ஒரு கமிஷன் தேவைப்படுகிறது என்பது தெளிவு.

கமிஷன் நியமிக்கும் கோரிக்கைக்கு இணங்க தொழில் அமைச்சு வட்டாரங்கள் மறுத்துவிட்டதாக 'வீரகேசரி' பத்திரிகை 27-6-65ந் திகதி ஒரு செய்தியை வெளியிட்டது.

இச்செய்தி உண்மையாயின் கமிஷன் நியமிக்கும் திட்டமும் புகைந்துவிட்டது என்பது தெளிவாகும். பின்னர், கமிஷன் நியமிக்கும் பிரச்சினை மந்திரி சபை பரிசீலனை செய்யுமென தொழிலமைச்சர் கூறியதாக. முன்னுக்குப் பின் முரணை மற்றொரு செய்தியை 1-7-65ந் திகதி வெளியிட்டது. எப்படியோ, "கமிஷன் பிரச்சனை" தீர இன்னும் சில காலம் பிடிக்கும்.

இப்பொழுது 'கமிஷன்' ஒருபுறமிருக்க 'தேசிய சம்பள நிர்ணய சபை' வேறு வந்துள்ளது. இதுபற்றி வீரகேசரி 30-6-65ந் திகதி வெளியிட்டுள்ள ஒரு செய்தியில், தோட்டத் தொழிலாளரின் சம்பள உயர்வுக் கோரிக்கை புதிதாக நிறுவப்பட விருக்கும் தேசிய சம்பள சபையின் பரிசீலனைக்குத்தொழில் அமைச்சரினல் சமர்ப்பிக்கப்பட விருப்பதாக தொழிலமைச்சு வட்டாரங்களிலிருந்து அறியப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது போகாத ஊருக்கு வழிகாட்டும் ஓர் உபாயமாகவே தோட்டத் தொழிலாளர் கருதுவர்.

### போகாத ஊருக்கு காட்டும் வழி

தேசிய நிர்ணய சபை இன்னும் நிறுவப்படவில்லை. நிறுவுவதற்கான சட்டமும் இயற்றப்படவில்லை. அதற்கான மசோதா இன்னும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுமில்லை. மசோதா தயாரிக்கப்பட்டு, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, பாராளுமன்றத்தில் அது விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு, பின்னர் செனட் சபையும் அதனை விவாதித்து, அங்கீகரித்து, சட்டமாக்கிய பிறகு தேசிய சம்பள நிர்ணய சபை நிறுவப்பெற்று, அந்தச் சபைக்கு இந்தச் சம்பள உயர்வுக் கோரிக்கை சமர்ப்பிக்கப்படுமாம்—போதுமா?

### இதுதான் அந்த சந்தேகம்

ஈராண்டு விவாதம்—கமிஷன்—இன்னும் நியமிக்கப்படாத தேசிய சம்பளச் சபை இவைகளெல்லாம் தோட்டத் தமிழரின் ஒரேயொரு சந்தேகத்தைதான் வலுப்படுத்துகின்றன.

'தாமதத் தந்திரத்தை'க் கையாண்டு இக்கோரிக்கையைக் காலதாமதப்படுத்தி' வருடக்கணக்கில் தள்ளிப் போட்டு இறுதியில் கையை விரிப்பதுஇ. தொ. கா. வின் அந்தரங்கத் திட்டமென்பதே அந்தச் சந்தேகம்.

இந்த நீண்டகால நடவடிக்கைகளின் இறுதியில் தோட்ட மக்களுக்கு எஞ்சி நிற்க விருப்பது ஏமாற்றம் மட்டுமே. அதன் தவிர்க்க முடியாத இறுதி விளைவு தோட்டத் தமிழ் மக்கள் அனைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொடியின் கீழ் அணிதிரளுவதே.


# ஆசை அலைகள்

ஆயிரம் மோதும் உங்களது இதயங்களில்

**உதாரணமாக:**

பரீட்சையில் தேறவேண்டும்—பட்டம் பெற வேண்டும்—பதவி உயர வேண்டும்—பணம் சேரவேண்டும்—படும் துன்பங்கள், துயரங்கள் பனிபோல் மறைய வேண்டும்—பண்பிலா எதிரியை முறியடிக்க வேண்டும்-பழிவாங்கும் கண், வாய் திருஷ்டிக்குப் பரிகாரம் காண வேண்டும்—பாசமிக்க வாழ்க்கைத்துணை அமைய வேண்டும்—பலநாள் குடும்பத் தகராறு சுமுகமாகத் தீரவேண்டும்—

**அத்துடன்**

பல்நூறு பயனும் பலனும் பல்கிப் பெருக வேண்டுமென்ற

## ஆசை

உங்களது இதயக் கமலங்களில்

## அலைகள்

போல் மோதுண்டு நிற்கும்!

இவையனைத்தையும் தேவ அருளினுலும்-மந்திர பலத்தினுலும், ஞான சக்தியினுலும் நிறைவேற்றித்தர-

என்னை நேரில் சந்தியுங்கள்?

செவ்வாய் முதல் சனிவரை இருக்கும் விலாசம்:

## பி. எம். திசாநாயக்க

—மாந்திரிக கலாநிதி—

103, ஸ்ரீசங்கராஜ மாவத்த,

மருதானை --- கொழும்பு.

ஞாயிறும், திங்களும் இருக்கும் விலாசம்:

**அமுத எண்ணெய் தொழிலகம்,**

கண்டி ரோட், கம்பளை. போன்: 454.

குறிப்பு: கடிதங்கள் கம்பளை விலாசத்திற்கே எழுதப்பட வேண்டும்.

உங்களது அந்தரங்க விஷயங்கள் எக்காரணங் கொண்டும் வெளியிடப்படமாட்டாது.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அடித்த கை

இவ்வாரச் சிறுகதை

## தையிட்டி அ. இராசதுரை

பாலசிங்கத்துக்கு அழுகை அழுகையாக குமுறி வந்துகொண்டிருந்தது. மில்லில் தனது கடமையைக் கூட சரிவரச் செய்யத்தெரியாமல் சொல்ல முடியாத மனக்கவலையில் அவன் தட்டுத்தடுமாறிக் கொண்டிருந்தான். அதிகாலையில் மில் வேலைக்கு வர முன்னர் வீட்டில் அம்மாவிற்கும் தனக்குமிடையில் ஓரங்க நாடகமாக நடந்து முடிந்த அந்தச்சம்பவத்தை பாலசிங்கம் தாங்க முடியாத மனப்பாரத்தோடு தன் நினைவில் இழுக்கின்றான்.

“டேய் பாலு... நீ வீடி குடிச்சு பழகாத பழக்கம் பழகிறதை இண்டைக்குக் கட்டாயம் கொம்மான் வர விட்டுச் சொல்லிக் குடுத்திடுவன். பேசாமை நல்ல பிள்ளை மாதிரி வேலைக்குப்போடா...”

“நான் சிவசத்தியமாய் வீடி குடிக்கிறதுக்கு உன்னட்டை காசு கேக்கலே... நீ காசைத்தா...”

“ஏன்ரு கோதாரி விழுவாய் தெய்வத்தை இழுத்து பொய்ச் சத்தியம் பண்ணி பிரமசத்தி வாங்கிப் பிடிக்கிறாய்... உன்ரை மாதிரி எல்லாம் எனக்கல்லோ நல்லாக விளங்கும்...”

‘சேட்டையை விட்டிட்டு காசைக் கொண்டு வா... இல்லாட்டி பொலிடோல் குடிப்பன்...’

“என்னடா நாய்ச் சுப்பா... பொலிடோல் குடிக்கப் போறியோடா... கொம்மான் வரட்டும்... உன்ரை முதுகுத் தோலை உரிப்பிச்சுப் பேடுறன்...”

அடக்க முடியாத ஆத்திரத்தில் பாலசிங்கம் தாயின்கன்னத்தில் ‘பளா’ என்று அறைந்து விடுகின்றான். ‘ஆ...சண்டாளன் உதுக்குத்தானோடா நான் உன்னைப் பெத்து வளர்த்தனான்...’ இப்படிச் சொல்லிக் கத்திய படி பாலசிங்கத்தின்தாய்நிலத்தில் விழுகின்றாள். ‘அம்மா...! அம்மா!:... உங்களுக்கா நான் அடித்தேன்’ அந்தச் சம்பவத்தை நினைத்துப் பார்த்ததும் பாலசிங்கம் குமுறி வந்த மனச்சலிப்பில் மில்லின் இரைச்சலையும் மிஞ்சிக் கத்தி விடுகின்றான், தாயின் கன்னத்தில் அடித்த தனது வலது கையை ஒரு வித வெறுப்போடு அவன்உற்றுப்பார்க்கிறான். அந்தக் கையில் கண்ணீர் வடித்து கடல் கடலாய் அழுது வடித்த சோகக் கோலத்தோடு தாயின் நிழலுருவம் தெரிவது போன்றிருந்தது. அந்தக் கையால் தனது தலையில் ஊன்றி அடித்த படி பாலசிங்கம் ‘அம்மா’ என்று உரக்கக் கத்தி விடுகின்றான்.

அம்மா...உங்களுக்கு அடித்த இந்தக் கையை வாஞ்சையோடு பிடித்து உங்கள் வாயில் வைத்து எத்தனை முறை கொஞ்சியிருப்பீர்கள். இந்தக் கையை எத்தனை தரம் தாய்ப்பாசத்தின் கரப்போடு பிடித்து உங்கள் கண்களில் ஒற்றியிருப்பீர்கள். இந்தக்கையில் சோறு குழைத்து வைத்து “தின்னுங்கோடா ...தின்னுங்கோடா” என்று சொல்லியிருப்பீர்கள். நான் ஆசையோடுகேட்டகேட்டவிதம் விதமான தின் பண்டங்களையெல்லாம்மறுக்காமல் வாங்கி வந்து இந்தக் கையில் அன்போடு தந்திருப்பீர்கள்...ஐயோ ...அம்மா அம்மா... இன்று இந்தக் கை தான் உங்கள் கன்னத்தில் அடித்து விட்டதே...

இப்படியெல்லாம் சொல்லி தனக்குள் பரிதாபமாக அழுதுபுலம்பிய படி மறுபடியும் அவன் அந்தக் கையை தனது முகத்திற்கு நேராகப் பிடித்த படி உற்றுப் பார்க்கின்றான். அதில் மறுபடியும் தாயின் சோக உருவம் நிழலாகத் தெரிவது போலவும் அந்த உருவம் “ஆ! சண்டாளா உதுக்குத்தானோடா நான் உன்னைப்பெத்து வளர்த்தனான்...” என்று கேட்பது போலவும் நினைப்பு. மீண்டும் அவன் ‘அம்மா...... அம்மா’ என்று கத்தியபடி அந்தக் கையால் தனது கன்னத்தில் பளார் பளார் என்று நான்கைந்து முறை பலமாக அறைந்து கொள்கிறான்.

‘தாயை அடித்த இந்தச் சண்டாளனுக்கு இது போதவே போதாது. இந்தக் கையை வாளால் வெட்ட வேணும்...’ கோடாலியால் கொத்த வேணும் பெட்ரோல் ஊற்றி நெருப்புக்குள் பிடிக்க வேணும்...கொதி தண்ணீருக்குள் வைக்க வேணும்...’ தாய்க்கு அடித்த கவலையை மறக்க இப்படியெல்லாம் தனக்குத்தானே தண்டனை கொடுத்துக் கொண்டிருந்த பாலசிங்கம் யாரோ மில்லிற்குள் வந்து கொண்டிருக்கும் காலடி கேட்டு திரும்பிப் பார்க்கிறான்-

ஒரு நடுத்தர வயதுப் பெண் தலையில் கடகத்தோடு அவனை நோக்கி வந்து கொண்டிருந்தாள். “அம்மா... ...பாலசிங்கத்திற்கு தனது அம்மாவே பதில் சொல்வது போன்ற நினைப்பில் உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை குளிர்ந்தது. அந்த மிளகாயைத் தராசில் போட்டு நிறுத்து விட்டு அதன் நிறைக்குத் தக்க பணத்தையும்கேட்டு வாங்கிக்கொண்டபின்னர் அந்த மிளகாயை மிளகாய் அரைக்கும் இயந்திரத்தின் அகன்ற வாய்க்குள் கொட்டிவிட்டு இயந்திரத்தை இயக்கிவிடுகின்றான்.

இயந்திரம் மிளகாயை அரைத்துக் கொண்டிருக்க பாலசிங்கத்தின் மனம் கடமையிலிருந்து விடுபட்டு வீட்டைநோக்கி ஓடுகிறது. “நான் இன்றைக்குஎப்படி வீட்டுக்கு போவேன். அம்மாவுக்கு அடித்த சங்கதி அம்மானுக்குத் தெரிந்தால்” ......

பாலசிங்கத்தின் நினைவில் அவனது அம்மான் கையில் துவரம் தடியோடு விசுவரூபமெடுத்து நிற்கிறார். ஒருநாள் தனது தாயை “எடி” என்று கோபத்தில் ஏசியதற்காக தன்னை தனது அம்மான் துவரம் தடியால் உருட்டி உருட்டிக் குழறக் குழற அடித்ததை அவன் நினைத்துப் பார்க்கிறான். பொல்லாத பயத்தில் அவனது உடம்பெல்லாம் கிடுகிடுக்கிறது. வேலைமுடிந்து தான் பயந்து பயந்து வீட்டிற்குப் போவது போலவும், தாய்க்கு அடித்ததற்காக தன்னை அம்மான் கழுத்துப்பிடியோடு இழுத்துப்போய் முற்றத்து வேப்பமரத்தில் கட்டிவிட்டு கண்ணிற்குள் பச்சை மிளகாய் முறித்துக் குத்திவிட்டு துவரம் தடியால் அடிப்பதுபோலவும் தான் குழறி அழுவது போலவும் மனப் பிரமைகளின் ஓட்டம்.

“என்னப்பா மிசின் சும்மா ஓடுது” ... இப்படி முதலாளி தம்பையா கேட்டபடி ஓடிவந்ததும் பாலசிங்கம் அப் பொழுதுதான் தனது கடமையில் மனதைத் திருப்பியவனாக மிளகாய்அரைக்கும் இயந்திரத்தை மன அதிர்ச்சியோடு பார்க்கிறான். மிளகாய் எப்பொழுதோ அரைத்துமுடிந்து இயந்திரம் வெறுமையாய் ஓடிக்கொண்டிருந்தது. முதலாளி தம்பையா இயந்திரத்தை நிற்பாட்டிவிட்டு பாலசிங்கத்தை அவன்விட்ட பிழைக்காக ஒரு மாதிரியாக முறைத்துப்பார்த்துவிட்டு தன்னுடைய வேலையைச் கவனிக்கப் போய்விடுகின்றார்.

பாலசிங்கத்திற்கு மில்லில் இருப்புக்கொள்ளவில்லை தாய்க்கு அடித்த மனக்கவலையை மறக்க மில்லிலிருந்து வெளிக்கிட்டு கால்போனபோக்கில் நடந்துகொண்டிருக்க வேண்டும் போலிருந்தது. மில்லிற்கு சாமான்கொண்டு வந்தவர்கள் யாரோ மில்லிற்குள் எறிந்து விட்டுப்போனஎழுதியகொப்பி ஒற்றை ஒன்று அவன் காலிற்குள் மிதிப்பட்ட போது அதைக் கையிலெடுத்து அதில் உள்ள ஏதோ ஒரு பிரதான வாசகத்தை வாசித்ததும் அவனையுமறியாமல் அவன் கண்கள் கண்ணீரைக் கொட்டுகொட்டென்றுகொட்டத்தொடங்கின. அந்தவாசகத்தை அவன் பலமுறை தன் கண்களில்ஒற்றிக்கொள்கிறான். “தாயிற் சிறந்த ஒரு கோயிலுமில்லை”... இப்படி பல முறை உணர்ச்சிவசப்பட்டுக் கத்தி விடுகின்றான்.

‘என்னடா பாலு...இண்டைக்கு உன்னைப் பார்க்க ஒரு மாதிரிக் கிடக்கு’... இப்படிக் கேட்டபடி மில்லில் அவனோடு கூட வேலை செய்யும் அவனது தொழிலாள நண்பனான பஞ்சாட்சரம் அவன் பக்கத்தில் வந்து நின்றான்.

‘இந்தா பஞ்சா...தாயிற் சிறந்தஒரு கோயிலுமில்லை என்று சொல்லுறதெல் நூறு வீதமும் உண்மை தானா...பெற்ற தாய் ஒரு கோயில்...ஒரு தெய்வம்...பெற்ற தாயைக் கும்பிட்டா ஒரு கோயிலைக் கும்பிட்டதுக்குச் சரி...என்னுடைய அம்மா எனக்கு ஒரு கோயில்... அம்மா எனக்கு ஒரு கோயில்.’

‘என்னடா பாலு... கோயில் அது இதெண்டெல்லாம் இன்றைக்கு ஊசு மாதிரி அலட்டுறாய்...’ பாலசிங்கத்தின் புது மாதிரியான பேச்சை உதாசீனம் செய்து அதில் சிறிதும் அக்கறைப்படாதவனாக பஞ்சாட்சரம் ‘இந்தாடாப்பா...இந்த பீடியைப் பத்து’...என்று பாலசிங்கத்திடம் ஒரு பீடியை எடுத்து நீட்டுகின்றான்.

இந்த பீடிதானே அதெல்லாத்துக்கும் காரணம்...இப்படி இறுக்கமாக மனதில் அந்த உண்மையை உறுதிப் படுத்திக் கொண்டவன் கை நீட்டி வாங்கிய அந்தப் பீடியை இரண்டாக முறித்து தனது காலிற்குக் கீழ் போட்டு உழக்கிவிடுகின்றான். இந்த எதிர்பாராத திருப்ப அதிர்ச்சியினால் பஞ்சாட்சரத்தின் வாயில் கிடந்த பீடி அவனையுமறியாமல் வாயிலிருந்து நழுவி நிலத்தில் விழுந்தது.

‘நான் இண்டைக்குத் துடக்கம் இந்த பீடியை கையாலை கூடத் தொடமாட்டன்...சத்தியமாய் தொடமாட்டன்...’

‘ஓ நீ இப்ப நல்லபிள்ளை’ இப்படிக் கிண்டலாகச் சொல்லியபடி பஞ்சாட்சரம் ‘பொயிலர்’ அடுப்புப் பக்கம் போய் விடுகின்றான்.

தனது காலிற்குக் கீழ் கிடக்கும் அந்த முறிந்த பீடித்துண்டைப் பார்த்ததும் இத்தனை நாட்களாகத் தாயை ஏமாற்றி ஏமாற்றி காசு வாங்கி குடித்துக் குடித்து எறிந்த பீடிக் கட்டைகளெல்லாம்அவன் நினைவில் வந்து விழுந்து குவிந்து பயங்கரக் கதைகள் சொல்லி மறைகின்றன.

‘எந்தத் தாயாவது தன்னுடைய மகன் கெட்டுப் போவதை சகித்துக் கொள்வாளா...?தன்னுடைய மகன் நல்ல பழக்கம் பழகவேணும்... அதைப்பார்த்து நாலு பேர் நல்ல மாதிரியாகக் கதைக்கவேணும் இதைத் தானே எந்தத் தாயும் விரும்புவாள்...அம்மாவிடம்மட்டும் இந்த ஆசை இருக்காதா...?நான் இந்த வயதிலேயே பீடி பத்திக் கொண்டு திரிவதை பாக்கிறவங்களெல்லாம் என்னைப் பற்றிஎவ்வளவு கேவலமாக நினைப்பாங்கள் என்னுடைய பழக்கத்தைப் பற்றி கூடாமைக் கதைப்பாங்கள்...இதையெல்லாம் அம்மா கேட்கும் போது அம்மாவின் மனம்தான் எவ்வளவு வேதனைப்படும்...இப்படியான ஒரு பிள்ளையைப் பெற்றுவிட்டேனே என்று அம்மாவுக்கு எவ்வளவு கவலைகள் வரும்... பீடி குடிக்காதே என்று அம்மா என்னைத் திருத்திறதிலை என்ன பிழையிருக்கு... சொல்வழி கேக்காமல் நான் இந்தக்கெட்ட பழக்கத்தைப் பழகினதாலை தான் இன்றைக்கு நான் இப்பிடியெல்லாம் ஒரு பெற்ற தாய்க்கு கை வைக்க வேண்டியதாய் வந்து போச்சுது.’—

இப்படியெல்லாம் தனக்குள் மனவேதனையோடு கதைத்துக் கொண்ட பாலசிங்கத்திற்கு ஏதோ பொல்லாத களையாக வந்தது. முதலாளிக்குச் சொல்லிவிட்டு மில்லின் ஒரு ஒதுக்குப் புறத்தில் போய் படுத்துக் கொண்டான். அந்த இடத்தில் முதலாளி வழமையாக எடுக்கும் தினசரிப் பத்திரிகையொன்று கிடந்தது.

அதில் ‘மகன் அடித்ததால் தாய் தற்கொலை’ என்ற தலைப்பை வாசித்ததும் அதிர்ச்சியில் பாலசிங்கம் அப்படியே எழும்பிவிட்டான். தனது தாயே உண்மையில் தற்கொலை செய்து விட்டது போன்ற பிரமை அவனது இதயத்தை குத்திப் பிளக்கிறது. பத்திரிகையில் காணப்பட்ட அந்தத் தற்கொலைச் செய்தி தன்னுடைய வீட்டில் நடந்த செய்தி போல் மாறித் தெரிகிறது.

தாய் கிணற்றிற்குள் விழுந்து தற்கொலை செய்கிறாள்...செத்த வீடு நடக்கிறது...செத்த வீட்டுக்கு வந்தவர்களெல்லோரும் பாலசிங்கத்தைப் பற்றி கேவலமாகக் கதைக்கிறார்கள்.

(11-ம் பக்கம் பார்க்க)

**● வெளியூர் சென்ற கணவன் திரும்பிவராத ● வேளையில், வீட்டிற்குள் ஆண்குரல் கேட்கிறதே, என்று சந்தேகப்பட்டுக் கதவைத் தட்டிவிட்டு, பின் அது வெளியூர் சென்ற கணவனின் குரலே என்றுணர்ந்து தான் செய்த குற்றத்திற்காகத் தன் கையையே வாளால் துண்டித்துக்கொண்டான், பொற்கைப்பாண்டியன்!**

**‘தானிருந்த கோயிலை’க் கை நீட்டி அடித்த குற்றத்திற்காக, ‘பொற்கைப் பாண்டியன் அன்று மட்டும் வாழவில்லை இன்றும் வாழ்கிறான்’ என்று ● நிரூபித்துக்கொள்கிறான், நமது பாலசிங்கம்! ●**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாவம், நந்தி!

மலையாளத்து எழுத்துலகத் தலை, தகழி சிவசங்கரன்பிள்ளை என்பவர் எழுதிய 'செம்மீன்' என்றதொரு நவீனத்தைப் படித்ததினல் ஏற்பட்ட மனமருட்சியின் விளைவு, 'நந்தி'யின் மலைக்கொழுந்து! மலையாளத்துக் கரையோரத் தாழ்நிலத்து மீனவரின் வாழ்க்கை முறைகளை நன்முறையில் சித்தரிக்கும் நாவல் 'செம்மீன்' இலங்கையின் மலை நாட்டுயர் நிலத்தின் தமிழ்த் தோட்டத் தொழிலாளரின், வேதனை நிறைந்த வாழ்க்கையைச் சித்தரிக்க முயலும் நாவல் 'மலைக் கொழுந்து'.

இவ்வாண்டு இலங்கையில் வெளி வந்த ஒரேயொரு நாவல் மலைக்கொழுந்து: இது வரை இலங்கையில் வெளி வந்த நாவல்களுள் குறிப்பிடத்தக்கதும் கூட; நல்லதொரு நவீனம். மலைக்கொழுந்தின் ஆசிரியர் 'நந்தி' கம்யூனிச முற்போக்கு அணியைச் சேர்ந்

### இலக்கிய உலகு
-"வேதாளம்"-

தவர்; 'நந்தி'யின் நவீனத்தைப் பற்றி அவ்வணியில், ஆரம்பத்தில் நல்ல அபிப்பிராயம் நிலவியது; ஆனால், நந்தி புகழப்படுவதை விரும்பாத பலர் எதிர்க்குரல் எழுப்பியுள்ளனர்.

"இதென்ன பிரமாத நாவல். செம்மீனின் தழுவல்!" என்றனர் ஒரு சிலர்.

"நடையில் சுவையே இல்லை"

"எல்லாரும் தோட்டத் தொழிலாளரைப் பற்றி எழுதுகிறார்களென்று, இவரும் எழுதியிருக்கிறார்."

"டொக்டருக்கு ஏனிந்த வேலை." (நந்தி ஒரு டாக்டர்). இவ்வாறு பலவிதமான அபிப்பிராயங்கள் அந்த அணியில் நிலவி வருகிறது. இப்போது ஒரு புதுக்கோசத்தை அவர்கள் மலைக் கொழுந்திற்கு எதிராகக் கிளப்பியுள்ளனர். வெளிப்படையாகக் கூறவுந் தொடங்கிவிட்டனர்.

மிகவண்மையில் கோகிலம் சுப்பையா என்பவர், 'அக்கரைப் பச்சை' என்றொரு நாலை எழுதி வெளியிட்டுள்ளார்; இந் நாவலும் இலங்கையின் தோட்டத் தொழிலாளர்கள் படும் வேதனை வாழ்க்கையை விபரிக்கின்றது. தோட்டத் தொழிலாளர்களோடு பல வாண்டுகள் இலங்கையில் வாழ்ந்த கோகிலம் சுப்பையா இந்தியாவிலிருந்து இந்நாவலை எழுதி வெளியிட்டுள்ளார்கள்.

"அக்கரைப்பச்சை நாவலின், கால் தூசிற்கும் காணுதுமலைக்கொழுந்து" என்ற புதுக் கோசத்தை மு. எ. ச. சேர்ந்த சிலர் எழுப்பியுள்ளனர்; பாவம், நந்தி. வளர்த்த பசு மார்பில் பாய்வது போல.

இரவு பகல் கண் விழித்து எழுதி, திருத்தி, பணத்தை வாரியிறைத்து, அச்சுக்கூடத்திற்குப் 'புரூவ்' திருத்த அலைந்து, ஒரு விழாவும் கொண்டாடி கண்ட மிச்சமென்ன? சொந்த அணியே காலை வாரிவிட்ட நிலைதான்.

# சிலம்பும் மேகலையும் சமகாலத்தனவா?

மணிமேகலையில், புகார் பட்டினம் கடலாற் கொள்ளப்பட்டு விடும் செய்தி காணப்படுகின்றது.

'வடிவேல்-கடக்கை
வானவன் போல
விரிதிரை வந்து வியனகர்
விழுங்க'

என்கின்றது மணிமேகலை. ஆனால், சிலம்பில் புகார் நகரத்தின் பொலிவு சொல்லப் பெறுகின்றது.

'பெயர்நுத லறியாப்
புகாரப்பட்டினம்
குன்றுவளத்தோடு
கோநகராக
ஊழியூழிய் சோழரோடு
சிறக்கும்''

என்கின்றார் இளங்கோ. ஒருவர்முன் ஒருவர் தத்தமக்குள் மாறி கதைசொல்லி, புகழ்ந்திருப்பார்களேயானல் இத்தகைய முரண்பாடு எப்படி ஏற்பட்டிருத்தல் கூடும்? எனவே, புகாரப்பட்டினம் கடற்கோளால் அழிய முன்னர் அடிகள் சிலம்பினை இயற்றினர். பின்னர், அந்நகர் கடற்கோள் கொள்ளப் பட்டுமுடிந்தகாலத்தில்மணி மேகலைக்கதையை சாத்தனர் பாடினர் எனறுகூறுதல் பொருந்தும்.

### சமய வேறுபாடு

மேலும், இருகாப்பிய நூல்களிலும் சமய நிலையேவேறுபடுகின்றது. கோவலன்-கண்ணகி இருவரும் இன்ன சமயத்தைச் சார்ந்தவர் என்று சிலம்பினல் நாம் அறிந்து கொள்ளஇயலாது. சமணத் துறவி அவ்விருவர் வழித்துணையாகின்றாள். வைணவ மாதரி அவ்வருவரை விருந்தோம்புகின்றாள். சைவச் செங்குட்டுவன் தெய்வக்கல் எடுக்கின்றான். அத்தோடு, காவிரிப்பூம்பட்டினம் சமணமும் பௌத்தமும்கலந்து பிணிக்கின்றது. வாழ்ந்த இடமாகவும் இளங்கோவடிகளால் கூறப்படுகின்றது. மேலும். மதுரை செல்ல நினைத்த கோவலன்,கண்ணகியாள் வீட்டை கடந்து திருமால்கோட்டத்தையும் இந்திர விகாரத்தையும் சாரணர் சிவதலத்தையும் தொழுதுசென்று காவிரிக்கரையை அடைகின்றான். அவனேடிருந்த மாதவி பௌத்தத் துறவியாகின்றாள் - மணிமேகலைக்கு பௌத்த தெய்வப் பெயரையிட கோவலன்சம் மதிக்கின்றான்.

ஆனல், மணிமேகலையில் சமயவெறுப்பு முகிழ்த்துக் கிளைத்துவிடுகின்றது. புகார்ச் சோழன், பௌத்தத்திற்கே அடிமையாகி,

"கறையோரில்லாச்
சிறையோர் கோட்டம்
அறவோர்க்காக்கின்
அரசாள் வேந்தன்"

ஆகின்றான்—மேலும் சைவம் உட்பட பல சமயங்களையும் சாத்தனர் சமரச நோக்கில் கூறுது. 'பல்வேறு சமயப் படிற்றுரை' என்று இழித்துக் கூறுகின்றார். இவ்வாறு தூற்றும் சாத்தனர், சைவமும் தமிழும் தனது இரு விழிகள் எனக்கொண்டாடிய செங்குட்டுவனின் முன்னிலையில் நின்று கண்ணகியைப்பற்றிக் கூறுதல் நடைபெற முடியாதது. அத்துடன் சாத்தனர் மேகலையில் மலர் வனம் புக்க காதையில் சமணத்தை பலவாறுகேலி செய்கின்றார். இங்ஙனம் இளங்கோவடிகள் பின் பற்றித் துறவியாய சமணத்தை இழித்தும் பழித்தும் புனைந்திட்ட நூலை, அவர் முன்னரே படித்தரங்கேற்றி னரென்பது பொருந்தக் கூடியதா-அன்றிஅவர் அதனை ஏற்றுச் செவிமடுப்பாரா? என்று சில அறிஞர்கள் வினவுகின்றனர். இதனல் தமிழுக்கு நாடகத்துறையிலும் சமயத்துறையிலும் முதற் காப்பியங்கள் எழுதிய இருவர் மத்தியில் இருந்ததாகச் சொல்லப்படும் நட்பின் சிறப்பினை மாசு படுத்தியதாகக் கருதக்கூடாது.

### காஞ்சி பற்றிய செய்தி

காஞ்சிபுரம் ஒரு சிறந்த பௌத்த தலைநகராகவிருந்த காலத்திலே மணிமேகலை எழுதப்பட்டுள்ளது. சிலம்பிலோ காஞ்சிக் குறிப்பில்லை. மாலன் மறையோன் திருவரங்கத்திலிருந்து வேங்கடம் சென்ற வழியில் காஞ்சியைப் பற்றிக்கூற, இளங்கோ வடிகளுக்கு சந்தர்ப்பம் கிடைத்தும் அவர் அதனைக் கூறவில்லை. அப்பொழுது காஞ்சியில் பௌத்தம் பரவாமையால் முக்கிய மற்றதாகஇருந்திருக்கலாம்.

### கலா பரமேஸ்வரன்

ஆனல், சிலம்பு புனைந்து சில ஆண்டுகள் கழிந்த பின், காஞ்சி பௌத்த தளமாகியது. அத்தகைய நிலையிலேயே மணிமேகலை எழுந்தது எனலாம்.

மேலும் செங்குட்டுவனிடமிருந்து, இளங்கோ முன் நூலரங்கேற்றியதாகச் சொல்லப்படும் சாத்தனர், சேரநாட்டைப்பற்றி குறிப்பிடத்தக்களவுக்கு கூறவில்லை. 'வஞ்சி சென்றான்' என்ற ஒரு குறிப்பைத்தவிர சேரநாட்டைப்பற்றி வேறொன்றுமில்லை. ஆனல் காவிரி, புகார் நகரங்கள் பற்றியும் சோழன் நீதிபற்றியும், அதிகமாகக் கூறுகின்றார். அத்துடன் 'சிலைக்கயனெடுங்கொடி காரியாற்றுக் கொண்டவன்' என சேரனை வென்றடிமைப் படுத்திய சோழன் கிள்ளியைப் பற்றிச் சாத்தனர் கூறுகின்றார். சேரனை முறியடித்த சோழனைப் பற்றிச்சேர இளவரசத் துறவியிடமே கூறுவாரா ஒரு புலவர்? மேகலை மூலம் சேரனை இகழ்ந்து, சேரனிடமே அரங்கேற்றினர் என் பது பொருந்தக் கூடியதா என ஆராய வேண்டும்.

### சாத்தனர் வேறுபாடு

காட்சிக்காதை 66ம் வரியில்
"தண்டமிழாசான்
சாத்தனிஃதுரைக்கும்
ஒண்டொடி மாதர்க்குற்ற
தையெல்லாம்"

எனப்படுகிறது. இதற்கு மாறுக, மேகலை ஆசிரியர் கூலவாணிகன் சாத்தனர் எனக்குறிப்பிடப்பிடுகின்றர். உண்மையானதும் சரியானதும் இப்பெயரே, ஆனல் சிலம்பு குறிப்பிடும் 'தண்டமிழாசான் சாத்தன்' இவராக இருக்க முடியாது; வேறொருவரென்றே கொள்ளவேண்டும். ஒரு பெயருடைய பலர் உளராயின், அவ்வப் பெயருடன் ஓர் அடைபுணர்த்தி வேறுபாடுணர்த்தல் தமிழ் மரபாகும். உதாரணமாக, நக்கீரனர், கீரங்கீரனர், குட்டுவன்கீரனர், சேந்தன்கீரனர், மோசிகீரனர் என்று பல வகைக 'கீரர்'களை வேறுபாடு காட்டி அறிய 'அடை'கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த அடிப்படையில் பார்க்கும்போது, சாத்தனரென்ற பெயருடன் பலர் இருக்கலாம் போலத் தோன்றுகின்றது. அவர்களுள் 'கூலவாணிகன் சாத்தனர்' மணிமேகலை பாடிய புலவர்- சிலம்பு காட்டும் 'தண்டமிழாசான் சாத்தனர்' இவருக்கு முன்பிருந்த வேறொருசாத்தனராக இருக்கலாம். கூலவாணிகன் சாத்தனர்: புகார் கடலாற் கொள்ளப்பட்டதன் பின் வாழ்ந்து இலக்கியப் பணி புரிந்திருக்கலாம்:

### முடிவுரை

இது வரை ஆராய்ந்ததில் இருந்து இரு காப்பியங்களும் சங்கம் மருவிய கால அரசியல், சமூக, பொருளாதார சூழ்நிலைகளை யொட்டி எழுந்தாலும் சில ஆண்டுகள்வேறுபாட்டில் தோன்றியிருக்கலாம் எனப் பார்த்தோம். இவற்றுள் முதலில் தோன்றிய சிலம்பினை, நன்றாகப் பயின்று, அதன் பின்பேமேகலையைச் சாத்தனர் இயற்றினர். இதற்குப்பல சான்றுகளை நாம் காட்டமுடியும். சிலம்பில் வரும் சில சொற்கள், தொடர்கள், அடிகள்,

(14-ம் பக்கம் பார்க்க)

## அடித்த கை

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

'மகன் அடித்த தால் தாய் தற்கொலை'...இப்படி முதலாளி எடுக்கும் தினசரியில் செய்தி காணப்படுகின்றது....இப்படியெல்லாம் நினைத்துப் பார்த்துக்கொண்டிருந்த பாலசிங்கம் அந்தத் தினசரியில் ஏற்பட்ட ஒருவித மனவெறுப்பினல் அது முதலாளியின் பேப்பர் என்று கூட சிறிதும் யோசிக்காமல் அதை தூள் தூளாகக் கிழித்தெறிந்து விடுகின்றான்.

தாய்தற்கொலை செய்துவிடுவாளென்ற பயம் பாலசிங்கத்தின் மனதில் வலுவடைந்து விசுவரூபமெடுக்கின்றது. எப்படியும் தாயைக் காப்பாற்றிவிடவேண்டுமென்ற மன அவசரத்தோடு பாலசிங்கம் மில்லிலிருந்து முதலாளிக்கும் சொல்லாமல் இரகசியமாக வெளியேறி வீட்டை நோக்கி ஓடிக்கொண்டிருந்தான். தூரத்தில் ரயில் வந்து கொண்டிருப்பது அவனுக்குத் தெரிந்தது. தாய்க்கு அடித்த கையை அவன் வெறுப்போடு மீண்டும் பார்த்துக் கொள்கிறான். 'ஆ சண்டாளன் இதக்குத் தானேடா நான் உன்னைப் பெத்து வளர்த்தனன்'... இப்படித்தாய் சொல்வது போன்ற மனநினைப்பு.

'அம்மா...அம்மா... இந்தக் கை எனக்கு வேண்டாம்...வேண்டவே வேண்டாம்...உங்களுக்குஅடித்த கையைப் பார்க்கப் பார்க்க எனக்கு உலகத்தில்லாத கவலைகளெல்லாம் வருகின்றன. இந்தக் கைபோனுத்தான் எனக்கு நிம்மதி...'

இப்படிக் கண்ணீர்வடித்துக் கதறியபடி பாலசிங்கம் ரயில் பாதையை நோக்கி வேகமாக ஓடினன். ரயிலும் நெருங்கிக் கொண்டிருந்தது. அடுத்த சில விநாடிகளில் தண்டவாளத்தில் பாலசிங்கம் வைத்த கை ரயிலின் சக்கரங்களினல் துண்டிக்கப்பட்டு இரத்தம் சிறிப் பாயப் பாய ரயில் பாதையில் கிடந்து துடித்தது. பாலசிங்கம் கண்ணீரோடு பெற்ற தாயை மனதால் வணங்கிக் கொள்கிறான். தாய்க்கு அடித்த கை ரயில் பாதையில் கிடந்து துடிப்பதைப் பார்த்து பாலசிங்கம் சந்தோசமாகச் சிரித்தபடி கை துண்டிக்கப்பட்ட வேதனையை சகித்துக் கொள்கிறான்.

## அங்கமெல்லாம் நெறஞ்ச...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு சென்று விற்று வந்தனர் மார்க்கட்டில்.

இவன் போய் அங்கு படுத்திருப்பது முதலில் அவர்களுக்குப் பிடிக்கவில்லை தான். பின் ஒருநாள் இவன் தன் வாழ்க்கை வரலாற்றை அவர்களிடம் ஒப்புவித்திருந்தான். அவர்களும் அனுதாபப்பட்டார்கள். அவர்களுக்கும் தண்ணீர் இறைப்பதற்கு ஒருவன் தேவைப்பட்டான். தந்தைக்கும் வயது போயிருந்ததுதானே! சில நாட்கள் செல்ல அவனும் அந்தக் குடும்பத்தில் ஒருவனுகி விட்டான். அவன் கிணற்றிலிருந்து நீர் இறைக்க வேண்டும். அந் நேரங்களில் சில வேளைகளில் லச்சுமியின் ஞாபகம் வரும். அந்நேரங்களில்...

'உச்சிதாம் பூவே
உயர்ந்து நின்ற
தாளம் பூவே
கண்வலிப் பூவே, நான்
கண்டு மிக நாளாச்சே'

என்று ஏதேதோ பாடல்களைப் பாடிக் கொண்டே வேலை செய்தான். சில வேளைகளில் தன் தந்தை, தாயின் நினைவு வரும். அந் நேரங்களிலெல்லாம் தன் தோட்ட வாழ்க்கையின் நினைவு தலையெடுக்கும். நண்பர்களுடன் தான் வாழ்ந்த வாழ்க்கை ஞாபகம் வரும். 'ஏன்? இப்பொழுதெல்லாம், கூலிக்காரர்களின் பிள்ளைகளாக யிருந்தாலும், அங்கப்பனும் ராசவேலும் மற்றவர்களும் சந்தோசமாக இருப்பார்களோ' என்று எண்ணினன். மனம் வருந்தினன். அவன் வாய் அப்படிப்பட்ட நேரங்களில் தன் நிலையை விளக்கும் நல்லதொரு பாடலையே பாடும்.

'கங்காணி போட்ட சட்டை யிரண்டும் கிழிஞ்ச
சட்டை
கூலிக்காரன் போட்ட
சட்டை
கவருமெண்ட்டு வெள்ள
சட்டை'

ஆம். கங்காணி போட்ட சட்டையாகிய தான் இருக்கும் நிலையையும், சாதாரண கூலிக்காரர்களுடைய மக்கள் இருக்கும் நிலைமைகளையும் சிந்தித்துப் பார்த்துக் கொண்டான். மனம் மிக வருந்தினன். இப்பொழுது என்ன செய்ய முடியும்? ஒரு நாள்.......




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டத் தொழிலாளரின் சம்பள உயர்வும் பஞ்சப்படியும்

பெரி. கருப்பையா
பதுளை

கழுதை தேய்ந்து கட்டெறும்பானதாக ஒருகதை உண்டு. அதே நிலைதான் தொழிலாளர் காங்கிரஸின் ஒரு கோரிக்கைக்கும் ஏற்பட்டுள்ளது. நாளொன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் தோட்டத் தொழிலாளரின் சம்பளத்தை உயர்த்தவேண்டுமென்பதேஅந்த கோரிக்கை. அந்தக் கோரிக்கையைக் குற்றுயிராக்குவதற்கு என்னென்னசெய்யவேண்டுமோ அத்தனையும்செய்தாகிவிட்டதாகவே செய்திகள் கூறுகின்றன.

இந்நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு தோட்டத் தமிழன். தேசிய வருமானத்தில் சுமார் மூன்றில் இருபகுதியை உழைத்துக் கொடுப்பவனும் அவனே. ஆனால் அவனுக்குக் கொடுக்கும் சம்பளமோ மிகமிகக் குறைவு. ஏனைய தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தைவிடக் குறைவு.

## அதிக உழைப்பு குறைந்த கூலி

ஆனால் அவனது உழைப்பு ஏனைய தொழிலாளரின் உழைப்பைக் காட்டிலும் அதிகம். தோட்டத்தொழிலாளியைப் போல நகரத் தொழிலாளி பாடுபடமுடியாது என்பது என்னவோ உண்மைதான்.

தொழிலாளர் வர்க்கமே உழைப்புச் சக்தியை விற்று பிழைக்கிறதெனினும், அதிகமான உழைப்புச் சக்தியை மிகக் குறைந்த விலைக்கு விற்பவன் தோட்டத் தமிழன் தான்.

நகரத் தொழிலாளரின் சம்பளங்கள் கூட்டப்படும் போதுகூட தோட்ட தொழிலாளியின் சம்பளம் கூட்டப்படவில்லை. தோட்ட முதலாளிகளின் இலாபம் பல்கிப் பெருகிவந்த போதுகூட தோட்டத் தொழிலாளியின் சம்பளம் அசையாது குலுங்காது உயராது இருந்தஇடத்திலேயே இருந்துவந்தது.

## பட்டினி உயர்ந்தது

சுருங்கக்கூறின், கடந்த 10 ஆண்டுகளாகத் தோட்டத் தொழிலாளரின் சம்பளம் உயரவில்லை. ஆனால் இந்த 10 ஆண்டுகளில் சாமான் விலைவாசிகளோ ஐந்துமடங்கு உயர்ந்துவிட்டன. அதன் விளைவு தோட்டத் தொழிலாளியின் நிலை கால்பட்டினி அரைப் பட்டினியாக உயர்ந்ததுதான்.

## மறக்க வேண்டாம்

கடந்த பொதுத் தேர்தலின்போதும் தோட்டத் தொழிலாளர்களுக்கு இவ் விசயம் சுட்டிக்காட்டப் பட்டது. 1956ல் திரு. பண்டார

## மலைநாடு

நாயக்கா ஆட்சிக்கு வந்த பின்னர் இதுவரை தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் உயர்த்தப்படவில்லையென்றும், ஐ.தே. கட்சி ஆட்சிக்கு வந்தால் தோட்டத் தமிழன் சம்பள உயர்வு பெற்று சபீட்ச வாழ்வு பெற வழிபிறக்குமென்றும்தொழிலாளர் காங்கிரஸின்தலைமை தோட்டத் தமிழர்களுக்கு எடுத்துக்கூறியது. அவர்களும் நம்பினர்.

**ஆகவே தோட்டத் தமிழர்கள் ஐ. தே. கட்சிக்கு வாக்களித்தது சிறிமா-சாத்திரிஒப்பந்தத்தைக் கிழித்தெறிவதற்கு மட்டுமல்ல- தங்களின் சம்பளத்தை கூட்டிக்கொள்வதற்குமாகும். இதனை இ. தொ. கா. தலைமை மறந்துவிடக்கூடாது.**

திரு. பண்டாரநாயக்காவின் ஆட்சியில்நகரத்தொழிலாளர் பெரும்பாலோருக்கு வாழ்க்கைச்செலவு உயர்வு விசேட பஞ்சப்படி ரூபா 17-50 வழங்கப்பட்டது. ஆனால் தோட்டத் தொழிலாளர்களுக்கு அது வழங்கப்படவில்லை. 'வாயில்லாப் பூச்சிகளென'க் கருதி அவர்கள் விடயத்தில் அன்று பாரபட்சம் காட்டப்பட்டது.

## செல்வாக்கு பாதிக்கப்படும்

காங்கிரசுகளும் ஆரம்பத்தில் இதுபற்றி சிரத்தை கொள்ளவில்லை. பின்னர் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் ரூபா 17-50 தோட்டத் தொழிலாளர்களுக்கும் வேண்டுமென விருப்பமின்றி கூறியது.

இது நியாயமான கோரிக்கையாகத் தென்பட்டதெனினும் தொழிலாளர் காங்கிரஸ் அதனை முதலில் ஆதரிக்கவில்லை. காரணம் ஐ. தொ. கா. அதனைக் கோரியதுதான். ஐ. தொ. கா.வின் கோரிக்கையைத் தாங்களும் கோரினால் தங்களின் அந்தஸ்து குறைந்துவிடுமென்றும், தங்கள் தலைமையின் செல்வாக்கு பாதிக்கப்படுமென்றும் இ. தொ. கா. கருதியிருக்கக்கூடும்.

## ஏட்டிக்குப் போட்டி

ஆகவே இ. தொ. கா. அதைவிட பெரிய கோரிக்கையொன்றினை வெளியிட்டது. 'ரூபா 17-50 என்பது ஒரு சின்ன விசயம். போயும் போயும் உப்புச் சப்பற்ற கோரிக்கைகையா சமர்ப்பிப்பது? தோட்டத் தொழிலாளரின் சம்பளம் நாளொன்றுக்கு ரூ. 1-00உயர்த்தப்பட வேண்டுமென்றே நாங்கள் கூறுகின்றோம்' என்று கூறியது இ. தொ. கா. தலைமை. இஃது ஏட்டிக்குப் போட்டியாக முளைத்த கோரிக்கை என்பது இதனின்று தெளிவு.

யார் குத்தினாலும் அரிசியாக வேண்டும் என்ற மனப்பான்மையில் தோட்ட மக்கள் இவ்விரு கோரிக்கைகளையும் ஆதரித்தனர். 'ஒரு பக்கம் விசேட பஞ்சப்படி ரூ 17/50 — மறுபக்கம் நாளொன்றுக்கு ஒரு ரூபாய் சம்பள உயர்வு'. உழைப்புக்குத் தக்க ஊதியம் கிடைக்கும் நாள் அண்மிவிட்டதென அவர்கள் அகமகிழ்ந்தனர்.

## அவர்கள் கடமை அவ்வளவு தான்

நடந்ததென்ன? ஐ. தொ. கா. தங்களின் கோரிக்கையை திட்டவட்டமாக வற்புறுத்தவோ, அதற்காகக் கிளர்ச்சி செய்யவோ, போராட்டங்கள் நடத்தவோ முன்வரவில்லை.அத்திபூத்தாப் போல என்றோ ஒரு நாள் ஒரு கூட்டத்தில் அக்கோரிக்கை பற்றி பிரஸ்தாபிப்பதுடன் அவர்கள் தம் கடமையை முடித்துக் கொண்டனர். அதற்கு அப்பால் செல்ல அவர்கள் தயாரில்லை என்பதைக் காட்டி விட்டனர்.

இதே பஞ்சப்படிக் கோரிக்கையை ஆதரித்த லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனும் நாளடைவில் அதனை மறந்து அரசியல் யூனியனாக மாறிவிட்டது.

அத்துடன் பஞ்சப்படி கோரிக்கையும் மரண மூச்சு வாங்கத் தொடங்கியது. அந்தச் சமயத்திற்தான் தேசிய அரசாங்கத்தின் தொழில் மந்திரி ஜனுப் முகம்மது முன் வந்து தொழிலாளர் அனைவருக்கும் பஞ்சப்படி ரூ. 17/50 கொடுக்கப்பட வேண்டுமென சட்டம் செய்யப் போவதாகத் தெரிவித்தார்.

## மந்திரி ஊட்டிய புத்துயிர்

இதனால் மரணப் படுக்கையிலிருந்த அந்த கோரிக்கையும் சிறிது புத்துயிர் பெற்றது. மந்திரியின் முயற்சியை ஐ. தொ. கா. வரவேற்றது. இதில் வேடிக்கை என்னவெனில், விசேட பஞ்சப்படி கோரிக்கையை இதுவரை வற்புறுத்தாதிருந்த இ. தொ. கா. வும் 'மந்திரி சொல்வதுதான் சரி. தோட்டத் தொழிலாளர்களுக்கு 17/50 கொடுத்துத் தானாக வேண்டும்' என்று அறிக்கை விட்டதே.

அத்துடன் வேதாளம் மீண்டும் முருங்கைமரம் ஏறிக் கொண்டது.

## சுவையான ஒரு கதை

இதைவிட பன்மடங்கு சுவையானது இ. தொ. கா. சமர்ப்பித்த சம்பள உயர்வுக் கோரிக்கையின் கதை.

ஆறு அம்சங்களைக் கொண்ட இக்கோரிக்கையை தோட்டத்துரைமார் சம்மேளனத்துக்குச் சமர்ப்பித்தது இ. தொ. கா. இக் கோரிக்கை பற்றி மாநாடுகளில் சண்டப்பிரசண்டம் செய்தது இ. தொ. கா. தலைமை;சிலபத்திரிகைகளும் சப்பைக்கட்டு கட்டின.

அடுத்து தோட்டத்துரைமார் சம்மேளனத்துடன் இ. தொ. கா. தலைமை பேச்சு வார்த்தை நடத்தி வருவதாகத் தோட்டப் பகுதிகளில் பறை சாற்றப் பட்டது.

பேச்சு வார்த்தை அனுமார் வாலாக முடிவின்றி நீண்டது. இடையிடையே 'பேச்சு வார்த்தைகள் வெற்றி பெறுவிட்டால் வேலை நிறுத்தம் செய்வோம்' என்றும் பிரசார வெடிக்குண்டுகள் வீசப்பட்டன.

இறுதியாக, பேச்சு வார்த்தைகள் பலன் பெறுவிட்டால் 1964 டிசம்பரில் கண்டிப்பாக ஒரு பொது வேலை நிறுத்தம் நடத்தப்படுமென காற்றுடிகள் பறக்கவிடப் பட்டன.

இதில் மிக மிக வேடிக்கையான கட்டம் இரண்டு ஆண்டுகளாக பேச்சு வார்த்தைகள் நடைபெற்றும் கடைசியில் அது புஷ்வாணமாகியதுதான்.

இக்கோரிக்கை பற்றி பேச இரண்டு வருடங்களா என்று மூக்கின் மீது விரலை வைக்க வேண்டாம். பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டுமென்பதற்காக மட்டுமே நடத்தப்படுகிறது. ஆகவே எத்தனை ஆண்டுகள் சென்றாலுமென்ன என்று கருதி பொறுமையின் சின்னமாகி விட்டான் தோட்டத் தொழிலாளி.

இரண்டு வருடங்களுடன் இப்பேச்சு வார்த்தை நின்றுவிடவில்லை. இனி ஒரு கமிஷனை வைத்து பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமென இ. தொ. காவும் முதலாளிமார் சம்மேளனமும் தொடர்ந்து அரசாங்கத்துக்குச் சிபாரிசு செய்தனவாம். கமிஷனுடனும் பேச்சு வார்த்தை நின்று போகாது. அதற்குப் பிறகும் கமிசனின் சிபாரிசு மீது பேச்சு வார்த்தை தொடர்ந்து நடை பெறுமாம்.-

அதற்கு இன்னும் எத்தனை ஈராண்டுகள் செல்லுமோ என்று ஏங்குகிறான் தோட்டத் தொழிலாளி. அத்தனை ஆண்டுகள் வரை விலைவாசிகளின் உயர்வு தோட்டத் தமிழர்களை உயிருடன் விட்டு வைக்குமாஎன்ற கேள்வியை எழுப்பி சங்கடத்தை விளைவிக்காதீர்கள்.

இரண்டு வருடங்களாகப் பேசியும் முடிவு காண முடியாத கோரிக்கைக்கு ஒரு கமிஷன் முடிவு காண முடியுமென்பது நம்பக் கூடிய விஷயமன்று.

## வரி வெட்டும் சம்பள உயர்வும்

கமிஷன் நியமிக்கும் பிரச்சினை எப்படித் தோன்றியது. அது பற்றியும் காற்று வாக்கில் செய்திகள் பறந்தன. அரசாங்கம் தங்களிடம் அதிகமான வரிகள் அறவிடுவதால், சம்பள உயர்வைக் கொடுக்க முடியாதென்றும், சம்பள உயர்வுபற்றி ஆலோசிக்க முதலில் வரியைக் குறைக்க வேண்டுமென்றும் தோட்ட முதலாளிமார் வற்புறுத்தினர்களாம். இ. தொ. கா. வும் அதனை ஏற்றுக் கொண்டதாம்.

முதலாளிமாரின் இந்தக் கோரிக்கையின் அடிப்படையில்தான் கமிஷன் வேண்டுமென கோரப்பட்டதாக கூறப்படுகிறது. தொழிலாளரின் சம்பள உயர்வுக்காகப் பாடுபடுவதாகக் கூறிக் கொள்ளும் இ. தொ. கா. முதலாளிகளின் வரியைக் குறைப்பதற்காகவும் பாடுபடுமாயின், அதைப் பற்றி தொழிலாளர் கவலைப் படமாட்டார்கள். முதலாளிகளின் சங்கம் செய்ய வேண்டியதை ஒரு தொழிற் சங்கம் செய்யுமாயின் செய்யட்டும்.

தோட்டச் சொந்தக்காரர்களிடம் அறவிடும் வரியைக் குறைக்க அரசாங்கத்துக்கு முடியுமானால், தாராளமாகக் குறைக்கட்டும்.அது பற்றியும் தொழில்ளாளர் கவலைப்படப் போவதில்லை. அவர்களுக்கு உடனடியாக வேண்டியதெல்லாம் சம்பள உயர்வே.

கமிஷன் நியமிக்கப்போவதாக மலைநாடு பூராவும்காங்கிரஸ் தலைமை பிரசாரம் செய்தது. இந்தக் கமிஷனால் தோட்டத் தொழிலாளர்களுக்கு எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை என்பதை அவர்கள் உணர்வர். கமிஷனைக் காட்டி சம்பள உயர்வைத் தள்ளிப்போட முடியாது.

## வரி வெட்டுக்கே இக் கமிஷன்


ஈராண்டுகளாகப் பேசியும் முடிவடையாமல் கமிஷனில் பேசுவதற்கு இன்னும் எஞ்சியிருப்பது என்ன?

சம்பள உயர்வு கோரிக்கை நியாயமானதுதான் என்

(9-ம் பக்கம் பார்க்க)

மங்கையர் விரும்பும்
மகோன்னத
'மினேர்வா'

சிறப்பும் வனப்பும் மிக்க சிறந்த
தையல் மெஷின்
இப்பொழுது வெகு சுலபமான மாதாந்த
கட்டுப் பணத்திற்கு உங்களுக்குக் கிடைக்கும்



Minerva 126

நுண்ணிய தயாரிப்பு, நாசுக்காக எவ்வித
தையலையும் சுலபமாகவும், அழகாகவும்
தைத்துக் கொள்ளலாம்.

புதிய வரி விகிதத்தின் பின் எதுவித விலை உயர்வும்
சுமத்தப்படவில்லை.

சென்ற். அந்தனீஸ் ஹார்ட்வெயர்
ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,
516, ஸ்கின்னர்ஸ் ரோடு தெற்கு,
கொழும்பு-10.
டெலிபோன் : 4261-2, 3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படத் தயாரிப்பில் பணச் செலவு குறைய வழி

## பழம் பெரும் நடிகர்களை நீக்கி புது முகங்களைப் புகுத்துவதே

### பிரபல தயாரிப்பாளர் கூறும் யோசனைகள்

தென் இந்திய சினிமாப் படங்கள் தயாரிப்பதில் ஏற்படும் மேலதிகமான பணச் செலவைக் கட்டுப்படுத்த பல தயாரிப்பாளர்கள் சேர்ந்து ஒரு குழுவினை அமைக்கவிருக்கின்றனர். பழம் பெரும் நடிகர்களைப்போட்டுப் படம் பிடிப்பதனால்தான் பணச்செலவு அதிகரிப்பதனால், புது முகங்களைக் கொண்டே படங்களைத் தயாரிக்க வேண்டுமென்று இக் குழு சகல படத் தயாரிப்பாளர்களுக்கும் சிபார்சு செய்யுமாம்.

பிரபல மடைந்து விட்ட நடிகர்களையும் நடிகைகளையும் அடிக்கடி படங்களில் தோன்ற வைப்பதனால், அவர்களுக்கு மென் மேலும் கிராக்கி ஏற்பட்டு விடுகிறது. அத்துடன் நடிகர் நடிகைகளுக்காகவே பெரும் பகுதி பணம் செலவாகி விடுகிறது. இத்தகைய மேலதிகச்செலவுகளைக் கட்டுப்படுத்த புதுப் புது நடிகர்களைத் தேடிப் பிடித்து படங்களைத்தயாரித்தால் படத்தை ஒரு குறிப்பிட்ட தொகைக்குள் முடித்து விடலாம்.


பல விலையுயர்ந்த படங்களைத்தயாரித்த முன்னணித் தயாரிப்பாளரும், டைரக்டருமான ஒரு தென்னாட்டுப் பிரமுகர் இக்கருத்தை அடிப்படையாக வைத்து, சக

**நமது சென்னை நிருபர்**

தயாரிப்பாளர்களை அணுகித் தமது திட்டத்தை அவர்களும் பின்பற்ற வேண்டும் என்றும் கூறி வருகிறாராம்.

பெரும் பாலும் படங்கள் ஆரம்பிக்கப்பட்டு முற்றுப் பெறுவதற்கு விநியோகத்தர்களின் கையையே பட முதலாளிகள் நம்பவேண்டியிருக்கிறது. பெரிய நடிகர்களைப் போட்டு எடுக்கப்படாத படங்களுக்கு விநியோகத்தர்கள் பணம் அதிகம் கொடுப்பதில்லையென்ற குறையை நீக்க தயாரிப்பாளர்கள் சேர்ந்து மாவட்டங்களில் பட விநியோகத்துக்கான ஒரு கூட்டுறவையும் ஏற்படுத்துவதென ஆலோசனைகளும் கூறப்பட்டதாம்.

புதிய நடிகர்களைக் கொண்டே படங்களைத்தயாரிப்பதனால் பல தொல்லைகள் நீங்கி விடுமென்றும் மேற் குறிப்பிட்ட பிரமுகர் நமது நிருபரிடம், தமது சொந்த அனுபவங்களை வைத்தே கூறினார்.



சினிமாஸ் திரைகளில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் பிஸ்வா பிலிம்சாரின் 'யட்டகிய தவச' என்ற சிங்களப்படத்தில் ஜீவராணியும் காமினி பொன்சேகாவும் தோன்றும் ஒரு காட்சி. இப்படத்தின் இயக்குநர் என். எஸ். மகேந்திரன். ஒளிப்பதிவு செய்தவர் ஜே. செல்வரத்தினம்.

## ஆடி விழாவில் பூசாரி பொன்னையா

தமிழர் சமூகத்திலிருந்து கொஞ்சம், கொஞ்சமாக மங்கிக் கொண்டு போகும் ஆடிப்பிறப்புத் திருநாளை மீண்டும் கொண்டாடும் நோக்கமாக கலைக்குவியல் நாடக மன்றத்தார் கல்வியங்காடு சைவவித்தியாசாலை மண்டபத்தில் 16-7-65 ஆடிப்பிறப்புத் தினத்தன்று அதிகமான பொருட் செலவில் கொண்டாட இருக்கிறார்கள். தமிழ் நாடகங்களைத் தயாரித்து அளித்த திரு. நா. கேசலிங்கம் மேடையேற்றும் 'பூசாரி பொன்னையா' எனும் முழு நீள நகைச்சுவை நாடகத்திற்கு வண்ணை கணணன் குழுவினர் இசை அமைத்திருக்கிறார்கள்.

## எமது விமர்சனம்

# ஹட்டாரி (HATARI)

மிருகக் காட்சிச் சாலைகளுக்குச் சென்று பலவகையான மிருகங்களையும் சுலபமாகப் பார்த்து விட்டு வந்துவிடுகிறோம். சர்க்கஸ்களிலும் மிருகங்கள் செய்யும்அற்புத விளையாட்டுகளைப் பார்த்து வியக்கிறோம். ஆனால் இக் கொடிய வன விலங்குகளை மிருகக் காட்சிச் சாலைகளுக்கும், சர்க்கஸ்காரர்களுக்கும் பிடித்துக் கொடுப்பவர்கள் யார்? இம் மிருகங்களை அவர்கள் எப்படிப் பிடிக்கிறார்கள்? இது தான் 'ஹட்டாரி' என்ற படத்தின் கதை. கிழக்கு ஆபிரிக்காவிலுள்ள தங்கனிக்காவை அடுத்த கொடிய வனந்திரத்துக்கு ஹட்டாரி தயாரிப்பாளரும் டைரக்டருமான ஹோவாடு ஹவக்ஸ் நம்மைஅழைத்துச் செல்லுகிறார். காண்டாமிருகம, ஒட்டகச்சிவிங்கி, காட்டுஎருமை, சிறுத்தை, முதலிய மிருகங்களைப் பிடித்துக் கூட்டில் அடைக்கும் பயங்கர வித்தையை நாமும் கண்ணாரப் பார்த்து மகிழுகிறோம்.


வனவிலங்குகளை உயிருடன் பிடிக்கும் குழு ஒன்றை மையமாக வைத்து, பல பயங்கரச் சம்பவங்களுடன் இரு காதல் கட்டங்களையும் புகுத்தி, நகைச்சுவையும் சேர்த்து சிறந்த கதையை அமைத்து, சுவைகெடாமல் கண்கவர் வர்ணத்தில் 'ஹட்டாரி' படமாக்கப்பட்டுள்ளது. 'ஹட்டாரி' என்றால் கிழக்கு ஆபிரிக்கர்களின் ஸ்வாஹிலி மொழியில் அபாயம் என்று பொருள். ஒன்றன் பின் ஒன்றாக பல அபாயகரமான சம்பவங்களை இணைத்து பார்ப்போர் பரவசமாகும் வண்ணம் இப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஜோன்வைன் இப்படத்தில் கதாநாயகனாக வருகிறார். எல்ஸா மாட்டினெலி என்ற இத்தாலிய நடிகை ஜோன்வைனின் காதலியாக வருகிறார். ஒன்றன் பின்ஒன்றாக மூன்று யானைக் குட்டிகளின் அன்புக்குப் பாத்திரமான இவர் இறுதியில் அந்த யானைக் குட்டிகளை விட்டு விட்டு ஓடிப்போக முயன்றும் முடியாது போகிறது.

நகைச் சுவைப்பாகத்தை ஏற்று, ரொக்கட் மூலம் குரங்குகளைப் பிடிக்கிறார் ரெட் பட்டன்ஸ். வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் கட்டமிது. மற்றும் பிரான்சைச் சேர்ந்த கிராடன், ஜெர்மனியைச் சேர்ந்த குருகர், போன்ற சர்வதேச நடிகர்களும் இப்படத்தில் நடிக்கின்றனர்.

பலதரப்பட்ட இரசிகர்களையும் திருப்திப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட ஹட்டாரி ஒரு உயர்ந்த பொழுது போக்குப்படம். இப்பொழுது கொழும்பு லிபேர்ட்டியில் திரையிடப் பட்டுள்ளது.

-நாதன்



தாங்கள் பிடித்துள்ள வனவிலங்குகளின் பட்டியலை ஜோன் வைனும் ஹாடி குருகரும் ஒப்பு நோக்குகின்றனர். 'ஹட்டாரி'யில் ஒரு கட்டம்.

## லவகுசா



தனது குடும்பச்சண்டையில், இராமனையும் சீதையையும் அயோத்தியின் சலவைத் தொழிலாளி அவமதிக்கிறான். இதனால் புண்பட்ட இராமனின் உள்ளம்குமுறுகிறது. ஏற்கனவே பிரிவுத்துயரால் வருந்திய இராமனும் சீதையும் மீண்டும் பிரிகின்றனர். வனவாசத்திலிருக்கும் சீதைக்குப் பிறந்த இரட்டையர்களான லவனும்குசனும் வாழ்ந்த வீர வாழ்க்கைதான் பலவர்ணத்

தமிழ்ச்சித்திரமாக சினிமாஸ் திரைகளில் காண்பிக்கப்படும் 'லவகுசா' ராமராவ், அஞ்சலி, ஜெமினி கணேசன், ராதா, நாகையா முதலிய முதற்தர நடிகர்கள் இப்படத்தில் தோன்றுகின்றனர்.

# கொள்ளையர் தொலைந்தனர் சர்வாதிகாரம் ஒழிந்தது

சர்வாதிகாரி ஒருவனின் சூழ்ச்சி வலைக்குள் அந் நாடு சிக்கி அல்லலுறுகிறது. அரசியல் அசந்து போன இச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு கொள்ளைக் கூட்டமும்புகுந்து நாட்டைச் சின்னா பின்னப்படுகிறது. மக்கள் பல தொல்லைகளுக்குள்ளும் சிக்கித் திண்டாடிக் கொண்டுள்ளனர்.

இவ்வேளையில் தான் மக்களுக்குச் சேவை புரிய தன்னலமற்ற ஒரு வீரன் முன் வருகிறான். எதையும் சாதிக்க வல்லவனான அவ் வீரன் சர்வாதிகாரியையே அணுகுகிறான்.

தானே நாட்டைக் கொள்ளையடித்துக்கொண்டிருக்கும் போது, தனக்கே



ஒரு கொள்ளைக்காரன் போட்டிக்கு வந்தால் எப்படியிருக்கும்? சர்வாதிகாரி, எப்படியோ கொள்ளைக்காரனை பிடித்துத் தரும்படி வீரனைக் கோருகிறான். கொள்ளையனை பிடித்துத் தந்தால் மக்களைச் சர்வாதிகாரப் பிடியிலிருந்து தளர்த்த வேண்டுமென்று ஒரு கோரிக்கை விடுகிறான் வீரன். சர்வாதிகாரியும் சம்மதிக்கிறான்.

கொள்ளைக் கூட்டத்துடன் தீவிரமாகப் போர் புரிந்து கொள்ளையர் தலைவனைப் பிடித்து வந்து சர்வாதிகாரி முன் நிறுத்துகிறான் வீரன். அண்மையில் இக்கட்டங்களை விஜயா ஸ்டூடியோவில் ஒளிப் பதிவாளர் இராமமூர்த்தி படமாக்கினார்.

கொள்ளையர் தலைவனாக நம்பியாரும். சர்வாதிகாரியாக ராமதாசும், வீரனாக எம். ஜி. ராமச்சந்திரனும் தோன்றும் இக்கட்டங்களை, பத்மினி பிக்சர்சாரின் 'ஆயிரத்தில் ஒருவன்' வர்ணப் படத்துக்காக பி.ஆர்.பந்துலு டைரக்ட் செய்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தாமரகுமாரியின் பொன் முகத்தையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்த அந்தப் புதியவனின் விதிவிலக்கான தோற்றம் கணேசனை விதிர் விதிர்க்கச்செய்துவிட்டது. தன்னை மறந்த வியப்போடு கணேசன் அந்த புதியவனின் புதுமையான தோற்றத்தை எடைபோட்டான்.

செம்பட்டைக்குச் சற்றுக் கூடிய பொன்னிறமான கேசம், வெள்ளைக்காரருக்கு இருப்பதுபோன்ற நீலமணிக் கண்கள், நிறமும்; வெள்ளைக்காரருக்கு இருப்பது போன்ற உரித்த கோழி நிறம்! ஆசாமி அசம்புநோக்குக்கு ஒரு வெள்ளைக்காரனை நினைவூட்டினுலும், அவனுடைய நடை உடைக்கு,அசல் வெள்ளைக்காரனுக்குரிய 'தனித்துவம்' இருக்கவில்லை. பார்வையில் கூட ஒரு வெள்ளைக்காரனுக்குரிய 'ஒரிஜினல்' இருக்கவில்லை. ஆக, அந்தப் புதியவன் ஓர் ஐரோப்பியனுகவும், ஆசியாக்காரனுகவும் ஒரே சமயம் காட்டி, தான்தான் இந்த புதுமையான தோற்றத்தால் குழப்பமுற்ற கணேசனுக்கு மேலும் குழப்பத்தை ஏற்படுத்தியது—அந்தப் புதியவன் தாமரகுமாரியுடன் சரளமாகச் சிங்களத்தில் உரையாடியாது!

பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த தாமரகுமாரியை வலிந்திழுத்து அவனுடன், மலைநாட்டை உடைத்தெறிந்து கொண்டு ஓடும் 'உடரட்ட மெனிக்க' வேகத்தில் அவன் உரையாடிய 'சலுகை'யைப் பார்த்த போது, அந்தப் புதியவனுக்கும், தாமரகுமாரிக்குமிடையில் ஒரு நெருங்கிய தொடர்பும், உறவும் இருக்கவேண்டுமென்ற ஊகம் கணேசனைப் பற்றியது. தாமரகுமாரிக்குச் சந்தர்ப்பம் கொடுக்காமல் அவனே 'மள மள' வென்று பேசிக்கொண்டு போனுன். மிகுந்த சிரமத்தின் பேரில் இடைமறித்து இரண்டொரு வார்த்தைகளைத் தாமரகுமாரி பேசினுள். அப்படிப்பேசிய இரண்டொரு வார்த்தைகளும், தர்க்கங்களும் அந்தச் சிறு பொழுது தடங்கலின் பின், அவளிடமிருந்து புதிய உத்வேகத்தோடு எழுந்த வார்த்தைக் கோர்வைகளுக்கு மத்தியில் நசுங்குண்டு, பலவீனமடைந்தபாங்கினைத் தாமரகுமாரியின் முகாரவிந்தத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் தெளிவுற எடுத்துக் காட்டின. அவள் அவனுடைய உபதேசத்தை எப்படி ஏற்கின்றுள? அல்லது எப்படி ஏற்கவில்லை? என்ற விபரங்களையெல்லாம் தீப ஒளியில் பிரகாசித்த அவளுடைய தூயமுகம் எடுத்துச் 'சொல்லி'க்கொண்டிருந்தது.

கோயில் மண்டபத்துள்ளேயே அவர்களுடைய சம்பாசனையின் பெரும் பகுதி கழிந்தது. என்னென்னவெல்லாமோ தாமரகுமாரியிடம் அவன் கூறிவிட்டு, அவளுடைய சம்மதத்தையும் பெற்றுக்கொண்டவன் போல் அந்தக் கூட்டத்தில் அவன் எங்கோ மறைந்துவிட்டான். அவன் பிடியில் இருந்து விடுபட்ட தாமரகுமாரி, முகத்தில் பழைய சாந்தியை வரவழைத்துக் கொண்டு மெல்ல வெளியில் வந்தாள் அப்படி வரும போதெல்லாம், திரும்பவும் அந்த மனிதன் தன்னைப் பின் தொடர்கின்ருனு? என்ற பாங்கில் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே ஜாக்கிரதையாக வந்தாள். கோயிலுக்குள் நடந்த அந்த நாடகத்தைத் தாங்கள் கவனித்ததாகவே காட்டிக்கொள்ளாமல், கணேசனும், இலட்சுமியும் ஒரு புறம் ஒதுங்கிக் கொண்டார்கள்.

வெளியில் வந்த தாமரகுமாரி தன்னுடைய மணம் பரப்பும் விழி மலர்கள் இரண்டிலும் கணேசனையும் இலட்சுமியையும் துழாவினுள். அந்தத் தேடுதலின் போது அவள் திருமுகம் கொட்டிய அந்தப் புது அழ

## 24. புரிந்தாள்! புரியவில்லை!

இடம் தெரியாமல் மறைந்த விந்தையைச் செய்த அந்த மோகனப் புன்னகையின் ஆற்றலை மனத்துள் எண்ணி வியந்து கொண்டு, தாமரகுமாரியிடம் கேட்கவேண்டிய கேள்விகளை இலட்சுமியிடம் சொன்னுன் கணேசன்.

"இத்தனை நேரமாக பகவான் புத்தரிடமும், முருகப் பெருமானிடமும் பிழிந்து பிழிந்து நீ அப்படி எதைத்தான் கெட்டாயோ? என்று அறிவதில் இந்த மாஸ்டர் மிகுந்த அக்கறை செலுத்துகின்ருர் குமாரி!"

இலட்சுமி தாமரகுமாரியைப் பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்டதும், கணேசனுடைய முகத்தை ஏறெடுத்துப் பார்த்தாள் தாமரகுமாரி. அவளுக்கே உரியதான அந்தத் தனித்துவப் பார்வை, அவள் அதற்குச் சொல்ல வேண்டிய பதிலை அப்படியே அவனுக்குமட்டும் கேட்கக்கூடியதாக ஒலிபரப்புச் செய்தது. கணேசன், தாமரகுமாரியின் இல்லத்துக்கு அருகாமையில், குடிபுகுந்த நாளிலிருந்து, அவனுக்குமட்டும் இரைந்துகேட்கும்படியாக அவள் பார்வையும், பால்போன்ற சிரிப்பும், தாய்மை படிந்த துயரமும் 'கியூ'வில் நின்று கொண்டு ஒலிபரப்புச் செய்வதை அவன் பலதடவைகள் அவதானித்ததுண்டு- கேட்டதுமுண்டு. அப்பொழுதெல்லாம் அவளை ஓரளவு புரிந்துகொள்ளவும் அவனுல்இயன்றது. ஆனுல், நாட்செல்லச் செல்ல மிக நுணுக்கமாக அவளுடையசெயல்கள் நடத்தைகளை அவன் அவதானிக்கத் தொடங்கியதும் அவள் ஒரு புரியாத புதிராகப்பட்டது கணேசனுக்கு! கடவுளைப் பற்றி அடிக்கடி சொல்லப்படுகின்றதல்லவா ஒரு வாக்கியத் தொடர், 'கண்டவர் விண்டதில்லை, விண்டவர் கண்டதில்லை' என்று, அதே கதை தான் இங்கும்! தாமரகுமாரியென்ற புதிரை அவன் தெரிந்து கொண்டான்; தெரிந்து கொள்ளவில்லை! அவன் வீட்டில் இருக்கும்போது, இவள் அவளுடைய வீட்டில் இவனுக்குத் தெரியத்தக்கதாக நின்றுகொண்டு, இமைக்கும் நேரத்துக்கொருதடவை தேன்பிலிற்றும் தன் செவ்விதழ் விரித்துக் சிரிக்கும் போதெல்லாம் கணேசனுக்கு அவள் புரிந்தாள்! எங்கோ? எதையோ பறிகொடுத்த பாங்கினில், விருப்பு வெறுப் பற்ற துறவு நிலையில் அவள் முகத்தை வைத்துக்கொண்டிருந்தபோதெல்லாம் அவள் புதிரானுள்! அவள் புதிரோ? புதிர் இல்லையோ? இருந்துவிட்டுப்போகட்டும். கணேசன் என்ற தனிமனிதன்அதனுல் பட்டவேதனை- துடித்த துடிப்பு அவன் உயிரைப் பலிகொள்வதாகஇருந்தது! ஒரே சீரான குணநலமுள்ள ஒரு பெண்ணுக அவள் இருந்திருந்தால், சிலவேளை இத்தனை தாரத்துக்குக் கணேசனை அவள் ஆட்கொண்டிருக்க முடியுமோ? இல்லையோ? தெரியாது.

பாடசாலை விட்டுக் கணேசன் வீட்டுக்கு வரும்போது, ஒரு திர்க்கமான முடிவோடு அவன் வந்திருப்பான். மனத்தை வீண் அலைக்கழிப்பில் சுழலவிடாமல் உறுதியுடன் இருப்பது என்ற வைராக்கியத்துடன் அவன் வந்திருப்பான். பொங்கிப் பிரவாகமெடுக்கும் புனித கங்கை நாதிபோல் தாமரகுமாரி அவன் முன் தோன்றி "மாத்தயா!" என்று தேன் சிதறும் தன் இனிமை மிகுந்த குரலால் அழைத்துக் கொண்டு வந்ததும், அவனுடைய உறுதிப்பாடு மிக்க மனப்பாறை அந்த வெள்ளப் பிரவாகத்தில்உருண்டு போய் விடும். அப்பொழுதெல்லாம் கணேசன் மிக மிகப் பலவீன புருடனுகி அவளுடன் கரைந்து போவான். அவளுடைய அழகு அவனுடைய மனப் பீடத்துக்குச் சலவைக்கல் பதிக்கும் அதே வேளையில் அவளுடைய புரியாத நிலை அந்தச் சலவைக் கற்களைச் சம்மட்டி கொண்டு நொறுக்கித் தூள் செய்துவிடும்.

தாமரகுமாரியைப் பார்த்து இலட்சுமி "அப்படி என்னதான் இறைவனைப் பார்க்துப் பிழிந்து பிழிந்து நீ கேட்கின்ருய்?" என்று கேட்கவும், அதற்கு அவள் ஒன்றுமே கூருதுகணேசனைப் பார்த்து அவனுக்கு மட்டும் கேட்கக்கூடியதாகத் தன்னுடைய தனித்துவப்பார்வை மூலமாக எதையோஒலிபரப்புச் செய்யவும் கணேசனுடைய அங்கமெலாம் புல்லரித்தது... இதென்ன கூத்து? கணேசனுடைய முகத்தில் நிலைத்திருந்த தாமரகுமாரியின் கண் மலரிலிருந்து 'பொல பொல' வென்று நீர் முத்துக்கள் உதிர்கின்றனவே!

கையொரு கணம் தனக்குள் மென்று விழுங்கி இரசித்துக் கொண்டு, மேலும் அவளைத் தேட விடாமல், அவள் எதிரில் வந்து நின்ருன் கணேசன். அவன் அருகிலேயே வந்து கொண்டிருந்த இலட்சுமியும் அவனை முந்திக் கொண்டு தாமரகுமாரியை நெருங்கினுள். கணேசனையும் இலட்சுமியையும் மாறி மாறிப் பார்த்து தனக்கே உரிய, பார்ப்போரை அப்படியே கௌவி ஈர்க்கும் அந்த மாயச்சிரிப்பை உதிர்த்தாள் தாமரகுமாரி. தெய்வம் உறையும் அந்தப் புனிதப்பிரதேசத்து வெளியெலாம் மீண்டும் ஒரு கூடை அன்றலர்ந்த ரோஜா மலர்களும், ஒளி சிந்தும் ஒரு கோடி நட்சத்திரங்களும் வாரி இறைக்கப்பட்டன.

சற்று நேரத்துக்குமுன்னர் தாமரகுமாரியின் முகத்தில் தேங்கியிருந்த கிலேசம் ஒரு நொடிப்பொழுதில் இருந்த

"பாமழை புலவர் பெய்யப்
பாவை தேய்ந் தின்பங் கண்டாள்
காமனே 'கவர்ச்சி' தன்னைக்
கடைந்திவள் உருவஞ் செய்தான்
தாமரை மங்கை யிங்கே
தாவியென் னுள்ளஞ் சேர்ந்து
தாமரை விகசின்ற
சாந்தியில் வாழ்கின்றேனே!"

-மாவிட்டபுர ஆனந்தன்

'சுதந்திரன்
புதிய சந்தா விபரம்
ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7-50
நிர்வாகி
சுதந்திரன்

## மீன் பண்ணை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யது. அதுபோல மீன் பண்ணை என்று சொன்னுல் கேலி செய்வார்கள். வெறுப்பார்கள். இன்னும்சில ஆண்டுகளுள் இது ஒரு சாதாரண விடயமாக வரும். அப்பொழுது எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். இதை முதல் முதலில் தொடங்கிச் செய்பவர்கள் பணம் ஈட்டுவது சுலபம்; உறுதி.

இலங்கையில் கடலோரங்களில் உப்பங்கழிகளாக இருக்கும் இடங்கள், குடாவாக இருக்கும் இடங்கள், யாழ்ப்பாணத்தில் தீவுகளுக் கருகாமையிலும், மட்டகளப்புகுடாவிலும் மீன் பண்ணைகள் அமைத்து நடாத்த இயற்கையாகவே அமைந்த பல இடங்கள் உள்ளன, அதிக செலவின்றி இவைகளை பண்ணைகளாக்கி தொழில் செய்ய வாய்ப்புண்டு. இத் தொழில் முன்னேடிகளாக ஈடுபடுவோருக்கு அரசாங்கமும் உதவிபுரியும்.

(முற்றும்)

## பெண்...

((6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்களை விடச் சிறியவர்களாயும், பூவைப்போல் மென்மையானவர்களாயும் இருக்கிருர்கள். அவர்களுடைய சருமம் மிகவும் மென்மையானது. ஆகவே, பெண்களின் மென்மையைப் பாதுகாப்பது ஆண்களின் கடமையாகும்.

## சிலம்பும்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கோள்கள், உவமைகள், உருவகங்கள் எல்லாம் மேகலையில் அப்படியே எடுத்தாளப்படுகின்றன. சிலம்பில் வரும் மணிமேகலை துறவை நமது பிரச்சாரத்துக்கேற்ற கருவாகக்கொண்டு, ஒருதனி காப்பியத்தையே ஆக்கினுர் சாத்தனுர். ஆனுல்மதப்பிரச்சாரத்தை ஆதாரசுருதியாக கொண்ட சாத்தனுர் !சிலம்பிற்கு முரண்பட்ட செய்திகளையும் கருத்துக்களையும் கூறிவிடுகின்ருர்.

(முற்றும்)

## அவரைப்பற்றி இவர்

"அழகை உமிழும் கவிதை நடை, கவர்ச்சிகரமான உபமானங்கள், நெஞ்சோடு ஒட்டவைக்கும் சம்பவங்கள் —இவை காண்டேகரின் பெருமைகள். ஆனுல் அவருடைய பல கதைகள் ஒரே மாதிரி இருக்கின்றன. நடையின் அழகு மாறினுல் போதுமா?"

-அகிலன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 9. மாமா வீட்டில்....?

ஆனைக்கோட்டைக்குச் செல்லும் வீதியிற்கால் பதித்து நடக்கும்போது அவனுக்குப் பழைய சம்பவம் நினைவுக்கு வந்தது. நேரம் மாலை நான்கு மணி. மாமா வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்த தில்லையின் முகத்தில் சாய்ந்த கதிரவனின் மஞ்சட் கதிர்கள் படிந்தன. வீதியின் இரு மருங்கிலும் வானளாவி வளர்ந்திருந்த மரங்களின் நிழல்கள் கிழக்கே நீண்டிருந்தன. அன்றிரவு அவன் மறைந்து ஒளிந்திருந்த ஐயனார் கோவில் ஆலமரத்தைக்கடந்தபோது அவனையறியாமல் அவன் கால்கள் நின்று தயங்கின.

கோம்பயன் மணற் சுடலையைக்கடக்கும்போது, சற்று நின்று தான் நடந்து கடந்த வந்த மண் வீதியைப் பார்த்தான். வந்த வீதியிலே கள்வரால் துரத்தப்பட்டுத் தான் ஓடிய நிகழ்ச்சியை எண்ணிக்கொண்டான். கள்ளர் கூடியிருந்த ஆறுகால் மடத்தைக் கண்டதும் அவன் கால்கள் அவனையறியாமலேயே தயங்கின. மாபயங்கர இரவு தான் அது.

மாமா வீடு நோக்கி நடந்தான்.

மாமா வீட்டிலில்லை. வெளியேபோனவர் இன்னும் வரவில்லை. மச்சானும் பக்கத்து வீட்டிற்கு விளையாடப் போயிருந்தான். மாமி தான் இருந்தாள். தில்லையைக் கண்டதும் அன்போடு வரவேற்றாள்.

"மாமி! மச்சான் எங்கே?"

"விளையாடப் போனான். போய்க்கூட்டிக் கொண்டுவாவேன்!" என்றாள் மாமி. முத்தையாவைக்கூட்டிவர அவன் எழுந்தபோது, தகரப்படலையை அறைந்து சாத்திக்கொண்டு முத்தையா ஓடிவந்தான்.

"அட, தில்லை மச்சான்! இப்பத்தான் வாறியா?" எனக் கேட்டான். தில்லை தலையை ஆட்டினான்.

"இருந்து கொள்! உனக்கு நானொரு சாமான் வைத்திருக்கிறேன்! எடுத்து வாறன்!" என்று உள்ளே ஓடியவன் திரும்பி வந்தான். அவன் கையிலே—

தில்லை கண்களைக் கசக்கிக்கொண்டுபார்த்தான். அவன் காண்பது உண்மை தான். உடையார் வீட்டு மாடத்திலே பார்த்த அதே தந்த யானை! 'உனக்கு வேணுமா?' என உடையார் கேட்கக் காரணமாக இருந்த அதே யானை! மினுமினுத்த உடல்! மணிக் கண்கள்! பின்புறம் நிலையில் துதிக்கை! தில்லை அதன் தந்தங்களைப் பார்த்தான். ஒரு தந்தம் உடைந்திருந்தது. உடையார் வீட்டில் களவு போன யானை இங்கு எப்படி வந்தது? அவனுக்கு அடிவயிற்றில் ஏதோ செய்தது.

"என்னடா திகைச்சிட்டாய்?" என முத்தையா அவனை உலுக்கினான். தில்லை சமாளித்துக்கொண்டான்.

"இதை உனக்கு யார் தந்தது?"

"ஐயா தந்தார்! ஏன்....?"

"எப்ப ...?"

"ஒரு கிழமைக்கு முன்....! இந்தா, இது உனக்குத்தான்!" என்று அந்த யானைப் பொம்மையைத் தில்லையின் கைகளில் திணித்தான். முத்தையா எதைக் கொடுத்தாலும் மகிழ்வோடு வாங்கும் அவன், இன்று அந்தத் தந்த யானையை மிகுந்த அருவருப்போடு வாங்கினான். அவன் மனதில் பல சந்தேகங்கள் எழுந்தன. மாமா வீட்டிற்குள்ளும், தன் வீட்டிற்குள்ளும் ஏதோ இரகசியம் நூலிழை போல் மறைந்திருப்பதாக அவன் பிஞ்சு மனத்திற்குப்பட்டது. அவன் தனக்குள் பொருமினான்,

**செங்கை ஆழியான்**

எங்காவது வெளியே சென்றுவந்தால் நல்லாயிருக்குமென எண்ணினான். மாமாவின் வயலுக்குப் போய்வர மச்சானும் ஒப்புக்கொண்டான்.

"பொழுது படுமுன் வந்திடுங்கள்?" என்று மாமி கூறியனுப்பினாள். வயல்வெளி வரம்பிலே நடக்கத்தொடங்கினார்கள். சூரியன் மேற்கே நன்கு சாய்ந்து விட்டான். கதிர்கள் மேகத்திரையில் வர்ணக்குழம்பை வாரியிறைத்திருந்தன. நடந்துகொண்டிருந்த தில்லை, முத்தையாவைக்கேட்டான்:

"எங்கே மாமா இந்தப் பொம்மையை வாங்கினாராம்?"

"எனக்குத் தெரியாதடா? அவராத்தான் கொண்டு வந்து தந்தார்!"

இருவரும் மௌனமாகச் சிறிது தூரம் நடந்தனர்.

"அதோ...ஐயா வாறார்!" என்று கூவினான் முத்தையா. தில்லை அவன் காட்டிய பக்கமாகப் பார்த்தான். மாமாவும் இன்னொருத்தனும் வந்து கொண்டிருந்தார்கள்.

இவர்கள், அவர்களை நெருங்கிய போது தில்லை திரும்பவும் திடுக்கிட நேர்ந்தது. மாமாவுடன் கூடவந்தவனைப்பார்த்தபோது அவனை எங்கோ பார்த்தது போன்ற ஒரு நினைவு அவனுள் எழுந்தது. "இவனை எங்கே எப்போது பார்த்தேன்?" என யோசித்தான். 'ஆலமரத்தின் பருத்த வேர் போன்ற உருண்டு திரண்ட இந்த உடம்பை எங்கோ கண்டிருக்கிறேனே?'

'ஆலமரம்' என்று நினைவு வந்ததும் அவன் யாரென்று அவனுக்குத் தெரிந்து விட்டது. இவனுக்கும் மாமாவிற்கும் என்ன சம்பந்தம்?

தில்லை! எப்ப வந்தாய்?', என மாமா அழைத்தார்.







# அண்ணாவின் அறிவுரைகள்

உரிமைக் கிளர்ச்சி:-

'உரிமைக் கிளர்ச்சி ஒரு உதட்டுச் சொல் அல்லவே! அதிலும் நம் உரிமை முரசு நம் இதயத்திலிருந்து எழும்பும் இலட்சிய கீதம்! இதுசீறியெழும்புயல்! இதைத் தடுக்க நினைக்கலாம். ஆனால் முடியாது'.

முதலாளி வர்க்கம்:-

'அதிகார மண்டபத்தில், பணமூட்டைகளின் மீது அமர்ந்து கொண்டு, உழைக்கும் கூட்டத்தினரை சொக்கட்டான் காய்களை நகர்த்துவதுபோல் அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது முதலாளி வர்க்கம். இவ்வர்க்கத்தைப் பூண்டோடு அழித்து ஒழிக்க வேண்டியது பொது மக்கள் கடமை.'

கடமை:-

'தொல்லையா? கவலைப் படாதே! சொல்லடியா? சோர்வடையாதே! பகைவரின் படையா? பயமுறாதே! எதிர்க்கட்சியினரா? ஏமாந்து விடாதே! சனாதனமா? சாய்ந்து விடாதே! சதியா? அதைச் சாகடி! மதமா? அதை மங்கவை!'

தொகுத்தவர்:—
சி. சண்முகலிங்கம்,
திருகோணமலை.

# குழந்தை

முகிலன்

மாலை நேரம் தோட்டத்தில்
மகிழ்ந்திருக்கும் குழந்தாய்பே
சோலைத் தென்றல் சுவைத்து நீ
சிரித்து உள்ளம் மகிழ்ந்தாயோ?

உயரவளர்ந்த மரங்களுமே
உன்னைச் சூழ்ந்து இருக்கையிலே
பயமே சிறிதும் இன்றி—நீ
பார்த்திருப்ப தெதனையோ?

அஞ்சி நித்தம் செத்திடும்
அவனி மாந்தர் பலருக்கு
பிஞ்சுக் குழந்தாய் நீயும்—நற்
பாடம் புகட்ட வந்தாயோ?

நெற்றி தன்னில் திலகமிட்டு
நீண்ட மயிரைச் சீவி விட்டு
வெற்றிச் சிரிப்பை உதிர்க்கும்—நீ
விரலை வாயில் வைப்பதுமேன்?

காலில் செருப்பு மாட்டியும்
மேலிற் சட்டை பூட்டியும்
காலை நீட்டி இருக்கும்—நீ
[illegible]

# புதுமைகள் பாரீர் பாரினிலே-(46)

-அன்ரனி பெர்னாண்டோ, கிரிலப்பனை-

## குருடர்களும் இனி தொழில் செய்யலாம்

பெரிய வர்த்தக நிறுவனங்களில் மேசைக்கு ஒன்று வீதம் பல தொலை பேசிக் கருவிகள் வைக்கப்பட்டுள்ளன. இவை யாவற்றிற்கும் வெளியிலிருந்து நேரடித் தொடர்பு கிடையாது. வெளியில் ஒரு சில இணைப்புகள் மட்டுமே இருக்கும். இவற்றின் வழியே வரும் அழைப்புகள் முதலில் வர்த்தக நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ள ஓர் இணைப்புக் கருவியை அடையும். இணைப்புக் கருவியில் பணிபுரிவதற்கு ஒருவர் இருப்பார், அவர் அழைப்பைப் பெற்று, யாருடன் பேசவேண்டும் என விசாரித்து உள்ளே மேசைகளில் உள்ள தொலை பேசிகளில் உரியத்துக்கு இணைத்துவிடுவார்.

உள்ளே இருக்கும் ஒருவர் உள்ளே இருக்கும் மற்றொருவரோடு பேசுவதற்கும் இணைப்புக்கருவியில் பணியாற்றுபவர் தொடர்பேற்படுத்தித் தருவர். மேசைகளில் இருக்கும் தொலைபேசிக் கருவிகளில் ஒன்றின் பேசும் கருவியைக் கையில் எடுத்ததும் இணைப்புக் கருவியில் 'பர்...ர்..ர்..'' என்ற ஓசை உண்டாகும். அது எந்த மேசைச்குரியது என்பதைக்காட்டுவதற்கு இணைப்புக்கருவியில் அதற்குரிய விசையின் பக்கத்தில் இருக்கும் சிறு துவாரத்தை ஒரு வெள்ளை வட்டம் மறைத்துக்கொள்ளும். உடனே இணைப்புக் கருவியில் பணிபுரிபவர் விசையை முடுக்கிவிட்டு அவரோடு பேசவேண்டிய இடத்திற்குத் தொடர்பு உண்டாக்கிக்கொடுப்பார்.

இணைப்புக் கருவியில் வரிசையாக உள்ள விசைகள் நன்றாகக் கவனித்துப் பார்த்து தவறுதல் ஏற்படாமல் சரியானதை முடுக்கி உடனுக்குடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது அவ்வளவு சுலபமான வேலையல்ல. இதற்கு நல்ல தேர்ச்சியும் புத்திகூர்மையும் இருக்கவேண்டும். இந்தச் சரியான வேலையை குருடர்கள் செய்யக் கூடியவகையில் ஒரு புதுவித கருவியை இப்போது அமெரிக்காவில் 'பெல்' தொலைபேசித்தொழிற்சாலை தயாரித்துள்ளது.

தொலைப்பேசி அழைப்புகள் வரும்போது சத்தம் கேட்பதோடு அதற்குரிய விசையில் ஒரு மின்வெளிச்சமும் உண்டாகும் வகையில் இணைப்புக் கருவி அமைந்திருக்கும். புதிய கருவியொன்றைக் கண்தெரியாதவர் கையில் வைத்துக்கொண்டு இணைப்புக் கருவியின் விசைகளைத் தடவும்போது எரியும் மின் விளக்கைத் தொட்டவுடன் காதிலுள்ள கேட்கும் கருவியில் ஒலி உண்டாகும். உடனே குருடர் அந்த விசையை முடுக்கிவிட்டு அழைப்புக்குப் பதில் கொடுக்க முடியும். இந்த வகையிலேயே உட்பக்க அழைப்புகளையும் கேட்டு உடனுக்குடன் தொடர்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கும் வேலையைக் குருடர்கள் எளிதாகச் செய்ய முடியும்.

இனிமேல் குருடர்கள் வீடுகளிலும், மடங்களிலும் முடங்கிக் கிடக்க வேண்டியதில்லை. அவர்கள் தான் தொலைபேசி இணைப்புக் கருவியை இயக்குவதில் தேர்ச்சி பெற்று பெரிய பெரிய நிறுவனங்களில் பணிபுரிந்து நல்ல சம்பளம் பெறும் வாய்ப்புக் கிடைக்கப் போகிறதே.

# உலக சனாதிபதிகள்

| | | |
|---|---|---|
| அமெரிக்கா | — | லின்சன் யோன்சன் |
| இந்தியா | — | டாக்டர். ராதாகிருஷ்ணன் |
| இந்தோனேசியா | — | சுகார்னோ |
| ஐக்கிய அரபுக் குடியரசு | — | நாசர் |
| கானா | — | என்குருமா |
| செக்கோசுலேவேகியா | — | டிட்டோவ் |
| பாகிஸ்தான் | — | அயூப்கான் |
| பிரெஞ்சு | — | சார்ல்சு டிகால் |
| சைப்பிரசு | — | மக்காரியோக |
| இசுரவேல் | — | சலமான் சாசார் |

# உலக பிரதமர்கள்

| | | |
|---|---|---|
| இந்தியா | — | லால்பகதூர் சாத்திரி |
| இலங்கை | — | டட்லி சேனநாயக்கா |
| இசுரவேல் | — | லெவீ எசுகோல் |
| உருசியா | — | கொசிசின் |
| சீனா | — | சூயென்லாய் |
| பிரிட்டின் | — | கரோல்டு வில்சன் |
| மலாயா | — | துங்கு அப்துல் ரகுமான் |
| ரொடீசியா | — | அயன் சுமித் |
| அவுஸ்திரேலியா | — | ரொபர்ட் மென்டிசு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல தமிழ்ப் படம் என்று நாடு போற்றுகின்றது!

தெய்வீக காவியமான இராமாயணத்தின் இனிமை சொட்டும் எழில் ஏடு-லவகுசா

## இதோ உங்களை 2வது வாரமாக மகிழ்விக்கிறது-

கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு)
விஜிதா (அட்டன்)




என். டி. ராமராவ
ஜெமினி கணேசன்,
எம். ஆர். ராதா,
நாகையா,
அஞ்சலிதேவி,
மனோரமா,
கண்ணாம்பா.
பேபி உமா, முரளி
நடித்தது.




வசனம்: புலவர் ஏ. கே. வேலன்
இசை: கே. வி. மகாதேவன், கண்டசாலா
டைரக்ஷன்: சி. புல்லையா, ராவ்

---



## வேது வெற்றி வாரம்!

### செல்லமகால்

மற்றும் 9 திரைகளில்

எம். ஜி. ராமச்சந்திரன்-சரோஜாதேவி
எம். ஆர். ராதா-ராஜம்மா-அசோகன்
சின்னப்பாதேவர்-ராமசாமி
மற்றும் பலர் நடித்த





## குடும்பத் தலைவன்

---

எதிர்பாருங்கள்
சிவாஜி கணேசன், சரோஜாதேவி
மற்றும் பலர் நடித்த

## புதிய பறவை (ஈஸ்ட்மன் கலர்)

---

## இரவோடு இரவாகப் பகலோடு பகலாக

இப்பொழுது வெற்றி நடை போடும்

## 6வது மகத்தான வாரம்!



ஜெய்சங்கர்
அசோகன்
நாகேஷ்



வசந்தா
பண்டரிபாய்
ராமதாஸ்



# இரவும் பகலும்

செண்ட்ரல் (மருதானை) | ராணி (யாழ்ப்பாணம்) | ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) | ஆனந்தா (கம்பளை) | ரேயல் (வவுனியா) | மீபுர (நீர்கொழும்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில்
1965-ம் வருடம் யூலைமாதம் 4-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.